பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.


# எங்கள் தேசம்

மாதம் இரு முறை

Engal Thesam  එංගල් දේසම්

GPO/QD/21/NEWS/2016

மலர்: 15 | இதழ்: 11 | ஜூன் 01 – 14 ஹிஜ்ரி: 1437 | பக்கங்கள்: 20 | விலை: ரூபா 40.00  318











# மழை, வெள்ளம், மண்சரிவு:



## இலங்கை கற்றுக் கொள்ளும் பாடம் என்ன?



இலங்கை அண்மையில் மழை, வெள்ளம், மண்சரிவு போன்ற அனர்த்தங்களைஎதிர்கொண்டது. சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இந்நாடு எதிர்கொண்ட மிகப் பெரிய அனர்த்தம் இதுவாகும்.

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக 74 ஆயிரத்து 808 குடும்பங்களைச் சேர்ந்த 3 இலட்சத்து 15 ஆயிரத்து இரண்டு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக உயிரிழந்தவர்களின் தொகை 104 ஆக அதிகரித்துள்ளதுடன் 99 பேர் காணாமல் போயுள்ளனர். மண்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கின் காரணமாக 623 வீடுகள் முழுமையாகவும் 4,414 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இலங்கையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு ஆகிய இரு அனர்த்தங்களின் மூலம் ஆகக்குறைந்தது 1.5 அ.டொலர் தொடக்கம் 2 பில்லியன் அ.டொலர் பெறுமதியான சேதம் ஏற்பட்டுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். சுமார் 300,000 சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களை சரி செய்யப் போதுமான நிதியொதுக்கீடு இல்லையென எதிரணியினர் குற்றம் சுமத்தியுள்ளனர். இதேவேளை சீரற்ற காலநிலையால் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க 14,500 கோடி ரூபா நிதியை அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாடுகளின் நிதியுதவி மற்றும் நிவாரண உதவிகளையும் சேர்த்தால், இழப்பீடுகளை சரி செய்யப் போதுமான நிதி அரசாங்கத்திடம் உள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

→16

## வஜிர தேரரின் கருத்து:

## இன நல்லுறவுக்கு வலுச்சேர்ப்பு!



''முஸ்லிம்களைக் கண்டால் முன்பு எமது மக்களுக்கு அச்சம் ஏற்படும். அவர்கள் எமது காணிகளை அபகரித்துக் கொள்வார்கள் என்று நினைத்தோம். முஸ்லிம்கள் மனிதாபிமானம் நிறைந்தவர்கள். வெள்ள அனர்த்தத்தின்போது அதிகமான உதவிகள் விகாரைகளுக்கு பள்ளிவாசல்கள் மூலமே கிடைத்தன. பள்ளிவாசல்கள் மேலும் உருவாக்கப்படுவதற்கு முதல் சீமெந்து பையை நானே வழங்குவேன்'' என கொலன்னாவ சிடினாமலுவே வஜிர தேரர் தெரிவித்தார்.

வஜிர தேரரின் மேற்படி கருத்தானது சிங்கள முஸ்லிம் நல்லுறவில் மலர்ந்துள்ள புதிய அத்தியாயத்தை எடுத்துக் காட்டுகிறது. வெள்ள மற்றும் மண்சரிவு அனர்த்தங்களில் முஸ்லிம்கள் நடந்து கொண்ட முன்மாதிரியான நடவடிக்கைகள் மூலம் இந்த நல்லெண்ண எதிரொலிகள் நாடளாவிய ரீதியில் உருவாகியுள்ளன. சிங்கள மக்களின் உள்ளங்களில் நல்லெண்ணங்களை விதைக்க வேண்டும் என்பதற்காக முஸ்லிம்கள் இந்த நாட்டில் இவ்வாறான மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ளவில்லை. அவர்கள் முஸ்லிம்கள் என்பதற்காக இந்தப் பணிகளை மேற்கொண்டார்கள் என்பதே வலுவான உண்மையாகும்.

வஜிர தேரரின் கருத்து மிகவும் வரவேற்கக் கூடிய ஒன்றாகும். கடந்த காலங்களில் சில பௌத்த மதகுருமார்களின் இன ரீதியான செயற்பாடுகள் இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்களின் உள்ளத்தில் ஆறாத ரணங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இருந்தபோதும் இந்த நாட்டை நேசித்தவர்களாகவும் நாட்டிலுள்ள பெரும்பான்மை சமூகத்தோடு நல்லுறவை விரும்பியவர்களாகவுமே முஸ்லிம்கள் தொடர்ந்தும் செயற்பட்டார்கள்.

மிகப் பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் செயற்பட்ட ஒரு சமூகத்திற்கு இவ்வாறான நல்லெண்ணக் கருத்துக்கள் சிறந்த வெற்றியாகும். இந்த நாட்டின் நல்லிணக்கத்திற்கு எதிராக செயற்பட்ட அனைத்து பேரினவாத சக்திகளும் செல்லாக்காசாக மாறியிருப்பது காலத்தின் தண்டனையாகும். இந்த நாட்டில் வாழும் முஸ்லிம் சமூகம் சகோதர இனங்களுக்குப் போட்டியாக ஆயுதங்களையோ பொருளாதாரத்தையோ கையாள மாட்டார்கள். அதற்குப் பகரமாக நல்ல பண்பாடுகளையே எடுத்துக்காட்டுவார்கள். இதன் மூலம் சகோதர இனங்களும் பண்பாடுகளை காட்டினால் இந்த நாட்டில் நிரந்தர நல்லிணக்கம் மலரும்!

## கிழக்குக்கும் மத்திக்கும் இடையே முறுகல்?

## முதலமைச்சருக்கு முப்படைகள் அதிரடித் தடை



இலங்கை முப்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள முகாம்கள் மற்றும் நிறுவனங்களுக்குள் நுழைவதற்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட்டுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் அவர் கலந்து கொள்ளும் எந்த நிகழ்விலும் முப்படையினர் பங்கேற்பதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படைப் பேச்சாளர் அக்ரம் அலவி தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில், சம்பூர்ப் பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றில் இடம்பெற்ற வைபவத்தின்போது, கடற்படை அதிகாரியொருவரை திட்டியதையடுத்தே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் அக்ரம் அலவி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கருத்துக் கூறியுள்ளார். "கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற சம்பவம் போல் வேறு எந்த மாகாணத்திலும் நடைபெறவில்லை. அரசாங்கம் இந்த விடயத்தை சிறிதாகக் காட்டி புறந்தள்ள வேண்டாம்'' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

→16

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அரநாயக்க மண்சரிவு:

# மண்மூடிய கிராமங்களின் கண்மூடாத துயரங்கள்

ஐ.எம். இர்சாத்

பாடசாலை விட்டு மாலைநேர வகுப்புக்களை முடித்து வீடு நோக்கிச் சென்ற மாணவனுக்கு தனது குடும்பம் மீது மலை சரிந்து வீழ்ந்து மண்ணுக்கு இரையான செய்தியே கிடைத்தது. வேலை முடித்து வீடு நோக்கி வந்த கணவனுக்கு தனது மனைவி, பிள்ளைகளுக்கு என்ன நடந்ததென்றே தெரியாது. அவர்களை மண் விழுங்கியிருந்தது. இந்த ஈரமான சோகங்கள் இடம்பெற்றது அரநாயக்கவின் எலங்கபிட்டியவிலுள்ள சிறிபுற மற்றும் பல்லேபாக என்ற மலைக் கிராமங்களிலாகும்.

அண்மையில் அரநாயக்கவின் எலங்கபிட்டிய சிறிபுற மற்றும் பல்லேபாக ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற பாரிய மண்சரிவின் காரணமாக 144 பேர் காணமல் போயுள்ளதுடன் அவர்களில் 39 பேர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். இந்த மண்சரிவின் காரணமாக எலங்கபிட்டியவில் அமைந்துள்ள சிறிபுற பல்லேபாக கிராமங்கள் முழுமையாக பாதிப்புக்களுக்குள்ளாகின.

மே மாதம் 14 ஆம் திகதி முதலாவது மண்சரிவு ஹந்துல குலஸ் கப்பல என்ற பிரதேசத்திலேயே இடம்பெற்றது. இதில் எந்த இழப்பும் ஏற்படவில்லை. மே மாதம் 15 ஆம் திகதி இரண்டாவது மண்சரிவு மோராகம ரிட்டிகல என்ற பிரதேசத்தில் இடம்பெற்றது. இதில் மூன்று வீடுகள் சேதமடைந்தன. அனர்த்தம் இடம்பெறுவதற்கு முன்னர் மக்கள் தங்கள் பிரதேசங்களிலிருந்து வெளியேறியதன் காரணமாக உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. ரிட்டிகல பிரதேசத்திலிருந்து வெளியேறிய 48 பேர் மோரகம விகாரையில் தங்கவைக்கப்பட்டனர். இதன் பின்னர் மே மாதம் 17 ஆம் திகதி மாலை எலங்கப்பிட்டிய சிறிபுற பிரதேசத்தில் இடம்பெற்ற பாரிய மண்சரிவின் காரணமாக அதிகமான உயிரிழப்புக்களும் சேதங்களும் ஏற்பட்டன. இந்த பாரிய மண்சரிவின் காரணமாக சுமார் 400 ஏக்கர் பிரதேசம் சரிந்து விழுந்ததாகக் கூறப்படுகிறது.

இதே போன்று கேகாலை மாவட்டத்தின் மற்றொரு பிரதேசமான புளத் கொஹுப்பிட்டியவும் மண்சரிவின் காரணமாக பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. புளத் கொஹுப்பிட்டிய மண்சரிவில் 17 பேர் காணாமல் போயுள்ளதுடன் 5 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரநாயக்க மண்சரிவுடன் ஒப்பிடும்போது புளத் கொஹுப்பிட்டியவில் இடம்பெற்றுள்ள மண்சரிவுத் தாக்கம் குறைந்ததாகவும் சேதங்கள் குறைந்ததாகவும் காணப்படுகிறது.

அரநாயக்க பிரதேச செயலகப் பிரிவில் 61 கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன. அதன் மொத்த மக்கள் தொகை 77, 420 ஆகும். இவர்களுக்கு 69, 783 பேர் சிங்கள மக்களும் 5,832 பேர் முஸ்லிம் மக்களும் 1,880 பேர் தமிழ் மக்களும் உள்ளனர். இடம்பெற்ற அனர்த்தத்தில் குறிப்பாக 99 வீதம் சிங்கள மக்களே பாதிப்புற்றுள்ளனர். அத்துடன் நாரங்கல அம்பலகந்த பிரதேசத்திலுள்ள சில தமிழ்க் குடும்பங்கள் மண்சரிவின் காரணமாக இடம்பெயர்ந்துள்ளன. அது தவிர 7 கிராம சேவகர் பிரிவுகள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன. அவை எலங்கபிட்டிய, தெமத்கம பல்லேபாக, தெமத்கம உடபாகே, கந்துனு உடகம, கந்து மெதகம, அம்பகந்த, போடாபே ஆகிய பிரதேசங்களாகும். அதேவேளை அரநாயக்கவின் 61 கிராம சேவகர் பிரிவுகளில் 52 கிராம சேவகர் பிரிவுகள் ஏதோ ஒரு வகையில் பாதிப்புக்குட்பட்டுள்ளன.

மண்சரிவினால் நேரடியாக பாதிப்புக்குட்பட்டவர்களும் மண்சரிவு ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக வெளியேறியவர்களும் 22 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தங்கவைக்கப்பட்டுள்ளவர்கள் 1,227 குடும்பங்களைச் சேர்ந்த 3,970 பேராகும். இதில் 5 வயதுக்குட்பட்ட பெண்கள் 144 பேரும் 6-16 வயதுக்குட்பட்ட பெண்கள் 391 பேரும் ஏனைய வயதுடைய பெண்கள் 1,565 பேரும் காணப்படுகின்றனர். அதேபோல் 5 வயதுக்குட்பட்ட 172 ஆண்களும் 6-16 வயதுக்குட்பட்ட 427 ஆண்களும் ஏனைய வயதுடைய ஆண்கள் 1,952 பேரும் காணப்படுகின்றனர்.



படம்: எப்.எம். பயாஸ்

பாதிக்கப்பட்ட மக்கள் வியன் எலிய விகாரை, ஹத்கம்பல விகாரை, மொராகம்மன விகாரை, திப்பிட்டிய மல்பல விகாரை, ராஜகிரி மஹா வித்தியாலயம், ராஜகிரி ஆரம்ப பிரிவு பாடசாலை, வில்பொல அரபா வித்தியாலயம், கல்பொக்க விகாரை, வெலிமன்ன ஆரம்ப பாடசாலை, வெலிமன்ன விகாரை, திலக விகாரை, மணடி ஆரம்ப பாடசாலை, அராமா விகாரை, ராஹல வித்தியாலயம், சுமங்கல ஆரம்ப பாடசாலை, கலுகல பாடசாலை, தம்பல்கொட பாடசாலை, அரநாயக்க வைத்தியசாலை, ஹொரவசிங்கராமய, உஸாபிட்டிய கலாசார நிலையம், பாவனா மத்தியஸ்தானய, அலபலாவல விகாரை போன்ற இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிக்கரம் நீட்டியவர்கள் அனர்த்தத்துக்குள்ளான எலங்கபிட்டிய சிறிபுற பிரதேசத்திற்கு 5 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள வில்பொல, திப்பிட்டிய முஸ்லிம் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களும் வில்பொல ஜும்ஆ பள்ளிவாசலுமாகும். பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை உடனே வழங்கி அவர்களின் துயர் துடைத்து தோள் கொடுத்ததை முகாம்களில் இருக்கும் மக்கள் நன்றியோடு நினைவுகூர்ந்தனர்.

கடந்த காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்கின்ற சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சிறு கசப்புணர்வுகள் காணப்பட்டபோதிலும் தற்போது அக்கசப்புணர்வுகள் களையப்பட்டு அரநாயக்க முஸ்லிம்களை சிங்கள மக்கள் நன்றியுணர்வுடனும் நம்பிக்கையுடனும் பார்க்கின்ற சந்தர்ப்பமொன்று மலர்ந்திருக்கிறது.

மண்சரிவினால் மண்ணில் முற்றாகப் புதைந்து போன 66 வீடுகளுக்குப் பகரமாக புதிய வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கு தாங்கள் முயற்சிப்பதாகவும் இந்த முயற்சி நிறைவேறினால் அரநாயக்கவிலுள்ள சிங்கள மக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் வலுவான நல்லுறவு வளர்வதற்கு வழிகோலும் என வில்பொல, திப்பிட்டி பிரதேசத்திலுள்ள படித்த சில இளைஞர்கள் கருத்துத் தெரிவித்தனர். இந்த விடயத்தில் நாடளாவிய ரீதியில் வாழ்கின்ற முஸ்லிம்கள் வில்பொல ஜும்ஆ பள்ளிவாசலினூடாக உதவ முடியும் என அவர்கள் தெரிவித்தனர். கிடைத்திருக்கும் இந்த தருணத்தை தங்கள் அயலிலுள்ள பெரும்பான்மையாக வாழ்கின்ற சிங்கள மக்களுடன் நல்லுறவைக் கட்டியெழுப்பும் ஒரு சந்தர்ப்பமாக நோக்குகின்ற உணர்வு அப்பிரதேசத்திலுள்ள முஸ்லிம்களிடம் பொதுவாகக் காணப்படுகிறது.

அரநாயக்க பிரதேச செயலகத்தின் வேண்டுகோளுக்கமைய 22 முகாம்களிலுள்ள மக்களுக்கு வில்பொல ஜும்ஆ பள்ளிவாசலினால் ஒரு நாளைக்கு 3,000 சமைத்த உணவுப் பார்சல்கள் விநியோகிக்கப்படுகின்றன. அரநாயக்கவிலுள்ள வில்பொல, திப்பிட்டி மற்றும் தல்கஸ்பிட்டிய போன்ற முஸ்லிம் பிரதேச இளைஞர்கள் முகாம்களிலுள்ள மக்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி அவர்களுடன் இரண்டறக் கலந்து அம்மக்களது விடயங்களில் பங்கெடுப்பதை அவதானிக்க முடிந்தது.

அனர்த்தத்தின் காரணமாக பாதிப்புக்குள்ளாகி முகாம்களில் வாழ்கின்ற மக்கள் தாங்கள் எதிர்பாராத விதமாக எதிர்கொண்ட பாதிப்புக்களில் இருந்து மீளாதவர்களாகவும் மீண்டும் தமது வாழ்விடங்களுக்குச் செல்வதற்கு விருப்பமில்லாதவர்களாகவும் அச்ச உணர்வுடனுமே காணப்படுகிறார்கள். இறப்பர், தேயிலை, கராம்பு போன்ற பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு ஓரளவு வசதியாக வாழ்ந்தாலும் தாங்கள் வாழ்ந்த மண் பெறுமதியானதாக இருந்த போதிலும் தங்கள் பிள்ளைகளின் உயிரையும் அவர்களின் எதிர்காலத்தினையும் முக்கியமாகக் கருதி மீண்டும் தங்கள் வாழ்விடங்களுக்குச் செல்வதற்கு அச்சப்படுவதாகத் தெரிவித்தனர். எனவே, அரசாங்கம் இது தொடர்பாக கூடிய கவனம் செலுத்தி தாங்கள் வாழ்வதற்கான பொருத்தமான பிரதேசத்தை இனங்கண்டு விரைவில் தங்கள் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குமாறு கோருகின்றனர்.

அரநாயக்கவிற்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்ட ஜனாதிபதியும் பிரதமரும் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளைக் கேட்டறிந்து இம்மக்களை குடியமர்த்த பொருத்தமான இடத்தினைத் தெரிவு செய்யுமாறு பணிப்புரை வழங்கி இருக்கின்றனர். கடந்த காலத்தில் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் இன்னும் நிவர்த்திக்கப்படாத நிலையில் இவர்களின் வாக்குறுதிகள் காற்றோடு பறந்துவிடுமா? என்ற கேள்வி அந்த மக்களின் உள்ளங்களில் எழுந்துள்ளது.

**“ மண்சரிவினால் நேரடியாக பாதிப்புக்குட்பட்டவர்களும் மண்சரிவு ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக வெளியேறியவர்களும் 22 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தங்கவைக்கப்பட்டுள்ளவர்கள் 1,227 குடும்பங்களைச் சேர்ந்த 3,970 பேராகும். ”**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது இவ்வனர்த்தம் ஏற்பட்டதற்கான காரணங்களைக் கண்டறியும் முயற்சியும் மீண்டும் இம்மக்களை அப்பிரதேசங்களில் குடியமர்த்த முடியுமா என்ற ஆய்வுகளும் இடம்பெற்ற வண்ணமுள்ளன. இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் மற்றும் புவிச் சரிதவியல் பேராசிரியர் கபில தகநாயக்கா, அரநாயக்காவில் ஏற்பட்டது கில்லர் நிலச்சரிவு வகையைச் சார்ந்தது என்று தெரிவித்துள்ளார்.

இது சுமார் நூறு வருடங்களுக்கு ஒரு முறை குறிப்பிட்ட இடத்தில் ஏற்படும் தன்மை கொண்டது என்றும் இது பாறைகள் சிதைவடைந்து மண் உருவாகும் இயற்கைச் செயற்பாட்டின் ஒரு கட்டம் எனவும் அரநாயக்க அனர்த்தம் நடந்துள்ள இடத்தில் இதன் பிறகு சிறிய அளவிலான மண்படைகள் கழன்று விழுவதைத் தவிர வேறு அனர்த்தம் அண்மித்த காலங்களில் ஏற்படும் வாய்ப்பு விஞ்ஞான ரீதியாக இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.


அரநாயக்க சிறிபுற பிரதேசம் நூறு வருடங்களுக்கு மேல் மண்சரிவு ஒன்றைச் சந்தித்த இடமாக இருக்கும். அது பற்றி அறியாத மக்களே அங்கு போய் குடியேறியுள்ளனர். நூற்றுக்கணக்கான வருடங்களாக ஏற்பட்டு வரும் இயற்கை மாற்றங்கள் காரணமாக பாரிய கற்பாறைகளுக்கிடையே தண்ணீர் சென்று உட்பகுதியிலுள்ள பாறைகள் சிதைவடைகின்றன. பாறைகளின் சிதைவிலிருந்தே மண் உருவாகிறது. இதுதான் மண் உருவாகும் வரலாறாகும். அவ்வாறான மண்படைகளுக்குள் மேலுள்ள நீர் மீண்டும் மீண்டும் செல்வதால் அதன் கனவளவு அதிகரித்து அவ்விடம் வெடிப்படையும். அதுவே இவ்விடத்தில் ஏற்பட்டுள்ள மண்சரிவாகும்.

அப்படியாக ஏற்படும் வெடிப்பு பாரிய சத்தத்தை ஏற்படுத்துவதோடு கீழ் பகுதியில் உள்ள காய்ந்த களிமண் படலத்தில் தூசுத்துகள் ஏற்பட்டு புகை போன்று வெளிக்கிளம்பும். அவை வழிந்தோடும் நீருடன் சேர்ந்து கீழ்நோக்கி சகதியாக வரும் எனவும் அவர் தெரிவித்தார். எனவே, இது கில்லர் நிலச்சரிவு (Killer Landslide) எனப்படும். இதற்கு முன்னர் இப்படியான பாரிய நிகழ்வொன்று இலங்கையில் பதிவாகவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் ஹிமாலயா பிரதேசத்தில் இவ்வாறான நிலச்சரிவுகளை பரவலாக அவதானிக்க முடியும் எனவும் இவ்விடத்திலுள்ள மண் வளமானதாக இருப்பதால் காலப்போக்கில் மக்கள் அங்கு குடியேறுவதுடன் சுமார் 100 இற்கும் மேற்பட்ட வருடங்களின் பின் இதே இடத்தில் அதே பாதையில் மீண்டும் மண்சரிவு ஏற்படும் நிலை உண்டு என்றும், அச்சமயம் பழைய நிலைமைகளை மக்கள் அறிந்திருக்க நியாயம் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மனிதன் இயற்கையை வென்று தனக்கேற்ற வகையில் வாழ்விடங்களை அமைத்துக் கொண்டாலும் இயற்கையை மனிதனால் நிரந்தரமாக வெல்ல முடியாது என்பதற்கு இவ்வாறான அனர்த்தங்கள் சாட்சியாகும். இடம்பெற்ற அனர்த்தம் காரணமாக, உயிர்களையும் உடைமைகளையும் இழந்து சொல்லொணாத் துன்பத்தில் மிதக்கும் மக்களுக்கு ஆறுதல் கரம் நீட்டியது இந்த நாட்டில் வாழும் மனித நேயமிக்க மக்களாகும். இன, மத பேதங்களுக்கு அப்பால் இந்த நல்ல மனித நேயமிக்க பணிகள் இடம்பெற்றுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கான அரசினுடைய கடமைகளை உணர்ந்து அரசு தனது பணிகளை முன்னெடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசினைவிட அதிகமான உதவிகளை நாட்டிலுள்ள பொது மக்கள் வழங்கியுள்ளார்கள். எனவே, எஞ்சியுள்ள பணிகளையாவது அரசு சிரமேற்கொண்டு செய்ய வேண்டும். இதுவே பாதிக்கப்பட்ட மக்களின் ஆறாத ரணங்களுக்கு தற்காலிக ஒத்தடமாகும். காலம் தாழ்த்தாது இப்பணிகளை முன்னெடுப்பதே ஒரு மக்கள் அரசின் சிறந்த பணியாகும்.

# அரநாயக்க அனர்த்தம்: சில பகிர்வுகள்



**இஸட்.ஏ.எம். பைஸல்**
**அரநாயக்க பிரதேச செயலாளர்**

மே மாதம் 15 ஆம் திகதி இடம்பெற்ற மண்சரிவினால் பாதிக்கப்பட்ட 48 பேரை ஒரு விகாரையொன்றில் தங்க வைத்திருந்தோம். இந்த அனர்த்தம் தொடர்பாக மாவட்டக் காரியாலயத்தில் கூட்டமொன்று இடம்பெற்றது. அக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தபோது சிறிபுரவில் பாரிய மண்சரிவு இடம்பெற்றதாகத் தகவல் கிடைத்தது. அதனை உறுதிப்படுத்துவதற்காக அரநாயக்க பிரதேச செயலகத்தின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமை புரியும் இரங்க குசும் சிறியுடன் தொடர்பினை ஏற்படுத்தினேன். பணிநிமித்தமாக சிறிபுரத்திலேயே அன்று அவர் கடமையிலிருந்தார். பாரிய மண்சரிவு இடம்பெறுவதாகவும் உங்களுடன் பேசுகின்ற நேரத்திற்குள் ஒரு பிள்ளையையாவது காப்பாற்ற முடியும் என்று தெரிவித்து அழைப்பை துண்டித்தார். சிறிபுர பிரதேசத்தில் முதலாவதாக எனது பிரதேச செயலகத்தில் கடமை புரியும் அந்த உத்தியோகத்தரின் சடலமே கண்டெடுக்கப்பட்டது.


மொத்த இழப்புக்களை கணிப்பிடுவதற்கான ஒரு சூழ்நிலை இப்போது இல்லை. மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதிலும் முகாம்களைப் பராமரிப்பதிலுமே கூடிய கவனமெடுத்திருக்கிறோம். இழப்புக்கள் தொடர்பான கணிப்பீடுகளை மேற்கொள்வதற்கு ஒரு குழுவொன்றை நியமித்திருக்கிறோம். அவர்களாலும் பூரண தகவலைப் பெறமுடியாத ஒரு நிலையே காணப்படுகிறது. மானசீகமாக பாதிக்கப்பட்ட மக்கள் தகவல் வழங்கக் கூடிய நிலையில் இல்லை. முழுமையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இன்னும் சில வாரங்கள் செல்லும்.

அரசாங்கம் உயிழப்பு, சொத்து இழப்பு தொடர்பாக கணிப்பீடுகளை மேற்கொள்கிறது. அரசாங்கம் இவ்விடயங்களை உடனடியாக செய்து விட முடியாது. குறித்த காலப் பகுதிக்குள் இழப்புகளை கணிப்பீடு செய்து உயிரிழப்பிற்கு இவ்வளவு தொகை; வீடு இழப்பிற்கு இவ்வளவு தொகையென இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

ஜனாதிபதியும் பிரதமரும் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டுள்ளார்கள். உடனடியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான காணிகளை இனங்காணுமாறும் அக்காணிகளில் அரசாங்கம் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் என தெரிவித்துள்ளனர். அதற்கான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

மண்சரிவினால் சிங்கள மக்களே நூறு வீதம் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அம்பலகந்த கந்துன தேயிலைத் தோட்டத்தில் வாழும் தமிழ் மக்கள் சிறிது பாதிப்புகளுக்குள்ளாகி இருக்கின்றனர்.

பாதிப்புக்குள்ளான மக்களை உளவியல் ரீதியான தாக்கத்திலிருந்து மீட்பதற்காக கண்டி, கொழும்பு வைத்தியசாலைகளிலிருந்து விசேட வைத்திய அதிகாரிகள், அரசாங்க காரியாலயங்களில் கடமை புரியும் உளவள ஆலோசகர்கள், கண்டி பேராதெனிய வைத்தியசாலையிலுள்ள உளவியல் நிபுணர்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆலோசனைகளையும் சிகிச்சையினையும் வழங்குகின்றனர்.



**ஆனந்த தேரர்**
**திப்பிட்டி ராஜகிரிமல்பார விகாரை**

அரநாயக்க எலங்கப்பிட்டியவில் இடம்பெற்ற மண்சரிவினால் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இவர்கள் பாதுகாப்பாக பல இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். தற்பொழுது திப்பிட்டி ரஜமஹா விகாரையில் 102 குடும்பங்களைச் சேர்ந்த 364 பேர் இருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் உதவிகள் கிடைத்த வண்ணம் இருக்கின்றன. பௌத்தர்களும் குறிப்பாக முஸ்லிம்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் இடங்களுக்கு மீண்டும் செல்லமுடியாத நிலையில் இருக்கிறார்கள். இவர்களுக்கான சூழலை மாற்றியமைக்க பல நலன் விரும்பிகள் உதவத் தயாராக இருக்கிறார்கள். இவர்களுடன் சேர்ந்து அரசாங்கம் உதவ முன்வர வேண்டும். இந்த நேரத்தில் அரசாங்கத்திடம் கோரிக்கையொன்றை முன்வைக்க விரும்புகிறேன். பாதிக்கப்பட்ட ஏனைய இடங்களுக்கு உதவிகள் கிடைக்கப் பெறவில்லை என அறிகிறேன். பொருத்தமான வியூகமொன்றை அமைத்து அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும்.

குறிப்பாக முஸ்லிம் சகோதரர்களுக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன். அவர்கள் சம்பவம் இடம்பெற்ற தினத்திலிருந்து இன்று வரை எங்களுடன் இணைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எதிர்காலத்திலும் அவர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்.



**பர்ஸான் முஹம்மட்**
**தலைவர், வில்பொல ஜும்ஆ பள்ளிவாசல்**

சம்பவத்தை அறிந்து ஊர் மக்களும் பள்ளிவாசல் நிர்வாகத்தினரும் முதலுதவி செய்தோம். நாடளாவிய ரீதியிலுள்ள முஸ்லிம்களும் எங்களுடன் இணைந்து உதவிகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அனர்த்தம் இடம்பெற்றதிலிருந்து இன்றுவரை பாதிக்கப்பட்ட மக்களுக்காக இயங்கிக் கொண்டிருக்கிறோம். வில்பொல ஜும்ஆ பள்ளிவாசலினால் ஒரு நாளைக்கு 3 000 சமைத்த உணவுப் பார்சல்களை முகாம்களுக்கு விநியோகிக்கின்றோம். பக்கத்துக் கிராமம் என்ற வகையில் எதிர்பார்த்ததிற்கும் அப்பால் எமது பிரதேச மக்கள் உதவிகளை வழங்கி இருக்கிறார்கள். கடந்த காலங்களில் கசப்புணர்வோடு செயல்பட்ட விகாரைத் தலைவர்களான சில தேரர்கள் இன்று எங்களுடன் மிக நெருக்கமான உறவினைப் பேணிவருகின்றனர்.

அதேநேரம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது முஸ்லிம் சமூகத்தினால் வழங்கப்பட்ட ஒரு கோடி பெறுமதியான பொருட்கள் எந்த அடையாளமும் இல்லாமல் வழங்கப்பட்டுள்ளன. எனவே, வில்பொல ஜும்ஆ பள்ளிவாசலினூடக ஒருங்கமைக்கப்பட்ட வகையில் உதவிகள் வழங்கப்பட்டிருந்தால் அது முஸ்லிம்களுக்கு ஒரு நன்மதிப்பையும் பக்கத்தில் வாழ்கின்ற எமக்கு ஒரு நல்லுறவை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தையும் உருவாக்கித் தரும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.



**சமன் எதுகல சிறிபுர**
**(விவசாயி)**

இந்த நேரத்தில் எங்களுக்கு உதவி செய்தவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். இன மத பேதங்களை மறந்து எங்களுக்கு உதவினார்கள். ஒரு ஆட்டோவில் வழமைக்கு மாறாக பத்து பதினொரு பேர்களை ஏற்றிச் சென்று காப்பாற்றினார்கள். இராணுவ வீரர்கள் மிக சிரமத்திற்கு மத்தியில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டார்கள் அவர்களுக்கு நன்றி கூற வேண்டும். அதேபோல் விகாரை ஹாமதுருமார்களுக்கும் நன்றி சொல்ல வேண்டும்.

நாங்கள் உயிரழப்புக்களையும் சொத்திழப்புக்களையும் சந்தித்திருக்கிறோம். இந்நிலைமையில் இருந்து நாங்கள் மீள்வதற்கு அரசாங்கம் உதவ வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம்

மலர் : 15 இதழ் : 11 ஜூன் 01 - 14

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 689324 / 0777 412561
பெக்ஸ்: 011 2686030, 0112698771
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com

# என்ன பாடங்கள் படித்தோம்!

மிகப் பெரிய அவலத்தை ஏற்படுத்திய மழையும் வெள்ளமும் மண் சரிவும் ஓரளவு தணியத் தொடங்கியபோதும் துன்பங்கள், துயரங்கள் ஓயவில்லை. எப்போதும் போல அனர்த்தத்தின் காரண கர்த்தாக்களை ஆராய்வதில் ஊடகவியலாளர்களும் விமர்சகர்களும் ஈடுபட்டிருப்பது தெரிகிறது. கொழும்பு மாவட்டத்தில் தாழ் நிலப் பகுதியான கொலன்னாவ, வெல்லம்பிட்டி, கடுவலை பிரதேசங்களே பெரிதும் வெள்ளத்தில் மூழ்கின. கொழும்பு மாநகரத்தில் இம்முறை வழமையான சாதாரண வெள்ளப் பெருக்குக் கூட ஏற்படவில்லை. வெள்ளப் பெருக்கு ஆரம்பித்தபோதே கொழும்பில் மழையும் ஓய்ந்து விட்டது. அவ்வாறாயின், இது களனி வெளிப் பிரதேசங்களில் பெய்த மழையாலும் ஆற்றுப் படுக்கையில் களனி நீர் பாய்ந்ததாலும் ஏற்பட்டது என்பது வெளிப்படை.

வழமையாக நீரில் மூழ்கும் பிரதேசம் இம்முறை அதிகளவில் மூடப் பட்டது. கொழும்பின் உபரி நீர் வழிந்து போவதற்காக ஒதுக்கி வைக்கப் பட்டிருந்த பள்ளத்தாக்கில் படிப்படியாக வீடுகள், தொழிற்சாலைகள், பாதைகள் அமைத்ததன் விளைவாகவே இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாக பலரும் சுட்டிக் காட்டினர். வர்த்தக நகரான கொழும்பில் குடியேறும் விருப்பத்தில் தத்தமது ஊரிலுள்ள காணிகளை விற்று விட்டு வெள்ளக் காட்டில் காணிகளை வாங்கியதன் விளைவை இன்று அனுபவிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. கொழும்பு மாநகரில் காணி விலை விஷம் போல ஏறும்போது மலிவாகக் கிடைக்கும் காணிகளை வாங்கும் சந்தர்ப்பத்தில் வெள்ளம் வருவது தெரிந்திருந்தாலும் வேறு வழியில்லாமல் போய்விட்டது என்றே கூற வேண்டும்.

பல குடும்பங்கள் அகதி முகாம்களில் அல்லற்படுவது ஒரு பரிதாபகரமான நிலையாகவுள்ளது. உடமைகளை, தளபாடங்களை, வாகனங்களை மட்டுமன்றி சமையலறையின் அன்றாட உபகரணங்களையும் மீளப் பெற வேண்டிய நிலையில் இவர்கள் உள்ளனர். நாளாந்தக் கூலிக்கு வேலை செய்பவர்கள் மட்டுமன்றி அரசாங்கத்தில் அல்லது தனியார் துறையில் சாதாரண சம்பளத்துக்கு வேலை செய்பவர்கள் கூட இதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவற்றை மீளப் பெற்று அல்லது கொள்வனவு செய்து மீண்டும் வாழ்வை ஆரம்பிப்பது என்பது இலகுவான காரியமாக இருக்காது.

உதவிக் கரம் நாலா பக்கங்களில் இருந்தும் நீட்டப்பட்டாலும் அது இன்றோ நாளையோ ஓய்ந்து விடும். தன் கையே தனக்கு உதவி என்ற நிலையே யதார்த்தமானது. மண்சரிவு ஏற்பட்ட இடங்களுக்குச் சவாரி சென்ற அமைச்சர்கள், அரசியல்வாதிகள் காணி தருவேன் வீடு தருவேன் என்று வாக்குறுதிகளை அள்ளி வழங்கினர். ஆனால் இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் மீரிய பெத்த கிராமத்துக்கு இன்னும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. மாத்தளை மாவட்டத்தில் வெடிப்பு விழுந்த வீடுகளில், பயத்தின் விளிம்பில் வாழும் மக்களுக்கும் இன்னும் தீர்வு கிடைக்கவில்லை. வாக்குறுதியளிப்பதும் அதனை மறந்து விடுவதும் அரசியல்வாதிகளுக்கு கை வந்த கலை.

இன்னும் பல இடங்களில் மண் சரிவு ஆபத்துக்கள் எதிர்வு கூறப் பட்டுள்ளன. ஆயிரக் கணக்கான மக்கள் தமது சொந்தக் காணிகளுக்குப் போக முடியாத நிலையேற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. ஓரிரு மாதங்கள் அகதி முகாமில் இருந்து பார்ப்பார்கள்; காணி கிடைக்கிற அறிகுறிகள் இல்லாத போது பழைய இடத்துக்கே போய் விடுவார்கள். இது பல தடவைகள் நடந்து முடிந்த யதார்த்தங்கள். தனது நாட்டின் குடிமக்கள் பற்றி, அவர்களின் உயிர் உடமைகள் பற்றி அரசாங்கம் இதனை விட அதிக கவனம் செலுத்த வேண்டும். தேர்தல் கால வாக்குறுதிகள் போல அனர்த்த கால வாக்குறுதிகளும் அலட்சியப்படுத்தப்படக் கூடாது.

பொது மக்களுக்கும் இதில் ஒரு பாடமுள்ளது. இலட்சக்கணக்கில் விலை கொடுத்து காணி வாங்கும் போதும் அதில் தமது உழைப்பை எல்லாம் கொட்டி வீடு அமைக்கும் போதும் சற்று கவனம் தேவை. விஷேடமாக வெள்ளப் பெருக்கு, மண் சரிவு மற்றும் வேறு அனர்த்தங்களின் அளவையேனும் கவனித்து வாங்க வேண்டும் என்பது கூடவா தெரியாது. வெள்ளம் வரு முன் அணைகட்ட வேண்டும் என்பது இதனைத்தான் குறிக்கின்றதோ என்னவோ!

# அனர்த்தம் வழங்கிச் சென்ற சமூக ஒற்றுமை நீடிக்குமா?

ஐ.எம். இர்சாத்

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்றில்லாமல் அனைவரையும் பாதிப்புக்குட்படுத்தியது. அனர்த்தங்கள் இன, மத பேதம் பார்ப்பதில்லை. அதேபோன்று அனர்த்தங்களின் பின்னர் செயல்பட்ட மக்களும் அனைத்து பேதங்களுக்கும் அப்பால் செயல்பட்டதை காணக் கிடைத்தது.

இடம்பெற்ற அனர்த்தம் இந்த தேசத்திற்கு மனிதாபிமானத்தை கற்றுக் கொடுத்திருக்கிறது. இந்த நாட்டின் மனிதாபிமானத்தின் சொந்தக்காரர்கள் யார் என்பதை அடையாளப்படுத்தி இருக்கிறது. அதேவேளை இந்த நாட்டின் சுபிட்சத்திற்கு பங்கம் விளைவித்தவர்கள் மூர்ச்சையற்று செயல்படாதிருந்ததை இந்த அனர்த்தம் இனங்காட்டிக் கொடுத்திருக்கிறது. அனர்த்தங்களுக்குப் பின்னால் மறைமுகமான செய்திகள் புதைந்து கிடப்பதை மண்சரிவும் மழை வெள்ளமும் உணர்த்திவிட்டுச் சென்றுள்ளது.

போன்று இல்லாமல் கூட்டமைப்பாக செயற்படுவதற்கு ஒத்துழைப்பு நல்கியமை வரவேற்கத்தக்கது. அதே நேரம் ஒருங்கமைக்கப்பட்ட நிவாரணப் பணிகளின்போது மாலை நேரங்களில் முஸ்லிம் அரசியல் தலைமைகளும் நிவாரண ஒருங்கமைப்பு மத்திய நிலையத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்களும் தாங்கள் அன்றைய நாள் செய்த வேலைகளை பகிர்ந்து கொண்டமை எடுத்துக்காட்டான விடயங்களாகும். இந்த விடயங்கள் தொடர்ந்தேர்ச்சையாக ஒவ்வொருநாளும் நடைபெறுவதாகவும் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சில அரசியல் தலைமைகள் ஒரு நாள் விடாது சமுகமளிப்பதாக கிடைக்கும் செய்திகள் ஒரு மாற்றத்தையே காட்டுகிறது. தங்களுடைய நிகழ்ச்சி நிரல்களுக்கு மட்டும் முன்னுரிமை வழங்காமல் இவ்வாறு சமூகம் ஒற்றுமைப்பட்டிருக்கின்ற தருணத்தில் ஒத்துழைப்பு வழங்குவது நல்ல முன்மாதிரிகளாகும்.

மேற்கொள்ளப்படுகின்ற அனர்த்தங்களின்போது நிவாரணப் பணிகளில் மட்டுமில்லாது அனைத்து



இந்த நாட்டில் சோபிதக்களும் இருக்கிறார்கள்; வஜிரக்களும் இருக்கிறார்கள்; ஞானசாரக்களும் இருக்கிறார்கள். அதை உணர்ந்து செயல்பட முஸ்லிம்கள் தயாராக இருக்க வேண்டும். அதேவேளை இந்த நாட்டில் வாழுகின்ற சிங்கள மக்கள் அனைவரும் ஞானசாரக்கள் இல்லை என்பதை இந்த அனர்த்தம் பாடம் புகட்டி விட்டுச் சென்றுள்ளது. அரநாயக்க ராஜகிரி மல்பார விகாரையைச் சேர்ந்த ஆனந்த தேரர் அரநாயக்க மண்சரிவின்போது முஸ்லிம்கள் செய்த உபகாரங்களை வரவேற்றுள்ளதுடன் எதிர்காலத்திலும் முஸ்லிம் மக்கள் தங்களுடன் இணைந்து செயற்படவேண்டும் எனத் தெரிவித்துள்ளார். அதேபோன்று கொலன்னாவ வஜிர தேரர் முஸ்லிம்கள் பற்றிய நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியிருந்தார். இந்த செய்திகள் முஸ்லிம்கள் சுதந்திரத்துக்கு முன்னர் இந்நாட்டின் மன்னர்களோடு கொண்டிருந்த நல்லுறவுகளின் எச்சங்கள் என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன.

அதேவேளை கொலன்னாவ அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளில் ஒருங்கமைப்பை ஏற்படுத்தி ஆன்மிகத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் முஸ்லிம் நிறுவனங்களின் தலைவர்களும் இணைந்து பணியாற்றியது வரலாற்றின் சிறந்த பதிவாகும். முஸ்லிம் அரசியல் தலைவர்களும் முன்னர்

சமூக விடயங்களிலும் இவ்வாறான செயற்பாடுகளையே இந்த சமூகமும் மக்களும் அவாவி நிற்கின்றனர். நல்ல விடயங்கள் யார் செய்தாலும் மக்கள் வரவேற்க தயாராகவே இருக்கிறார்கள். அது எந்த திசையிலிருந்து வந்தாலும் எந்தச் சிந்தனை முகாமிலிருந்து வந்தாலும் சரியே. இந்த நாட்டின் முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு எப்போதும் திட்டிக்கொண்டே இருக்க வேண்டும் என்பது மக்களின் நிலைப்பாடுமல்ல. நல்லது செய்யும்போது தட்டிக்கொடுப்பதும் பிழை விடுகின்றபோது தட்டிக் கேட்பதும் பொதுவான நியமங்களாகும்.

எங்களைச் சுற்றிப் போடப்பட்டுள்ள, எமது கண்களுக்கு புலப்படாத முள்வேலிகளை தாண்ட வேண்டும். தடைகளைத் தாண்டியே வெற்றி இலக்கை அடைய வேண்டியுள்ளது. அதுவே வரலாறுமாகும். இந்த நாட்டில் நாங்கள் வாழ்பவர்கள் என்பதை விடுத்தும் வாழ வைப்பவர்கள் என்ற பதிவினை அண்மைக் காலமாக முஸ்லிம்கள் ஏற்படுத்தி வருகிறார்கள். கிடைத்த இந்த அடையாளத்தை பாதுகாப்பது எங்களின் முன்னிருக்கும் இமாலய பொறுப்பாகும். மீண்டுமொரு அனர்த்தம் தேவையில்லை நாங்கள் ஒன்றுபடுவதற்கு. நாம் எல்லாக் காலங்களிலும் சிறந்ததையே இந்த நாட்டிற்கு செய்ய வேண்டும். அது எமது முன்னோர் எம்மிடம் கையளித்துவிட்டுச் சென்ற பணியுமாகும்.

**எங்கள் தேசம் சந்தா விபரம்**

**உள்நாடு**
தனிப்பிரதி: 40.00
வருட சந்தா: 1440.00
ஆறு மாதங்கள்: 720.00

**வெளிநாடு**
இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்: 3840.00
மத்திய கிழக்கு நாடுகள்: 3990.00
அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4940.00
இங்கிலாந்து: 5990.00, அமெரிக்கா, கனடா: 7140.00, ஜப்பான்: 5040.00

எங்கள் தேசத்துக்கு காசுக்கட்டளை அனுப்ப விரும்புபவர்கள்: காசுக்கட்டளை பெறுவோர், Engal Thesam தபால் நிலையம் Dematagoda எனவும் குறிப்பிட்டு அனுப்பவும். முகவரி: 77, Dematagoda Road, Colombo - 09.
Account Name: SLJEI | Bank Account No: BOC 872132 | Commercial Bank: 1320009182
தொடர்புகளுக்கு: 077 2992220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அனர்த்தங்களும் முற்காப்பு நடவடிக்கைகளும்

எம்.ஏ.எம். இஸ்திகார், சிரேஷ்ட விரிவுரையாளர்,
புவியியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

பிரளயத்தைத் தொடர்ந்த பூமியின் தோற்றக் காலத்தில் புவி ஓடு திடம்பெற முன்னர் அது ஒரு நெருப்புப் பந்தாக இருந்துள்ளது. அப்போது அதன் நாலா பக்கங்களிலும் சதா எரிமலை வெடித்து லாவா தீக்குழம்பு ஓடிக்கொண்டும் ஓயாத தொடர் நில நடுக்கங்கள், பாறை-மலை உருவாக்கங்கள் மற்றும் தொடர்ச்சியான நிலச் சரிவுகள் நிகழ்ந்து கொண்டுமிருந்துள்ளது. பல மில்லியன் வருட ஓயாத அடை மழை வீழ்ச்சியானது புவி மேற்பரப்பு ஆரம்ப கால கட்டமைப்பை நிர்ணயிக்க அடிப்படையாக இருந்துள்ளது. மேற்கூறப்பட்டவை இயற்கை நிகழ்வுகளாகும். ஆனால், இதே நிகழ்வுகள் பூமியில் உயிரினங்கள்-மனிதர்களின் தோற்றப்பாட்டின் பின்னர் மிக அரிதாக, நீண்ட கால இடைவெளிக்குப் பின், ஓரிரு மிகச் சிறிய பரப்புக்களில் ஏற்பட்டாலும் உயிரிழப்புக்களுடன் பல பாரிய அழிவுகளை ஏற்படுத்துவதனால் அவை இயற்கை நிகழ்வுகளுக்குப் பதில் இயற்கை அனர்த்தங்கள் எனப்படுகின்றன.

இலங்கையில் 2016 ஆம் ஆண்டு மார்ச்-ஏப்ரல் மாதங்கள் சூரியனின் நேரடி உச்சம் உயிரினங்களையும் விவசாய நிலங்களையும் வரட்டி உலரவிட்டதற்குப் பதிலடி போல், மே மாதம் தமது வீடுகளின் கூரைகளுக்கு மூன்று-நான்கு அடி உயரத்திற்கு மேல் தோணியில் பாதுகாப்பும் ஆதரவும் தேடி விரைய வேண்டிய நிலைக்கு வெள்ளம் மூழ்கடித்தது மட்டுமல்லாது கடுகண்ணாவையில் மண் சரிவும் அரநாயகவில் சேற்றுச் சரிவும் எமது கண்களை கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கடித்து விடுகின்றது. இது 2011 ஆம் ஆண்டு பிரேஸிலில் ஏற்பட்ட சேற்று வெள்ளப் பாய்வுக்கு அடுத்த பாரிய அனர்த்தமாகும்.

காலநிலை மாற்றத்தால் பூகோள வெப்ப அதிகரிப்பு (Global Warming) அதாவது அகோர வெப்பம், சடுதியான கனத்த மழை மற்றும் அதனாலான இயற்கை அனர்த்தங்கள் (Natural Disasters) என்பன ஏற்படுகின்றன. இயற்கை அனர்த்த முகாமை (Natural Disaster Management) பற்றி, 2015 ஆம் ஆண்டின் ஐ.நா. சபையின் காலநிலை மாற்றம் பற்றிய பாரிஸ் நகர உலக காலநிலை மாநாட்டில் (COP 21-2015) முக்கியமாக கலந்துரையாடப்பட்டதுடன், இவற்றினாலான அனர்த்தத் தாக்கங்களை இலகுபடுத்தும் அணுகுமுறைகளில் மக்களை விழிப்பூட்டுதல் முக்கிய ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இயற்கை இடர்களும் அதனாலான அனர்த்தங்களும் மனிதனால் எதிர்வுகூறக் கடினமான, எதிர்பார்க்க முடியாத, தீவிர (Extreme) அசாதாரண நிகழ்வாக (Unusual event) பாரிய அளவுத் திட்டத்தைக் (Large scale) கொண்டதாக, மனிதனால் தடுக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ முடியாத இராட்சதத் தன்மை கொண்டதாக, அதிவேகமான நிகழ்வாகவும் திடீரென நிகழக் கூடியதாகவும் இருக்கும். இடர்கள் - அனர்த்தங்களில் வரட்சி, தாழ் அமுக்கம் நிலை கொண்ட தொடர்ச்சியான கனத்த மழையும் வெள்ளப் பெருக்கும் மினி சூறாவளி, இடி - மின்னல், மண்





சரிவு என்பன இலங்கையை இடைக்கிடை தாக்குகின்றன. இலங்கையை கடந்த 40 ஆண்டுகளில் தாக்கிய அனர்த்தங்களில் 1978 ஆம் ஆண்டு சூறாவளியும் 2004 ஆம் ஆண்டு சுனாமியும் 2016 ஆம் ஆண்டு வெள்ளம்-நிலச்சரிவு இரட்டை அனர்த்தமும் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தியவையாகும்.

வரட்சி அனர்த்தம்: பூமியின் வெப்ப நிலை 1880 ஆம் ஆண்டுக்குப் பின் அதிகூடிய அளவுகளில் பதியப்பட்ட ஆண்டுகளாக 1998, 2004, 2005, 2007, 2010, 2013, 2014 மற்றும் 2016 என்பன உள்ளன. அத்தோடு கடந்த 135 ஆண்டுகளில் அதிகூடிய வெப்பம் பதியப்பட்ட ஆண்டாக 2014 ஆம் ஆண்டு காணப்படுகின்றது. மேலும் 1900 முதல் 2100 ஆம் ஆண்டுகளுக்குட்பட்ட காலப்பகுதிகளில் பூகோள சராசரி மேற்பரப்பு வெப்பநிலை 10 - 70 செல்சியஸால் அதிகரிக்கலாம் என்றும் வெப்ப அதிகரிப்புக்கு பிரதான காரணம் பச்சை வீட்டு விளைவு (Green House Effect) மற்றும் அநேக கட்டிடங்கள் சீமெந்து, கண்ணாடி, அலுமினியம், பிளாஸ்டிக், எஸ்பெஸ்டோஸ் என்பனவற்றால் நிர்மாணிக்கப்படுவதுமாகும் என அறியப்பட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தளவில் வருடத்தில் மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் சூரியன் உச்சம் கொடுக்கின்றது. வெப்பத்தின் அகோரம் பருவ மழை காரணமாக செப்டெம்பர் மாதத்தில் அவ்வளவாக உணரப்படாவிட்டாலும் மார்ச் மாதத்தில் அதன் அகோரத்தை உணர முடிகின்றது. இலங்கையில் மார்ச் மாதத்தில் பருவ மழைக்கு முன்னதான முன்பருவ மழையும் மேற்காவுகை-இடி மின்னல் மழையும் கிடைக்காவிட்டால் வெப்பம் அதிகமாகவும் UVR உட்பட சூரியக் கதிர்களின் தாக்கம் ஏற்படவும் காரணமாகின்றன.

அதிகரித்த வெப்பம் காரணமாக மனிதன் விரைவாகக் களைப்படைதல், அதிகரித்த வியர்வை காரணமாக உடலில் நீர்த் தன்மை குறைவடைதல் (Dehydration) - (சிறுநீர் வழி சார்ந்த) கல் உருவாகுதல், தோல் நோய்கள் ஏற்படல், இளநரை, முடி கொட்டுதல், உயிரின உடல்களில் இனப் பெருக்க ஆற்றல் குறைவடைதல் போன்ற பாதிப்புக்கள் ஏற்படும் என்றும் நிலம் மற்றும் விவசாயப் பாதிப்புக்களுடன் 2100 ஆம் ஆண்டளவில் வருடாந்தம் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்டோர் மரணமடையலாம் என்றும் IPCC இனால் 2007 ஆம் ஆண்டு கூறப்பட்டுள்ளது.

வெப்பம்-வரட்சிக்கு ஈடுகொடுத்தல்: ஒரு நாளைக்கு போதுமான அளவு தூய நீர் மற்றும் சுகாதாரமான நீர் ஆகாரங்களை அருந்துதல், இரசாயனம் கலக்கப்படாத பழங்கள், காய்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்ளுதல், அதிக வெயில் நேரங்களில் அல்லது வெப்ப காலங்களில் (தோல் நோய்கள் வராது, உடல் வரண்டு போகாமல் இருக்க) பொருத்தமான கிறீம் வகைகளைப் பயன்படுத்துதல், அதிக வெயில் நேரங்களில் UVR காப்புக் கண்ணாடிகளைப் பயன்படுத்துதல், புதிதாக நிர்மாணிக்கும் வீடுகள், கட்டிடங்களில் சுமார் 8 முதல் 9 அடிவரை உயரமான, அகன்ற யன்னல்களை வைத்துக் கொள்ளுதல், கட்டிடங்களின் உள்பகுதி நில மட்டத்திலிருந்து ஸீலிங்/கொங்ரீட் அல்லது ஸ்லெப் வரை சுமார் 12 அடிகள் வரை உயரம் பேணுதல். வீடுகள்/கட்டிடங்களில் மின்விசிறிக்குப் பதில் முடியுமான அளவு குளிரூட்டிகளைப் பொருத்த முயற்சித்தல், வீடுகள், கட்டிடங்களைச் சுற்றி நிழல் தரும் மற்றும் பழ மரங்களையும் நீண்ட கால திட்டத்தின் கீழ் நடல், பிரதேச சிறிய மற்றும் மிகச் சிறியளவான நீர்ப்பரப்புக்களை நிரப்பாது, தூய்மை கெடாது பாதுகாத்தல் என்பன முக்கியம் பெறுகின்றன.

வெள்ள அனர்த்தம்: மழைவீழ்ச்சியானது இன்று சிறிய தூறலுடன், இடைவிட்ட பல நன்மைகளை ஏற்படுத்தும் நிலைக்குப் பதிலாக ஒரு சில நாட்களுக்கு அசாதாரண, அசௌகரிய நிலையினை ஏற்படுத்தக் கூடிய தொடர்ச்சியாக இடைவிடாது இடி-மின்னல், மற்றும் வேகக் காற்றுடன் கூடிய வெள்ளத்தை ஏற்படுத்தும் கனத்த மழையாகவே (Dense, Abundant, Unusual and Continuous Rain) உள்ளது. மேலும் சக்தி வாய்ந்த இடி-மின்னல் நிகழ்வுகளும் அதனாலான தாக்கங்களும் அதிகரித்து வருகின்றன. இலங்கையில் 1947 ஆம் ஆண்டின் பின்னர் வெள்ளம் பற்றிய பதிவுகள் இடம்பெற்று வந்துள்ளன. இவ்வகையில் 1947, 1957, 1963, 1969, 1973, 1978, 1985, 1987, 1988, 1989, 1992, 2000, 2003, 2004, 2005, 2009, 2010, 2011, 2013, 2014, 2016 ஆகிய காலப்பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குகள் இலங்கையின் பல பாகங்களிலும் பாரிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

வெள்ளத் தவிர்ப்பு, பாதிப்பு தவிர்ப்புகள்: நகர நிலக் கீழ்க் கான்கள், கால்வாய்களை திண்ம குப்பைக் கழிவுகள் மற்றும் றப்பர், பிலாஸ்டிக், நிர்மாணத்துறைக் கழிவுகளால் அடைபடாது இருக்க வழிவகை செய்தல், தாழ் நில மற்றும் கரையோரப் பிரதேச மக்கள் கட்டட நிர்மாணத்தின் போது கழிவு மற்றும் கழிவு நீர் தேங்கி நிற்காத, தடைப்படாத முறையில் நிர்மாணித்துக் கொள்ள வேண்டும், வெள்ள சாத்தியப் பிரதேசம் சார்ந்து புதிய வீடுகளது நிர்மாணத்தின் போது வெள்ளத்தால் பாதிக்கப்படா வண்ணம் வீட்டின் அத்திவாரம் உயர்வானதாகவும் மாடியமைப்புடனும் அமைக்கப்பட வேண்டும்.

வெள்ளம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மின்சார பிரதான ஆளியின் இயக்கத்தை நிறுத்த வேண்டும், பெறுமதிமிக்க பத்திரங்களையும் இலத்திரனியல் பொருட்களையும் பாதுகாப்பான இடங்களில் வைக்க வேண்டும், வெள்ள அனர்த்த முதலுதவிகளுக்குரிய முன் தயார் நிலையை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். திடீரென வெள்ளம் ஏற்படுமாயின் சிறுவர்கள், வயோதிபர்கள், நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் விஷேட தேவையுடையோரை உயர் பிரதேசங்களுக்கு அனுப்பிவிட வேண்டும்.

வெள்ளத்தின்போது பாம்புகள், நாய்க்கடிகளைத் தவிர்க்க வெள்ள நீரில் நடமாடுவதைத் தவிர்க்க வேண்டும். மேலும் வேறுபட்ட இரசாயன உயிரியல் கழிவுகளை நீர்நிலைகளிலிருந்தும் கிணறுகளிலிருந்தும் சுகாதார நிறுவனங்கள் அகற்றும் வரை பயன்படுத்தாது இருக்க வேண்டும். அத்தோடு ஏற்படவிருக்கும் தொற்று நோய்கள் பற்றி அறிந்து உடனடியாக நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

➡ 17

**இடர்கள் அனர்த்தங்களில் வரட்சி, தாழ் அமுக்கம் நிலை கொண்ட தொடர்ச்சியான கனத்த மழையும் வெள்ளப் பெருக்கும் மினி சூறாவளி, இடி மின்னல், மண்சரிவு என்பன இலங்கையை இடைக்கிடை தாக்குகின்றன. இலங்கையை கடந்த 40 ஆண்டுகளில் தாக்கிய அனர்த்தங்களில் 1978 ஆம் ஆண்டு சூறாவளியும் 2004 ஆம் ஆண்டு சுனாமியும் 2016 ஆம் ஆண்டு வெள்ளம்- நிலச்சரிவு இரட்டை அனர்த்தமும் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தியவையாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்-முஸ்லிம் உறவில் விரிசலா?

# குளிர்காயக் காத்திருக்கும் சந்தர்ப்பவாதிகள்

திருமலை நவம்

''தீர்வுக்கான காலம் நெருங்கி வருகிறது. தமிழ்-முஸ்லிம் முரண்பாட்டை வளர்க்க வேண்டாம்'' என்ற காத்திரமான கருத்தொன்றைத் தெரிவித்துள்ளார் கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர். அவர் இக்கருத்தை வலியுறுத்திக் காட்டுகையில் இன்னுமொரு உபகருத்தை உதாரணத்துடன் எடுத்துக் காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் பகிரங்கமாகவே, ''இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் பொதுவானதாகவே இருக்க வேண்டும். முஸ்லிம் மக்களின் எண்ணங்கள் அபிலாஷைகள் என்பவற்றை கருத்தில் எடுக்காத தீர்வு வெற்றி பெறாது. அதே தமிழ் மக்களுக்கான தீர்வு முஸ்லிம் மக்களை அரவணைத்துச் சென்றால் மட்டுமே சாத்தியமாயிருக்கும்'' என்றும் கூறியிருக்கிறார்.

இவ்வாறான சாத்தியமான ஒரு சூழ்நிலையில் தமிழ்-முஸ்லிம் இனவொற்றுமையை சீரழிக்க சிலர் எடுக்கின்ற சதிவலையில் மக்கள் வீழ்ந்துவிடக் கூடாது எனவும் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் எச்சரித்துள்ளார்.


தமிழ்-முஸ்லிம் உறவு என்பது நேற்று இன்று உருவாகிய ஒரு பவித்திரமான பானையல்ல. வரலாற்றுத் தொங்கலிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட ஆழமும் அழகும் நிறைந்த உறவு என்பது எல்லோரும் உணர்ந்திருக்கின்ற விடயமாகும். இலங்கையின் வரலாற்றுப் பதிவுகளில் அல்லது ஓட்டத்தில் வடகிழக்கு மாகாணங்களில் முஸ்லிம் மக்கள் செறிவாகவும் கலந்தும் வாழ்வதற்கு இந்த ஆத்மார்த்தமான உறவுதான் காரணமாக இருக்கிறது. அவை கடந்த காலங்களில் ஒரு சில அரசியல் சமூக வழிகாட்டல்களினால் சீரழிந்து போனது மாத்திரமல்ல; கேள்விக்குறியாகியுள்ளது என்பது கசப்பான உண்மையாகும்.

சுதந்திரத்துக்குப் பின்னுள்ள அரசியல் போக்குகளில் முஸ்லிம் மக்கள் இருவழிப் போக்கைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். ஒரு பாதையினர் வடகிழக்குக்கு வெளியேயுள்ளவர்கள்; அவர்கள் தேசிய உறவுகளுடன் தம்மை நனைத்துக் கொண்டார்கள். எச்.எஸ். இஸ்மாயில், ஏ. சின்னலெப்பை, எம்.எஸ். காரியப்பர், எம்.எம். இப்றாஹீம், ஏ.ஆர்.ஏ.எம். அபூபக்கர், ஏ. அஸீஸ், சேர். ராஸிக் பரீத், ஐ.ஏ. காதர், எ.எம்.ஏ. அஸீஸ், அப்துல் மஜீத் போன்ற பலரை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

ஆனால், வட கிழக்குக்குள் முஸ்லிம்களின் அரசியல் போக்குகள் தமிழ்த் தலைவர்களின் அரசியல் போக்குகளுடன் உள்வாங்கப்பட்ட போக்குகளாக இருந்து வந்துள்ளது என்பதற்கு பல முஸ்லிம் அரசியல் தலைமைகளை உதாரணமாகக் கொள்ள முடியும்.

இந்த வகையில் மறைந்த தலைவர் அஷ்ரஃப் மிகவும் முன்னுதாரணமாக இருந்துள்ளார்.

இந்த உறவுகளுக்கு யாருடைய கண்பட்டதோ என்னவோ, ஈழப் போருக்குப் பின் ஏதோ பல காரணங்கள் இந்த உறவுகள் உடைவதற்குப் பின்புலமாகி விட்டது. குறிப்பாக சொல்லப்போனால், ஈழப் போராட்டம் தொடங்கிய காலத்தில் பெருந்தொகையான முஸ்லிம் இளைஞர்கள் வடகிழக்கில் உணர்வுபூர்வமாக அதில் இணைந்து கொண்டமை மறுக்கப்பட முடியாத உண்மையாக இருந்துள்ளது.

பேரினவாதத்தின் ஊடறுப்புக்கள் ஈழப்போரின் சூத்திர மூலகங்கள் எடுத்த தவறான மதிப்பீடுகளும் முடிவுகளும் தமிழ்-முஸ்லிம் உறவுகளில் பாரிய விரிவுகளையும் வெடிப்புகளையும் உண்டுபண்ணி விட்டது என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மையே.

அந்த வடுக்களும் வரம்புகளும் இப்பொழுது கரைந்துகொண்டிருக்கும் நல்லதொரு சூழ்நிலையில் தமிழ்-முஸ்லிம் உறவுகளை மீண்டும் காத்திரமாக கட்டியெழுப்புவதற்குரிய தடைகளாகவும் சவால்களாகவும் காணப்படுபவை கண்டறியப்பட்டு பரிகாரம் காணப்படவேண்டும்; அதுவே இன்றைய தமிழ் மற்றும் முஸ்லிம் தலைமைகளின் நோக்காக இருக்க வேண்டுமென்பது தமிழ் மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கும் விடயமாகும்.

வடகிழக்கைப் பொறுத்தவரை, அதிலும் குறிப்பாக கிழக்கிலுள்ள திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் வடக்கில் மன்னார், முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களிலும் தமிழ்-முஸ்லிம் உறவுகளைப் பாதித்து நிற்கும் கூர்மைப்பட்ட பிரச்சினைகளாக பல அடிப்படைப் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.

அவற்றுள் முன்னெழுந்து நிற்பவையெனப் பார்ப்பின், காணிப் பிரச்சினை, அபிவிருத்தி, வேலைவாய்ப்பு, சமய அனுஷ்டானங்கள் என்றவகையில் பல பிரச்சினைகளும் சவால்களும் உருவாக்கப்பட்டு உறவுகளுக்கு குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைகள் சில சுயநல அரசியல் தலைமைகளால் தூண்டப்படுகின்றன என்பது வெளிப்படையான உண்மை.

யுத்தத்தின் காரணமாக இடம்பெற்ற இடம்பெயர்வுகள் இந்த இரு சமூகங்களுக்கிடையேயும் காணி, குடியிருப்பு சார்ந்த பிரச்சினைகளை உருவாக்கி விட்டிருக்கின்றன; தீர்க்கப்பட வேண்டியவையே. குறிப்பிட்டுச் சொல்லப்போனால், தமிழ் மக்களுடைய நிலங்களை முஸ்லிம் மக்கள் தமது அரசியல் பலத்தைப் பாவித்து கையகப்படுத்தி விட்டார்கள்; முஸ்லிம் மக்களின் நிலபுலங்களை தமிழ் மக்கள் போர்க்காலத்தில் கபளீகரம் செய்துவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் மாறி மாறி வீசப்படுகின்றன.

அண்மையில் திருகோணமலை மாவட்டத்தில் நல்லூர் என்ற கிராமத்திலும் உப்பாறு என்ற கிராமத்திலும் இக்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இதே போன்று மன்னாரில் பெரும்பான்மை சமூகத்தினாலும் முஸ்லிம் சமூகத்தினாலும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இவையெல்லாம் போரின் எச்ச சொச்சங்கள் என்பதைப் புரிந்து கொண்டு நெகிழ்வுத் தன்மையுடனும் விட்டுக்கொடுப்புடனும் ஒரு சமூகம் மற்ற சமூகத்தை ஆதரிக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம் என்பதை இரு சமூகங்களும் யதார்த்த பூர்வமாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

அரசியல் பலம் கொண்டு ஒரு சமூகத்தை இன்னுமொரு சமூகம் நெருக்கி விட நினைப்பதோ அல்லது இனக் குரோத மனப்பாங்கில் ஒரு சமூகம் மற்ற சமூகத்தை எதிரியாகப் பார்ப்பதையோ தவிர்த்துக் கொள்ளவேண்டிய நிலைக்கு நாம் வந்துள்ளோம் என்பதையே இன்றைய சூழல் எமக்கு உணர்த்தி நிற்கிறது. இரு சமூகங்களினுடைய வெடிப்பிலும் விரிசலிலும் பலர் குளிர்காயக் காத்திருக்கிறார்கள் என்பதை அறிவு பூர்வமாக புரிந்து கொள்ள வேண்டும்.

சில தலைமைகள் கூறுவதைப் போல் வடகிழக்கின் பிரச்சினைகள் ஏனைய பிரதேசப் பிரச்சினைகளிலிருந்து மாறுபட்டது என்பது ஒரு தெளிவான உண்மையே, வடகிழக்கு தமிழ்-முஸ்லிம் மக்களின் பூர்வீகமான தாய் மண். இம்மண்ணில் மேற்படி இரு இனங்களும் முரண்பட்டு நிற்கும் நிலையொன்று இன்னும் இன்னும் தொடருமாயின் பாலர் பாடசாலையில் படித்த அப்பம் உண்ட கதையாகவே நிலைமை ஆகிவிடும்.

கிழக்கின் முதலமைச்சர் கிழக்கில் அரசியல் அதிகாரங்கள் முஸ்லிம் சமூகத்திடமும் நிர்வாக அதிகாரங்கள் தமிழ் நிர்வாகிகளிடமும் காணப்படுகின்றன என்ற கருத்தை அண்மையில் குறிப்பிட்டிருந்தார். இக்கருத்து இன்றைய சூழலில் எந்தளவுக்கு பொருத்தமானது என்பது ஆராயப்பட வேண்டிய விடயம். இருந்த போதிலும் கிழக்கில் தமிழ் மக்களிடம் ஓர் அபிப்பிராயம் இருக்கிறது. அரசியல் அதிகாரம் காரணமாக, வேலைவாய்ப்பு, அபிவிருத்தி, வளப்பங்கீடு போன்றவற்றில் தற்பொழுது தமிழ் இளைஞர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். இதற்கு அரசியல் அதிகாரபலம் காரணம் என்று மனப்பிரமை கொண்ட நிலையில் அம்மக்கள் காணப்படுவது ஏதோ ஒரு வகையில் பேசப்பட்டு வருகிற விடயம்.

இதேவேளை, வடக்கில் முஸ்லிம் மக்களின் குடியேற்றங்களுக்கு தடையீடாக தமிழ் அரசியல் தலைமைகள் இருக்கிறார்கள்; தங்கள் குடியேற்றங்கள் மீது அக்கறை காட்டுகிறார்களில்லை என்று இன்னுமொரு வகையான பிரச்சினை பேசப்படுகிறது.

இவையெல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்க்கின்றபோது இன்னும் தேசிய அதிகாரங்களின் சூழ்ச்சி வலைக்குள் சிக்குண்டிருப்பதே இவ்வகையான பிரச்சினைகள் அனைத்திற்கும் காரணமென்பது உணரப்பட வேண்டும். இரு சமூகத்திற்குமான அரசியல் தீர்வொன்று பெறப்படுமாயின் இந்த குந்தகமான பிரச்சினைகளுக்கு எளிதான தீர்வை கண்டுவிட முடியும் என்பது எளிமையான வாய்ப்பே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு.கா. வின் உட்கட்சி முரண்பாடு: காணப்படுமா துரித உடன்பாடு



முஸ்னத் அகமது ஷரிபுத்தீன்

இலங்கை போன்ற தீவிர இன முரண்பாட்டினுள் மூழ்கிக் கிடக்கும் ஒரு தேசத்தில் சிறுபான்மையிலும் சிறுபான்மையான ஒரு சமூகத்தின் அனைத்துத் துறைசார் தனித்துவங்களையும் பாதுகாத்து கௌரவமானதொரு சமூக வாழ்வையும் பாதுகாப்பையும் அவர்களுக்கு உறுதிப்படுத்துவது என்பது அரசியல் கட்சிகள் எதிர்கொள்ளக்கூடிய சவால்களுள் மிகவும் சிக்கலானதாகும்.

எமது தேசத்தில் இனவாதத் தீ மிகவும் மோசமாகக் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் இலங்கை முஸ்லிம்கள் சார்பாக இத்தகையதொரு சவாலை ஏற்றுக்கொண்டு உருவாக்கப்பட்ட கட்சிதான் முஸ்லிம் காங்கிரஸ். பல்வேறுபட்ட தேசிய, சர்வதேச அரசியல் சூழ்நிலைகளை மு.கா. கடந்து வந்துள்ளது. இலங்கை




முஸ்லிம்களின் தனித்துவ அரசியலில் இன்றும் மு.கா.வின் ஆதிக்கமே மேலோங்கி நிற்கிறது என்பதை மறுக்க முடியாது.

உணர்வுபூர்வமான ஒரு பாரிய சமூக நிறுவனம் என்ற வகையில் உட்கட்சி முரண்பாடுகள் என்பது அரசியல் கட்சிகள் அனைத்தும் எதிர்நோக்குகின்ற பொதுவான பிரச்சினையாகும். மு.கா. மாத்திரம் அதற்கு விதிவிலக்கல்ல. ஆனால், அநாவசியமான ஒரு முரண்பாட்டை வலிந்து ஏற்படுத்திக் கொள்வது மிகவும் துரதிஷ்டவசமானதே. எந்தவோர் அரசியல் கட்சியானாலும் இத்தகைய நிலைமைகளை தவிர்த்துக் கொள்ளவில்லையென்றால் அக்கட்சியின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். இதிலும் மு.கா. மாத்திரம் விதிவிலக்காகிவிட முடியாது.

1988 மாகாண சபைத் தேர்தல்களின் ஊடாக தேசிய அரசியலில் மு.கா. பிரவேசித்தது. இணைந்த வடகிழக்கு மாகாணசபையில் 17 ஆசனங்களை வென்று பிரதான எதிர்க்கட்சியாக மு.கா. அமர்ந்தது. வடக்குக் கிழக்குக்கு வெளியே 12 ஆசனங்களையும் கைப்பற்றிக் கொண்டது. தேசிய ரீதியில் 7.56% வாக்குப் பலமுள்ள கட்சியாக இத்தேர்தலின் மூலம் மு.கா. தன்னை உத்தரவாதப்படுத்திக் கொண்டது. 1988 ஜனாதிபதித் தேர்தலில் மு.கா.வின் பேரம் பேசும் சக்தியை இது அதிகரித்தது.

1988 ஜனாதிபதித் தேர்தலின்போது மு.கா.வுக்கு பாராளுமன்றத்தில் ஒரு பிரதிநிதித்துவமேனும் இருக்கவில்லை. ஆனால், பிரதமராகவும் ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளராகவுமிருந்த ஆர். பிரேமதாசாவை ஆதரிப்பதற்கான நிபந்தனையின் பெயரில் நான்கு நாட்களில் கலையவிருந்த பாராளுமன்றத்தில் பாராளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தினையும் மாகாணசபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தினையும், அரசியலமைப்புத் திருத்தச்சட்டதினையும் நிறைவேற்றிக் கொள்ள மு.கா.வால் அன்று முடிந்திருக்கிறது. இதன் மூலம் பொதுத் தேர்தலில் 12.5% ஆக இருந்த வெட்டுப் புள்ளி 5% ஆக்கப்பட்டது. மாகாணசபைத் தேர்தல்களில் காணப்பட்ட வெட்டுப்புள்ளி இல்லாமல் செய்யப்பட்டது. விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் காணப்பட்ட வலயங்கள் ஒழிக்கபட்டன. இதனை மு.கா. வின் ஒரு வரலாற்றுச் சாதனையாக அடையாளப்படுத்துவதில் தவறில்லை.

1989 பொதுத் தேர்தலின் ஊடாகவே மு.கா. முதன் முதலாக பாராளுமன்ற அரசியலுக்குள் காலடி வைத்தது. திகாமடுள்ள, மட்டக்களப்பு, வன்னி மாவட்டங்களில் தலா ஒவ்வோர் ஆசனத்தையும் தேசியப் பட்டியல் மூலம் ஓர் ஆசனமுமாக மொத்தம் நான்கு ஆசனங்களை இத்தேர்தலில் மு.கா. கைப்பற்றியது. 1994 பொதுத் தேர்தலில் தனியாகவும் வடக்குக் கிழக்குக்கு வெளியே பொதுசன முன்னணியுடனும் இணைந்து எல்லாமாக ஒன்பது ஆசனங்களை மு.கா. கைப்பற்றியது. இதன் மூலம் இனவாத மேலாதிக்க சக்திகளால் புறக்கணிக்க முடியாதவொரு சமூகமாக இலங்கை முஸ்லிம்கள் இந்நாட்டில் தமது சமூக இருப்புக்கு பலமான ஓர் அத்திவாரத்தை இட்டனர்.

1994 மற்றும் 1999 ஜனாதிபதித் தேர்தல்களில் சந்திரிக்காவின் வெற்றிக்கு வழிவகுத்ததன் மூலம் தேசிய அரசியலைத் தீர்மானிக்கக் கூடிய ஒரு சிறுபான்மைக் கட்சியாக மு.கா. எழுச்சிபெற்று நின்றது. 2000 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தனித்தும் பொதுசன முன்னணியுடன் இணைந்தும் மு.கா. 11 ஆசனங்களை வெற்றி கொண்டது. 2000 ஆண்டு செப்டெம்பர் 16 ஆம் திகதிய ஸ்தாபகத் தலைமை மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் மறைவும் இவ் எழுச்சிக்கு காரணமானது. ஆனால், தலைமைத்துவப் போராட்டத்தால் மு.கா.வின் 11 பாராளுமன்றப் பிரதிநிதித்துவங்களில் ஏழு பேர் ஹக்கீம் தலைமையிலும் நான்கு பேர் பேரியல் அஷ்ரப்பின் தலைமையிலும் எதிர் எதிர் திசைகளில் பயணிக்கத் தொடங்கினர்.

2000 ஆம், ஆண்டு தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றத்தில் ஹக்கீம் தலைமையிலான அணி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொண்டது. 17 வது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் பின் ஜே.வி.பி. உம் அரசாங்கத்திற்கான ஆதரவை விலகிக் கொண்டமையால் போதிய பெரும்பான்மையின்றி 11 வது பாராளுமன்றத்தை சந்திரிக்கா கலைத்து 2001 ஆம் ஆண்டு 12 வது பொதுத் தேர்தலுக்கு அழைப்பு விடுத்தார். இதில் மு.கா. தனது தேர்தல் வியூகத்தின் ஊடாக 12 ஆசனங்களைக் கைப்பற்றியது. (மு.கா. 5, ஐ.தே.க. 7) மு.கா. வின் அரசியல் வரலாற்றில் உச்ச அடைவாக இதனைக் குறிப்பிட முடியும்.

முஸ்லிம் சமூகம் தமது அரசியல் அதிகாரத்தை செறிவாக்கி மு.கா.வுக்கு வழங்கியதன் மூலம் 12 வது பாராளுமன்றத்தில் 12 ஆசனங்களைப் பெற முடிந்தாலும் உட்கட்சி முரண்பா[illegible] அதாஉல்லா தலைமையில் ஐவரும் ஹக்கீம் தலைமையில் ஏழு பேருமாக இரு குழுக்களாகச் செயற்பட்டனர். மு.கா.வுக்கு உரிமைகோரி இரு குழுக்களும் நீதிமன்றம் சென்றனர். வாக்களித்த முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகள் தொடர்ந்தும் கிடப்பிலேயே போடப்பட்டன. பிரதிநிதித்துவங்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதனால் மாத்திரம் ஒரு சமூகம் விடுதலை அடைந்துவிட முடியாது என்பதற்கு மு.கா. வின் இவ்வரலாறு சிறந்த ஆதாரமாகும்.

தொடர்ந்து வந்த தேர்தல்களில் மு.கா. வின் பிரதிநிதித்துவம் படிப்படியாகக் குறைந்து திகாமடுள்ளவிலும் கண்டியிலும், ஐ.தே.க. இல் போட்டியிட்டு 4 ஆசனங்களையும் மட்டக்களப்பில் மு.கா.வின் மரச்சின்னத்தில் போட்டியிட்டு ஒரு பிரதிநிதித்துவத்தையும் ஐ.தே.க. இன் தேசியப் பட்டியல் மூலம் இரு ஆசனங்களுமாக பாராளுமன்றத்தில் 7 ஆசனங்களுடன் இருக்கிறது. மு.கா. தற்போது ஏற்பட்டுள்ள புதிய உட்கட்சி முரண்பாட்டினை ஓர் இணக்கப்பாட்டிற்குக் கொண்டுவரவில்லையென்றால் மு.கா. இன்னும் பலவீனமடையும். எதிர்காலத்தில் முஸ்லிம் அரசியல் முதன்மைத் தளத்தை இதனால் மு.கா. இழக்கவும் நேரலாம். எனவே, மு.கா. மிக நிதானமாகவும் அறிவுபூர்வமாகவும் இத்தருணத்தில் செயல்பட்டாக வேண்டும்.

மு.கா. எனும் கட்சியின் அத்திவாரம் கிழக்கு மாகாணம்தான். கிழக்கு முஸ்லிம்களால் நிராகரிக்கப்பட்டால் மு.கா.வுக்கு எதிர்காலமே கிடையாது. கடந்த தேர்தலில் கூட மு.கா.வின் தெரிவு செய்யபட்ட 5 பிரதிநிதித்துவங்களில் (திகாமடுள்ள 3 / மட்டக்களப்பு 1) நான்கினை கிழக்கு முஸ்லிம்களே வழங்கியுள்ளனர். ஆனால், மு.கா. கிழக்கு முஸ்லிம்களுக்கு அரசியல் அதிகாரத்தினை வழங்குவதில் கஞ்சத்தனம் காட்டுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஹக்கீமின் தலைமைத்துவத்தின் கீழ் இதுவரை கிழக்குக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள ஓர் அமைச்சுதானும் மு.கா. வால் வழங்கப்படாததை இக் குற்றச்சாட்டினை முன்வைப்பவர்கள் பிரதானமாக சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த பொதுத் தேர்தலில் மு.கா. எதிர்பார்த்த இலக்கினை அடையவில்லை. கிழக்கில் திருகோணமலை மாவட்டத்திலும் வடக்கில் வன்னி மாவட்டத்திலும் தனது பிரதிநிதித்துவங்களை மு.கா. இழந்தது. இதனால், தேசியப் பட்டியலிலும் ஒன்றை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை மு.கா. வுக்கு ஏற்பட்டது. மு.கா.வின் தேசியப் பட்டியல் விவகாரத்தை இது பெரும் சிக்கலுக்குள் தள்ளியது. இச் சிக்கலிலிருந்து கட்சியை இலகுவாகக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நேரத்தில் கட்சியின் யாப்பினை திருத்தி செயலாளர் நாயகத்தின் அதிகாரத்தைப் பறித்ததன் மூலம் மிக ஆபத்தான உட்கட்சி முரண்பாட்டினுள் அக்கட்சி வலிந்து திணிக்கப்பட்டிருக்கிறது.

செயலாளர் நாயகத்தின் வேலைப் பளுவினைக் குறைக்கும் நன்நோக்கிலேயே இத் திருத்தம் கொண்டு வரப்பட்டதாக கூறப்படும் நியாயம் அர்த்தமற்ற ஒன்றாகும். இந்த யாப்புத் திருத்தத்திற்கு அங்கீகாரம் வழங்கியதன் மூலம் செயலாளர் நாயகத்தின் வேலைப்பளுக்களைக் குறைப்பதில் அக்கறை காட்டிய கட்சியின் உயர்பீடமும் தேசிய மட்டத்திலான கட்சியின் பேராளர்களும் தலைமையின் வேலைப்பளுவினைக் குறைப்பதில் ஏன் பாரபட்சமாக நடந்து கொண்டன என்ற கேள்வி இங்கு பலமாக முன்வைக்கப்படுகிறது.

தேசிய, சர்வதேச அரசியல் நிலவரங்களை சரியாகப் புரிந்துகொண்டு தன்னை வாழவைக்கும் ஒரு சமூகத்தின் அபிலாஷைகளை வென்று கொடுப்பதற்கான ஓர் அரசியலை மு.கா. எதிர்காலத்தில் வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டுமானால், மிக அவசரமாக உட்கட்சி முரண்பாட்டிலிருந்து அது வெளியேறியாக வேண்டும். மாறாக, வீட்டுக்கு ஒரு மரக்கன்று வளர்ப்பதன் மூலம் கட்சியைக் காப்பாற்ற முடியும் என்பதெல்லாம் சிறுவயதில் படித்த மஹஜன முத்தா கதைகளின் முடிவினையே விளைவாகத் தரும்.

**மு.கா. தனக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பத்திலிருந்து சமூகம் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அவசரமாக வெளியேறியாக வேண்டும். இதிலும் மு.கா. தவறிழைக்குமானால் அதன் அரசியல் எதிரிகள் நிலைமையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்வர். அது மு.கா. வை எந்த அளவு பலவீனப்படுத்தும் என்பதை எதிர்காலத் தேர்தல்கள் வெளிச்சம் போட்டுக் காட்டும்.**

செயலாளர் நாயகம் தலைமைக்கு விசுவாசமாக நடந்து கொள்ளவில்லை என்று தொடங்கி இரு தரப்பினரும் நீண்டதொரு பரஸ்பர குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வந்த நிலையில், முரண்பாட்டுக்கு ஓர் இணக்கப்பாடான தீர்வினைக் காணும் நோக்கில் தலைமைக்கும் செயலாளர் நாயகத்திற்கும் இடையில் ஓர் நேரடிச் சந்திப்பு கடந்த வாரம் இடம்பெற்றது. இச் சந்திப்பில் சில உடன்பாடுகள் காணப்பட்டதாகவும் மிக விரைவில் அது உத்தியோகபூர்வமாக தலைமையால் அறிவிக்கப்படும் எனவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஆனால், அவ்வறிக்கை இது எழுதப்படும் வரை வெளியிடப்படவில்லை.

அச்சந்திப்பின்போது மு.கா. விடம் எஞ்சியுள்ள தேசியப் பட்டியலையும் ஓர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சினையும் செயலாளர் ஹசன் அலிக்கு வழங்க தலைமை குழுக்கள் தெரிவித்ததாகவும் ஆனால்,

➡ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கல்வி நிருவாக சேவை போட்டிப் பரீட்சை - 2016

தொடர் 09

இலங்கை கல்வி நிருவாக சேவை போட்டிப் பரீட்சைக்கு (திறந்த, மட்டுப்படுத்தப்பட்ட) தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்காக புத்தளம் கல்விப் பணிமனை உதவிக் கல்விப் பணிப்பாளர் முஹம்மத் அலி ஜின்னா (Naleemi, SLEAS) அவர்கள் எழுதும் கல்வி நிருவாகமும் முகாமையும் ஒப்பீட்டுக் கல்வி, கல்வியியல் தொடர்பான பொது அறிவு போன்ற பாடப்பரப்பிற்கான வழிகாட்டல் தொடர் எங்கள் தேசத்தில் பிரசுரிக்கப்படுகிறது. -ஆசிரியபீடம்-



இஸ்மாயில் முஹம்மது அலி ஜின்னாஹ் (SLEAS)
(உதவிக் கல்விப் பணிப்பாளர் – திட்டமிடல்)

*8. மீள் திட்டமிடல்*

எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றினை திட்டத்தினூடே அடையப் பெறாவிடின் அதற்காக மீள் திட்டமிடல் அவசியமானதாகும். இங்கு மூல திட்டமிடலில் உள்ள குறைகள், பலவீனங்கள் என்பவற்றை இனங்கண்டு மீள்திட்டமிடலுக்கு அல்லது புதிய திட்டமொன்றை தயார் படுத்துவதற்கு அல்லது உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வருதல் வேண்டும்.

திட்டமிடல் தோல்வியுறுவதற்கான காரணங்கள்

1. போதியளவு அறிவு பங்குபற்றுனரிடையே இல்லாமலிருத்தல்
2. தேவையான தகவல்கல் இன்மை
3. பலவீனமான எதிர்கால நோக்கினூடே பிழையான இலக்கினை தீர்மானித்தல்
4. பலவீனமான தீர்மானமெடுத்தல்
5. தேவையான ஒத்துழைப்பு பங்குபற்றுனரிடையே கிடைக்காமை
6. தேயைான வளங்கள் இல்லாமை
7. அவசர திட்டமிடல் காணப்படாமை

திட்டமிடல் வகை

(1) உபாய வழித் திட்டமிடல் (Strategic plan)

முழு நிறுவனத்தையும் உள்ளடக்கியதாக நீண்டகால மற்றும் இடைக் காலத்தினை அடிப்படையாகக் கொண்டு இது தயாரிக்கப்படுகின்றது. இத்திட்டமிடலைத் தயார் படுத்தும் பொறுப்பு நிருவாகத்தின் மேல் மட்ட முகாமையைச் சார்ந்ததாகும்.

(2) இயக்கப்பாட்டு திட்டம் (Functional plan)

இது திணைக்கள திட்டமிடல் ஆகும். நிறுவனமொன்றின் கிளையொன்றுக்கு அல்லது பிரிவு ஒன்றுக்கு இடைமட்ட முகாமையாளர் மூலம் இது தயாரிக்கப்படுகின்றது. குறுகிய கால வரையறையைக் கொண்டு இத் திட்டமிடல் தயார் செய்யப்படுகின்றது.

(3) அமுலாக்கல் திட்டம் (Action plan)

அமுலாக்கல் திட்டம் என்பது ஏதாவது ஒரு நோக்கினை அடைந்து கொள்வதற்காக அதற்குரிய செயற்பாடுகள், பொறுப்புக்கள், மேற்பார்வை மதிப்பீடு என்பவற்றுடன் கால வரையறையை உள்ளடக்கி தயார்படுத்துதலாகும். இவ்வாறான திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கும் இலக்கினை அடையப் பெறுவதை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும்.

ஒழுங்கமைப்பு (Organizing)

முகாமைத்துவ செயற்பாட்டின் முதல் படிமுறையான திட்டமிடல் மூலம் தீர்மானித்த நோக்கத்தினை அடையப்பெற ஒழுங்கமைத்தல் இன்றியமையாததாகும். நோக்கினை அடைந்து கொள்வதற்காக சிறந்த மனிதவளப் பிரயோகம், தனி நபர் கருத்து அல்லது குழுக்களுக்குரிய பணிகள் மற்றும் வேலைப் பகிர்வு மற்றும் மனித வள இணைப்பாக்கம் ஒழுங்கமைப்பு என வரையறை செய்யப்படுகிறது. வேலைப் பகிர்வின் போது தனியாள் திறமைகள் பற்றி கவனம் செலுத்தல் வேண்டும். இங்கு தனிநபருடைய அறிவு, திறன் என்பவற்றில் இருந்து அதிகபட்ச பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்ளவும் அவர்களினுள் சிறப்புத் தேர்ச்சி ஏற்படும் வகையிலும் வேலைப் பகிர்வு இடம்பெறுவது இன்றியமையாததாகும்.

சம்பவ கற்கையின் போது ஒழுங்கமைப்பு தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். நோக்கங்கள் அடையப்பெற பொருத்தமான பணிகள், செயற்பாடுகள் ஒழுங்கு முறையாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதா? வேலைப் பகிர்வு சிறப்பாக நடைபெற்றுள்ளதா? மனித வள உபயோகம் தேர்ச்சி ஏற்படுமாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதா? இல்லையெனில், அதனூடே பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளதா? போன்ற விடயங்கள் பற்றி கவனம் செலுத்துதல் வேண்டும். பிரச்சினைகளுக்கான சிறந்த மாற்றுவழித் தீர்வு தோற்றம் பெறுவது பகுப்பாய்வினூடே ஆகும்.

ஒழுங்கமைப்பு செய்வதினூடாக அமையப்பெற்றுள்ள ஒழுங்கமைப்பின் தன்மை மற்றும் தொடர்பு வலைப்பின்னலை அறிந்து கொள்வதும் சம்பவக் கற்கையில் இடம் பெறல் வேண்டும். ஒழுங்கமைப்பு என்பதன் மூலம் கருதப்படுவது நிச்சயிக்கப்பட்ட நோக்கத்தினை அடைந்து கொள்ள தனி நபர்களின் ஒன்று சேர்வு ஆகும். ஒழுங்கமைப்பு கட்டமைப்பினூடே மேல்மட்ட முகாமைத்துவம், இடைமட்ட முகாமைத்துவம் மற்றும் பல்வேறு செயற்பாடுகளுக்கு தொடர்புடைய உதவிப் பணிக்குழு என்பவற்றையும் அறிந்து கொள்ள முடியும்.

சம்பவக் கற்கையின் போது ஒழுங்கமைப்பு தொடர்பான விபரம் குறிப்பிடப்படின் அதனூடே ஒழுங்கமைப்பு அட்டவணையை அமைத்தல் பகுப்பாய்வுக்கு மிகவும் உதவியாக அமையும். ஒழுங்கமைப்பு அட்டவணை தயார் படுத்துவதினூடே கட்டளை ஒருமைப்பாடு, கட்டளைச் சங்கிலித் தொடர், தொடர்பாடல் செயன்முறை, இணைப்பாக்கம், அதிகாரம் மற்றும் வேலைப்பகிர்வு எவ்வாறு போன்ற காரணிகள் பலவற்றில் கவனத்தைச் செலுத்த முடியும்.

முறைசாரா ஒழுங்கமைப்பு

முறைசார் ஒழுங்கமைப்பு ஒன்றின் பல்வேறு பதவி நிலைகளில் உள்ள பணிக் குழுவில் தனியாள் தொடர்பாடல் ஊடே தோற்றம் பெறும் ஒழுங்கமைப்பினை முறைசாரா ஒழுங்கமைப்பு எனலாம். இது தனிப்பட்ட தொடர்பு, இனம், மதம், பிரதேசம், கட்சி போன்ற பல்வேறு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெறலாம். முகாமையாளர்-முகாமையாளருக்கிடையே, முகாமையாளர்-உதவியாளருக்கிடையே, உதவியாள்-உதவியாளருக்கிடையே என பல்வேறு வகையான முறைசாரா ஒழுங்கமைப்புகள் தோற்றம் பெறலாம். அதனை ஒழுங்கமைப்பு அட்டவணையூடே இனங்காண முடியாது.

இவ்வாறான முறைசாரா ஒழுங்கமைப்பு நிறுவனத்தின் செயற்பாட்டில் பல்வேறு பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சம்பவக் கற்கையின் போது முறைசாரா ஒழுங்கமைப்பினூடே முறைசார் ஒழுங்கமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள தாக்கங்கள் மற்றும் சாதக பாதக விளைவுகள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கும் பாதகமான நிலைமைகள் காணப்படுமாயின் அதற்கான தீர்வு என்ன என்பது தொடர்பான ஆலோசனைகளை முன்வைப்பதற்கும் முறைசாரா ஒழுங்கமைப்பு தொடர்பான தெளிவு உதவியாக அமையும்.

3. இயக்குதல் (Directing)

இயக்குதல் என்பது மானிட மற்றும் பௌதிக வளங்களை எதிர்பார்க்கும் இலக்கினை அடைந்து கொள்வதற்காக தலைமைத்துவத்தினை, ஊக்கலினை வழங்கும் செயன்முறையாகும். வினைதிறன் மிக்க இயக்கப்பாடு தொடர்பாக பூரணப்படுத்தப்பட வேண்டிய மூன்று அம்சங்கள் காணப்படுகின்றன.

- தலைமைத்துவம்
- ஊக்கமளித்தல்
- தொடர்பாடல்

தலைமைத்துவம் என்பது நிறுவன நோக்கினை அடைந்து கொள்வதற்காக சம்பந்தப்பட்ட பணிக்குழுவின் பங்குபற்றலை சுய விருப்பத்துடன் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்கும் சமுதாய தாக்கச் செயற்பாடு ஆகும். ஊக்கல் என்பது ஏதாவது ஒரு பணியை நிறைவேற்றிக் கொள்ள சுய விருப்பத்துடன் ஈடுபடவைப்பதற்கான உள ரீதியான செயற்பாடு ஆகும். இயக்குபவர்கள் நிதிசார் மற்றும் நிதிசாரா ஊக்கல் முறையினை தனது பணிக்குழுவின் வினைதிறனை பெற பயன்படுத்தல் வேண்டும். கவர்ச்சியான சம்பளம், இதர ஊக்குவிப்புக்கள், வரவேற்பு, மதிப்பீடு, அணி உருவாக்க செயற்பாடு தனியாள் தொடர்பினை பேணல் போன்ற முறைகளின் மூலம் நிதி சாரா ஊக்குவிப்புக்களை வழங்க முடியும்.

இயக்குவதில் தனிநபர் தொடர்பினை நடத்திச் செல்லல், ஆலோசனை வழிகாட்டல் வழங்கல், கட்டளையிடல், பிரச்சினை மற்றும் சிக்கல்களுக்கு தீர்வினை வழங்கல், மனக் குறைகளுக்கு செவிமடுத்தல், தீர்மானங்களை அறிவிக்கும் போது தொடர்பாடல் எனும் தகவல் பரிமாற்றல் போன்றன அவசியமானதாகும். இவ்வாறான தகவல் பரிமாற்றம் வாய் மூலமல்லாத முறையிலும் இடம் பெறும்.

சம்பவக் கற்கையின்போது சந்திக்கும் இயக்குதல் தொடர்பான செயற்பாட்டினை மதிப்பிடுவதற்காக மேற் சொன்னவற்றை எடுகோளாகப் பயன்படுத்த முடியும்.

கட்டுப்படுத்தல் (Contrling)

கட்டுப்படுத்தல் என்பது ஏதாவதென்றை எதிர்பார்த்த நிலைமையில் தக்கவைத்தல் ஆகும். நிறுவனத்தில் மனித மற்றும் பௌதிக வளங்களைக் [illegible] படும் செயற்பாடு அல்லது பணிகள் தொடர்பாக பலம், பலவீனம், குறைபாடு ஆகியவற்றை இனங்கண்டு அவற்றினை அபிவிருத்தி செய்வதற்கான தகவல்களை சேகரித்தல், மதிப்பீடு, ஒப்பிடல் மூலம் தேவையான பதிலீடுகளை மேற் கொள்ளல் கட்டுப்படுத்தலாகும். ஊழல் போன்றவற்றினை குறைப்பதற்கும் எதிர்பார்க்கும் நோக்கினை உரிய மட்டத்தில் உரிய காலத்தில் அடையப் பெறுதலும் எதிர் பார்க்கப்படுகின்றது. கட்டுப்படுத்தல் செயற்பாட்டில் மூன்று சந்தர்ப்பங்களில் அதாவது உள்ளீடு, செயற்பாடு, வெளியீடு ஆகியவற்றில் தொடர்புபடுத்தி நடத்திச் செல்ல முடியும்.

கட்டுப்படுத்தல் செயற்பாட்டின் படிமுறைகள்

1. தரங்களை தீர்மானித்துக் கொள்ளல்
2. அடைவு மட்ட அளவீடு
3. தரங்களுடன் அடைவு மட்டத்தினை ஒப்பிடல்
4. சரிப்படுத்தல் மற்றும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

கட்டுப்படுத்தலுக்காக பயன்படுத்தக் கூடிய உபாய வழிகள்

01. உள்ளீட்டு கட்டுப்படுத்தல் முறை

1- பணியாட்களை சேர்க்கும் போது மற்றும் தெரிவு செய்யும் போது தரத்திற்கு ஏற்ப தெரிவு செய்தல்.

2- உபகரணங்கள் மற்றும் வளங்கலைப் பெற்றுக் கொள்ளும் போது உரிய தரத்தைப் பேணல்.

3- வரவு-செலவுத் திட்டத்தில் பொருத்தமான தரத்தினைப் பேணல்.

02.செயற்பாட்டில் பயன்படுத்தும் கட்டுப்படுத்தல் முறை

1-வெளிக்கணக்காய்வு உத்தியோகத்தர்கள் மூலம் -கணக்கு வைத்தல் முறை தொடர்பாக.

2- உள்ளகக் கணக்காய்வு பகுதி மூலம் -நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக

3- நேரடிக் கட்டுப்படுத்தல் முறை மூலம் - முகாமையாளர்களுக்கு, மேற்பார்வையாளர்களுக்கு நேருக்கு நேர் செய்யும் கட்டுப்பாடு, மேற்பார்வை

(2) வெளியீட்டு கட்டுப்படுத்தல் முறை

I. நிறுவனத்தின், அங்குள்ள பிரிவுகளில், குழுக்களில் மற்றும் பணியாட்களின் வெளியீடு எதிர்பார்த்த இலக்கிற்கு அமைவான அளவிடல்

II. தரக் கட்டுப்பாடு- எதிர்பார்த்த அளவு உற்பத்தி மற்றும் சேவை நடைபெற்றுள்ளதா என பரீட்சிப்பது இந்த செயற்பாட்டில் நடைபெறும்.

III. இலக்கு மட்ட முகாமைத்துவத்தினுடாக நிறுவனத்தின் எல்லோரும் எதிர்பார்த்த இலக்கினை அடைவதற்கு ஒன்றிணைந்து அண்மித்துள்ளார்களா, இல்லையா என்பது பற்றி பரீட்சித்தல்.

முகாமைத்துவ செயற்பாட்டில் இறுதிப் படிமுறையான கட்டுப்படுத்தல் சம்பவக் கற்கையில் நீங்கள் சந்திக்கும் பிரச்சினை, பிரச்சினை ஏற்பட ஏதுவான காரணிகள் என்பவற்றை தேடுவதற்கு உதவியாக அமையும். ஏதாவது சம்பவத்திற்குப் பொருத்தமான கட்டுப்படுத்தல் செயன்முறை தொடர்பாக தேடிப்பார்த்தல், அதன் வெற்றி தோல்வி தொடர்பாக மதிப்பீடு செய்தல் மற்றும் தேவையான பின்னூட்டல்களை வழங்கல் போன்றவற்றுக்கு மேற் கூறப்பட்டவையை அளவுகோலாகப் பயன்படுத்த முடியும். சம்பவக் கற்கையில் உமக்குக் கிடைக்கும் சம்பவங்கள் முகாமைத்துவ செயற்பாட்டின் எல்லாப் படிமுறை தொடர்பான பிரச்சினை அல்லது சிக்கல் வரும் என எதிர்பார்க்க முடியாது. எனினும், செயற்பாடடின் தன்மை மற்றும் முக்கியத்துவம் தொடர்பாக நீங்கள் அறிந்திருப்பது சம்பவம் எந்தக் கோணத்தில் வழங்கப்படினும் அவைகளை மிகச் சரியான முறையில் உள்வாங்கவும் அறிவார்ந்து விளக்கமளிக்கவும் உதவியாக அமையும்.

மானிட வள முகாமைத்துவம்

மானிட வள தற்காலத்தில் நிறுவனமொன்றின் மிக முக்கிய வளமாக கருதப்படுகின்றது. ஏனைய நிதி, பௌதீக, தகவல் தொழிநுட்பம் போன்ற எல்லா வளங்களையும் உயிரோட்டமுடையதாய் செயற்படவைப்பது மானிடவளத்தின் பங்கேற்பினாலேயே ஆகும். நிறுவனமொன்றின் மேல்மட்ட, இடைமட்ட, முன்வரிசை முகாமையாளர்கள் மற்றும் பணியாட்குழு ஆகிய மானிடவளத்தின் அனைத்து தரங்களில் உல்லோரும் நிறுவன செயற்பாட்டினை செயற்படுத்த மிகவும் இன்றியமையாத காரணியாக இருப்பதனை கண்டு கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் மண்சரிவு: வருமுன் காக்கும் நடவடிக்கையே அவசியம்!

**சுனாமி** அலைகள் 2004 டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்படுத்திய மனிதப் பேரவலத்தின் பின்னர் இன்று இலங்கை மீண்டும் ஒரு இயற்கை சீற்றத்தைச் சந்தித்திருக்கிறது. இடையே, மனிதன் உருவாக்கிய மனிதப் பேரவலம் 2009 ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலத்தில் அரங்கேற்றப்பட்டதையும் நாம் இங்கே மறந்துவிடலாகாது.

சனிக்கிழமை 14 ஆம் திகதி இரவு ஆரம்பித்த அந்த மழை ஞாயிறு முழு நாளும் தொடர்ந்து திங்கள் முழு தினமும் இடைவிடாமல் கொட்டித் தீர்த்ததையடுத்து, தாழ் நிலப்பரப்புகளில் வெள்ளம் பெருக்கெடுத்தோட அடுத்தடுத்து மண்சரிவுகள் ஏற்பட்டன. இன்று நான்கு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் மழை, வெள்ளம், மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 95 பேருக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். 150 பேர்வரைகாணாமற் போயுள்ளனர். இந்தத் தகவல்கள் அனைத்தும் இக்கட்டுரையை வாசிக்கும்போது மாறியிருக்கலாம். ஏற்கனவே மண்சரிவு நிகழக்கூடிய இடங்களாக அறிவிக்கப்பட்ட பிரதேசங்களில் மேலும் மண்சரிவுகள் நிகழக்கூடிய வாய்ப்பு இருக்கவே செய்கிறது. ஏனெனில், தற்போது பருவ மழை தொடங்கியிருப்பதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

மீரிய பெத்தவில் 2014 ஆம் ஆண்டு நிகழ்ந்ததைப் போலவே கிராமங்களை மூழ்கடிக்கும் பெரும் மண்சரிவு புலத்கோபிட்டியவிலும் அரநாயக்கவிலும் நிகழ்ந்திருக்கிறது. இதுபோன்ற மண்சரிவுகள் இரத்தினபுரி, நுவரெலியா, கேகாலை, யட்டியாந்தொட்டை, கண்டி, பதுளை போன்ற பகுதிகளின் மலைப்பாங்கான இடங்களில் நிகழலாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்

-மலைஞானி

கிறது. அரநாயக்க, புலத்கோபிட்டிய ஆகிய இடங்களும் எச்சரிக்கை விடுக்கப்பட்ட இடங்கள்தான். அரநாயக்கவில் நூறு வருடங்களுக்கு முன்னரும் மண்சரிவு ஏற்பட்டிருக்கலாம் என்றும் இப்படி ஒரு நீண்ட காலப் பகுதியில் மண்சரிவு ஏற்படுவது இயற்கைதான் எனவும் விஞ்ஞான ரீதியான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. நூறு ஆண்டுகளுக்கு முன் அரநாயக்க பகுதியில் மண்சரிவு ஏற்பட்டு குடியிருப்புக்கு பொருத்தமான இடம் அல்ல என பரிந்துரைக்கப்பட்டிருக்கலாம் எனவும், காலம் செல்லச் செல்ல அது மறக்கப்பட்டு மக்கள் அவ்விடங்களில் குடியேறியிருக்கலாம் என்றும் புவிச் சரிதவியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

இது இப்படியிருக்க, களனி ஆறு சீற்றமடைந்ததையடுத்து கொழும்பின் தாழ்நிலப் பகுதிகளான வெல்லம்பிட்டிய, ஒருகொடவத்த, சேதவத்த, கடுவெல, ஹங்வெல்ல ஆகிய பிரதேசங்கள் தண்ணீரில் மூழ்கின. ஐந்து நாட்களுக்கும் மேலாக இங்கே தண்ணீர் ஆக்ரோஷத்துடன் நின்றிருந்தது. 25 ஆம் திகதியான போதும் கூட குடியிருப்புப் பகுதிகளில் தேங்கியிருக்கும் நீர் வடிந்தபாடாக இல்லை. குடியிருப்புப் பகுதிகளில் பல பிரச்சினைகள் உள்ளன. சுகாதாரம், தொற்று நோய், வாழ்வாதாரம், இழப்பீடு, கழிவகற்றல் எனப் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

கொழும்பு தாழ்ந்த நிலப் பகுதிகளிலும் கொழும்பு தோட்டங்களிலும் வாழ்வோரில் கணிசமானோர் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் என்பதையும் நாம் இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்டவர்களை இன ரீதியாகப் பிரித்துப் பார்ப்பது தவறானாலும் பகுப்பாய்வில் இத்தகவல்கள் முக்கியமானவை. ஆனாலும் பாதிக்கப்பட்டவர்களை பாதிக்கப்பட்டவர்களாக மட்டுமே பார்த்து உதவுவதே சரியானது. ஆனால், சிறுபான்மை சமூகங்கள் போதுமான கரிசனையுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுகின்றதா என்பது சரியாகத் தெரியவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் உதவுவோம் என்பதே சரியான இலக்காக இருக்கும். அதேசமயம், எந்தவொரு பாதிக்கப்பட்ட பகுதியேனும் ஏதோ காரணத்தினால் குறைவான உதவிகளைப் பெறுகிறது என்றால் அப்பகுதியை நோக்கி உதவும் கரங்கள் நீள வேண்டிய அவசியம் உள்ளது.

இந்த மண்சரிவுகள் பெரும்பாலும் பெருந்தோட்டங்கள் அமைந்துள்ள பகுதிகளிலேயே இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இப்பகுதிகளில் மலையகத் தமிழர்கள் வாழ்கிறார்கள். மண்சரிவுகள், வீடுகள் தீப்பிடித்தல் என அடிக்கடி இம்மக்கள் இடர்களுக்கு ஆளாவதையும் உடனடி நிவாரணங்கள் வழங்கப்பட்டாலும் அதன் பின்னர் தூர நோக்கு நடவடிக்கைகள் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்றால் பெரும்பாலும் இல்லை என்பதே பலரும் சொல்லும் பதிலாக இருக்கிறது.

மீரியபெத்த சம்பவம் இதற்கான சமீபத்திய உதாரணம். மண்சரிவு நிகழ்ந்து இரண்டு வருடங்களாகப் போகிறது. ஆனால், வீடிழந்த மக்களுக்கு இன்னும் புதிய வீடுகள் வழங்கப்படவில்லை. தற்போது 40 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருப்பதாக சமீபத்தில் செய்தி ஒன்று வெளியாகி இருக்கிறது. ஆனால், எப்போது பாதிக்கப்பட்டவர்கள் கிரகப் பிரவேசம் செய்வார்கள் என்பது இன்னும் யாருக்கும் தெரியாது. இதில் சில பிரச்சினைகள் காணப்படுவதாகவும் கால தாமதம் செய்யப்படுவதில் இனவாதம் இருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன.

தோட்டக் குடியிருப்புகளை கிராமங்களாக மாற்றுவதற்கென ஓர் அமைச்சை பழனி திகாம்பரத்திடம் ஒப்படைத்த அரசாங்கம், கூடவே தோட்ட வீடமைப்பு என்றோர் அமைச்சையும் உருவாக்கி அவரிடம் தந்திருக்கலாம். மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு என்று அழைக்கப்படும் இந்த அமைச்சில், வீடமைப்பையும் சேர்த்திருந்தால் இக்கால தாமதங்களைத் தவிர்த்திருக்க முடியும். மீரிய பெத்தையில் ஏற்பட்டுவரும் தாமதம் திகாம்பரத்துக்கு பெருத்த சங்கடத்தை ஏற்படுத்தியிருப்பதைப் போலவே, அரசாங்கத்துக்கு கெட்ட பெயரையும் மலையக மக்கள் மத்தியில் ஏற்படுத்தி இருக்கிறது. 'தமிழர்களுக்கு என்றால் இப்படித்தான் இழுத்தடிப்பார்கள்' என்ற நினைப்பை ஏற்படுத்தி இருக்கிறது என்பதையும் குறிப்பிடத்தான் வேண்டும்.

மீரியபெத்த வீடமைப்பு திட்டம் இப்படி பல சோதனைகளைத் தாண்டி மெது நடை போட்டு வரும் இதேசமயம் தற்போது புலத்கோபிட்டிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இங்கே பாதிக்கப்பட்டு வீடிழந்த குடும்பங்களுக்கு பொருத்தமான வேறு இடமொன்றில் வீடுகள் அமைத்துத்தர வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மண்சரிவு புலத்கோபிட்டியவில் நிகழ்ந்து அனர்த்தம் ஏற்பட்டிருந்தாலும் மலையகத்தின் பல பகுதிகளில் மண்சரிவு ஏற்படலாம் என்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல குடும்பங்கள் அவர்களின் குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றப்பட்டு வேறு கட்டடங்களில் அல்லது கூடாரங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.


இக்குடும்பங்களின் எண்ணிக்கை சரிவரத் தெரியவில்லை. நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களாக இருக்க வேண்டும். மலையடிவாரங்களில் வாழ்ந்து, மலைகளிலேயே வாழ்க்கையை நடத்தி மலையக மக்களாகத் திகழ்வோர், மலைகள் சரிந்து மரணிக்கிறார்கள் என்பது கவலைக்குரியது. இம்மக்களுக்கு விடிவு வேண்டும் என வேலைத் திட்டங்கள் அறிமுகம் செய்யப்படும்போது, மண்சரிவுகள் ஏற்பட்டு பிரச்சினைகள் சிக்கலாகின்றன.

எனினும், பிரச்சினைகள் சிக்கலாகி பலரின் கவனத்தையும் கவரும் போதுதான் விடிவுக்காக பலரும் போராட முன்வருவார்கள். மேலும் இம் மண்சரிவுகள், மண்சரிவு அபாயம் என்பன காணி - வீடு பிரச்சினையை இன்னொரு பரிமாணத்துக்கு எடுத்துச் சென்றிருக்கின்றன என்பதும் கவனிக்கத்தக்கது. தோட்டக் குடியிருப்புகளும் தோட்ட மக்கள் வாழ்க்கை முறையும் கிராமமயப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் காணி உரிமையுடனான வீடுகள் பாதுகாப்பான இடங்களில் அமைக்கப்படுவதன் அவசியத்தையும் இம்மண்சரிவுகள் அடையாளம் காட்டி நிற்கின்றன. உண்மையில் இது திகாம்பரத்துக்கு சரியான வாய்ப்பு. நுவரெலிய மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலகராஜ் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு நிலைமைகளை நேரடியாக அறிந்து வருவதை இங்கே குறிப்பிட வேண்டும்.

நாம் ஏற்கனவே பார்த்ததுபோல மலையகத்துக்கான ஆணைக்குழு அமைக்கப்பட்டு அது செயல்பட ஒருவருட காலம் எடுக்கலாம். அதுவரை இம்மக்கள் பொதுக் கட்டடங்களிலும் மைதானங்களிலும்தான் நாடோடி வாழ்க்கை வாழ வேண்டுமா! என்ற கேள்வி எழுகிறது. இக்குடும்பங்களுக்கு எதன் அடிப்படையில் காணியும் வீடும் வழங்கப்படப் போகின்றன என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

தோட்ட நிர்வாகங்களிடம் வீடுகள் அமைக்க காணி கேட்டால் அவை ஒதுக்குப்புறமான, மேடான, சரிவான இடங்களில் காணி ஒதுக்குவதே வழமை. இத்தகைய மாயஜாலங்கள் நிறுத்தப்பட்டு பாதுகாப்பான இடங்களில் காணியுடனான வீடுகள் அமைக்கப்பட வேண்டிய அவசியத்தை இம்மண்சரிவுகள் எடுத்துரைப்பதாகவே நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். தொழில் மலைகளின் மீதாக இருந்தாலும் வாழும் இடங்கள் மலைச்சரிவுகளில் இல்லாமல் பாதுகாப்பான இடங்களில் அமைவது இனி உறுதி செய்யப்பட வேண்டிய ஒன்று.

➡ 14



தோட்ட நிர்வாகங்களிடம் வீடுகள் அமைக்க காணி கேட்டால் அவை ஒதுக்குப்புறமான, மேடான, சரிவான இடங்களில் காணி ஒதுக்குவதே வழமை. இத்தகைய மாயஜாலங்கள் நிறுத்தப்பட்டு பாதுகாப்பான இடங்களில் காணியுடனான வீடுகள் அமைக்கப்பட வேண்டிய அவசியத்தை இம்மண்சரிவுகள் எடுத்துரைப்பதாகவே நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். தொழில் மலைகளின் மீதாக இருந்தாலும் வாழும் இடங்கள் மலைச்சரிவுகளில் இல்லாமல் பாதுகாப்பான இடங்களில் அமைவது இனி உறுதி செய்யப்பட வேண்டிய ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொலன்னாவ வெள்ளம்: மக்கள் உடமைகளை இழந்து நிர்க்கதி

அபூ ஸீமா

மழை, வெள்ளம், மண்சரிவு என இயற்கை அனர்த்தங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று இலங்கை மக்களை கதிகலங்க வைத்தது. அரநாயக்கவில் மண்சரிவு, கொழும்பு கொலன்னாவ, வெல்லம்பிட்டி பிரதேசங்களில் வெள்ளம் என அனர்த்தம் பல்வகைகளில் மக்களுக்கு பேரழிவை ஏற்படுத்தியுள்ளது.

இவ் அனர்த்தங்கள் உயிரிழப்பையும் பாரிய சொத்து இழப்பையும் ஏற்படுத்தியுள்ளன. அரநாயக்கவில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளதுடன் அவர்களது உடமைகளும் மண்ணுக்குள் நிர்மூலமாகியுள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்கள் இன்று அகதி முகாம்களில் தமது நாட்களை இன்னல்களுடன் கடத்தி வருகின்றனர். இது போன்றதொரு பாரிய இழப்பை, அடுத்து எதிர்கொண்ட பிரதேசம்தான் கொழும்பு, கொலன்னாவை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளாகும்.

களனி ஆறு பெருக்கெடுத்ததால் கொலன்னாவ பிரதேச செயலகத் துக்குட்பட்ட வெல்லம்பிட்டி, மெகட கொலன்னாவ, வென்னவத்த, பிரண்டியாவத்த, வெலேவத்த,பொல்வத்த, சேதுவத்த ஆகிய இடங்களில் 6 முதல் 8 அடி வரை வெள்ளம் பாய்ந்தது. இதன் காரணமாக 18,756 குடும்பங்களைச் சேர்ந்த 94, 151 பேர் பாதிக்கப்பட்டதுடன் 17 அகதி முகாம்களில் இவர்கள் தஞ்சம் புகுந்தனர். இந்த வெள்ளத்தால் கொழும்பு மாவட்டத்தில் 7 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் பாரியளவு மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறாவிடினும் கொழும்பு புறநகர் பகுதிகள் நிரப்பப்பட்டு அங்கு அனுமதியற்ற வீடுகள் அமைக்கப்பட்டமையே வெள்ளப்பெருக்குக்கு பிரதான காரணமாக கூறப்படுகிறது. கொலன்னாவ, வெல்லம்பிட்டி பிரதேசங்கள் தாழ்நிலப் பகுதிகளாகும். இப்பிரதேசங்கள் வெள்ள நீர் வடிந்தோடும் இடங்களாகவே இருந்து வந்துள்ளது. அவ்விடங்களில் மக்கள் குடியேறியதன் விளைவே இந்தளவு சொத்துப் பேரழிவு இடம்பெறுவதற்கு வழிவகுத்துள்ளது.

கொலன்னாவ பிரதேச செயலகத்துக்குட்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் உருக்குலைந்து அகோரமாக காட்சியளித்தது. வீதிகளில் ஆங்காங்கே குப்பை கூளங்கள் குவிக்கப்பட்டுக் கிடந்தன. அவ்வீதிகளில் பயணிக்க முடியாதளவுக்கு குப்பைகள் தடையாக இருந்ததுடன் துர்நாற்றமும் வீசியது.

மூக்கைப் பொத்திக் கொண்டு இன்னும் கொஞ்சம் முன்னேறியபோது எம் முன் சீதவத்த சித்தார்த்த மஹா வித்தியாலயம் காட்சி தந்தது. அந்தப் பாடசாலையின் மைதானத்தில் வெள்ளநீர் வற்றிய நிலையில் கழிவுகள் தேங்கியும் முன் மதில் இடிந்து வீழ்ந்தும் காணப்பட்டது.

அதைத் தொடர்ந்து முச்சக்கர வண்டியில் ஏறி மெல்ல ஸஹாராஸ் கார்டனுக்கு நகர்ந்தோம். அங்கிருந்த ஜும்ஆ பள்ளிவாசல் மூடு விழா கண்டிருந்தது. சேறும் சகதியுமாக அதன் முற்றம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பள்ளிவாசலின் நிலை கண்டு மனக் கவலையுடன் தண்ணீர் வடிந்தோடிய சில இடங்களுக்குச் சென்றோம். போகின்ற வழியில், சவாரி செல்லும் முச்சக்கர வண்டிகள் நீண்டநாள் ஓய்வெடுத்திருப்பது போல் காட்சியளித்தது. சேற்றினால் அந்த முச்சக்கர வண்டிகள் முழாம் பூசப்பட்டிருந்ததை எம்மால் காணக் கூடியதாக இருந்தது. அந்தோ பரிதாபம்! அவர்கள் அன்றாடம் சம்பாதித்து குடும்பம் நடத்துபவர்கள் அல்லவா! முச்சக் கர வண்டிகள் இப்படிக் கிடந்தால், அவர்களது குடும்பங்களின் நிலை என்னவாகும் என்ற மனவேதனையுடன் இன்னும் கொஞ்சம் நகர்ந்தோம்.

அது கொத்தொட்டுவ என்ற இடம். அங்கு ஒருவர் தனது வீட்டிலிருந்து சில பொருட்களை கரையேற்றிக் கொண்டிருந்தார். மீன் கடையொன்றில் நாட்கூலிக்கு வேலை செய்பவரான ஆர். முகேந்திரன், "நான் இங்கு 15 வருடங்களாக வசிக் கிறேன். இதுவரைக்கும் இந்தளவு வெள்ளம் வந்ததில்லை. இந்தளவுக்கு வெள்ளம் வரும் என்று நாங்கள் எதிர்பார்க்கவுமில்லை. என்னுடைய பிள்ளைக்கு சுகமில்லாமல் போனதால் வைத்தியசாலைக்குச் சென்று மருந்தெடுத்துவிட்டு வருவதற்கிடையில்



எல்லாம் நிர்மூலமாகிவிட்டது. அரசாங்கமும் கூட இப்படி தண்ணீர் வரப்போகின்றது, எல்லோரும் எழும்பிச் செல்லுங்கள் என்று கண்டிப்பான உத்தரவு எதையும் விடுக்கவில்லை. அப்படி முன்னறிவித்தல் விடுக்கப்பட்டிருக்குமாகவிருந்தால் எமது வீட்டு உபகரணங்களையாவது பாதுகாத்திருக்க முடியும்'' என்று தெரிவித்தார்.

அவரோடு உரையாடி விட்டு இன்னும் கொஞ்சம் நகர்ந்தால், அங்கு இன்னொரு நபர் இயந்திரங்களை வெளியில் வைத்து பழுது பார்த்துக் கொண்டிருந்தார். அவர் அடையாள அட்டை கவர்களை உற்பத்தி செய்யும் சிறு தொழில் முயற்சியாளரான முஹம்மத் முர்சித். அவர் தனது மனக் குமுறலை இவ்வாறு வெளிப்படுத்தினார்:



"இந்த வெள்ளத்தால் என்னுடைய தொழில் உபகரணங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டுள்ளன. என்னுடைய தொழில் உபகரணங்களை பழுது பார்க்க பல்லாயிரக்கணக்கான ரூபா செலவு செய்ய வேண்டும். என்னைப் போன்றுதான் இந்தப் பிரதேசத்திலுள்ள அனைவரினதும் நிலைமை மோசமாகவே உள்ளது. எங்களுடைய வாழ்க்கையை மீண்டும் அடிப்படையிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களை சரியாக இனங்கண்டு அவர்களுக்கான உரிமைகளையும் சலுகைகளையும் வழங்க வேண்டும்.''

இவரைப் போன்று அந்தப் பிரதேசத்தில் பல சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் இருக்கின்றார்கள் என்பதை வீதியில் தொழில் உபகரணங்கள் சேதமடைந்து கிடந்ததையும் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உள்ளீடுகள் (Raw Meterial) நீரில் மிதந்து வீதியில் பரவிக் கிடந்ததையும் வைத்து எம்மால் ஊகிக்க முடிந்தது. அப்போது அவர்களது எதிர்காலம் வீதியில் கொட்டப்பட்டு விட்டதோ என்று எமக்கு எண்ணத் தோன்றியது. அவர்களது வாழ்வையும் தொழில் முயற்சியும் மீண்டும் ஆரம்பக் கட்டத்திலிருந்து தூக்கி நிறுத்தப் படவேண்டிய தேவையேற்பட்டுள்ளது.

இந்த அவல நிலைகளின் பார்வையோடு அப்பிரதேசத்திலுள்ள சில வீடுகளுக்குச் சென்றோம். அங்கு பலகைகளால் ஆக்கப்பட்ட வீடுகளைக் கண்டோம். அங்கே ஒரு பெண் தன் வீட்டுப் பொருட்களை சுத்தம் செய்து கொண்டிருந்தார். மல்காந்தி என அழைக்கப்படும் இவர் ஒரு குடும்பப் பெண். குருவி சேர்ப்பது போன்று தன் குடும்ப வருமானத்திற்குள் கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்த அவளது வீட்டுப் பொருட்கள் மீள எடுக்க முடியாதளவு உருக்குலைந்து விட்டன. மல்காந்தி தனது கஷ்ட நிலை குறித்து கூறுகையில், "இரவு 2 மணியளவில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தபோது திடீரென வீடு முழுக்க தண்ணீர் நிரம்பியது. எந்த ஒரு பொருளையும் எங்களால் பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை. தற்பொழுது பாடசாலையில் அகதிகளாக நிர்க்கதியாகி நிற்கிறோம். சாப்பிடுவதற்கு தாராளமாக உணவு கிடைக்கிறது. பலரும் கொண்டு வந்து தருகிறார்கள். ஆனால், வீட்டுச் சாமான்களை எப்படிப் பெற்றுக் கொள்வது என்று வழி தெரியாமல் நிற்கிறோம்'' என்று தெரிவித்தார்.



மல்காந்தியின் வீட்டுக்குப் பக்கத் தில் வசிக்கும் இன்னுமொருவர் ரஞ்சித். இவர் ஓர் ஆட்டோ சாரதி. தனது வீட்டைக் குடும்பத்துடன் துப்புரவு செய்து கொண்டிருந்தார். ரஞ்சித் மீண்டும் தனது அன்றாட வாழ்க்கையை எப்படிக் கொண்டு செல்வது என்று யோசித்துக் கொண்டிருந்தார். அவரது முச்சக்கர வண்டியும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு விட்டன. அவர் தனது நிலை பற்றி கூறுகையில், "எல்லாப் பொருட்களும் நீரில் அடித்துச் செல்லப்பட்டு விட்டது. எஞ்சிய சில பொருட்கள் கூட பாவிக்க முடியாத நிலையிலேயே காணப்படுகின்றன. அரசினால் இது வரை எந்த உதவியும் கிடைக்கப் பெறவில்லை. உணவு வகை கள் மாத்திரமே கிடைக்கின்றன. அவை கூட முஸ்லிம் சகோதரர்கள் மூலமே அதிகளவில் கிடைக்கின்றன. சமையலறை உபகரணங்கள் முதல் அனைத்துப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொருட்களும் புதிதாக வாங்க வேண்டிய நிலையிலேயே இருக்கின்றோம்'' என்று தெரிவித்தார்.

இவைகள் நாம் நேரடியாகக் கண்டும் கேட்டதுமான அவலங்கள். வெள்ளம் வடிந்தோடியதால் தற்போது பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்த வீடுகளுக்கு மீளத் திரும்பி வருகின்றனர். இந்நிலையில் வீடுகளுக்கு நேர்ந்துள்ள அவல நிலைமை இம்மக்களுக்கு கவலையையும் துயரத்தையும் ஏற்படுத்தி விடுகிறது.

இவர்களது வாகனங்கள், இயந்திரங்கள் அனைத்தும் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, வியாபார ஸ்தலங்களின் விற்பனைப் பொருட்கள் அனைத்தும் சேதமடைந்துள்ளன. மேலும் வீடுகளில் இருந்த புடவைகள் உள்ளிட்ட பாவனைப் பொருட்கள் பாவனைக்குதவாத நிலையிலேயே காணப்படுகின்றன.

இந்நிலையில் அனர்த்தங்களினால் பாதிக்கபட்ட பிரதேசங்களில் துப்புரவு செய்வதற்காக சுமார் ஆயிரம் இராணுவ வீரர்கள் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அத்தோடு தொண்டர் அமைப்புக்களும் பணியாற்றுகின்றனர். எனினும், இப்பிரதேசத்தில் துப்புரவு செய்வதற்கு ஆளணியினர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. ஏனென்றால், பாதிக்கப்பட்ட வீடுகளிலுள்ள பெரும்பாலான பொருட்களை அப்புறப்படுத்தவேண்டியுள்ளதால் அம்மக்களுக்கு தொண்டர்களின் உதவி தேவைப்படுகின்றது. இதனால் அம்மக்கள் தொண்டு நிறுவனங்களிலிருு யாரும் உதவிக்கு வருவார்களா என்று காத்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

கொலன்னாவ மக்கள் பாரியளவான சொத்துக்களை இழந்து நிர்க்கதியாகியுள்ளனர். அவர்களது பலகோடி பெறுமதியான சொத்துக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த வெள்ள அனர்த்தம் மூலம் கொலன்னாவையில் ஒரு படிப்பினையும் மறுமலர்ச்சியும் ஏற்பட வேண்டும். அப்பிரதேசத்தில் மக்கள் வாழ்வதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். அரசாங்கம் வெறுமனே உலர் உணவு நிவாரணங்களுடனும் சிறு தொகை நஷ்டயீட்டுடனும் நின்றுவிடாது அம்மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்கு மீள்வதற்கும் அவர்கள் சொந்தக்காலில் நிற்பதற்கும் வலுவூட்டல் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். இது நல்லாட்சி அரசாங்கம் எதிர்கொண்டுள்ள முதலாவது பேரனர்த்தமாகும். இதனை எப்படிக் கையாளப்போகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



# R.C.C. முன்னெடுக்கும் நிவாரணப் பணிகள்

அனைத்து இஸ்லாமிய அமைப்புக்களும் முஸ்லிம் தொண்டர் அமைப்புக்களும் இணைந்து நிவாரண பணிகளை முன்னெடுக்க நிவாரண ஒருங்கிணைப்பு மத்திய நிலையம் (R.C.C.) உருவாக்கப்பட்டது. இந்த ஒருங்கிணைப்பு மத்திய நிலையத்தில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, தேசிய சூறா சபை, கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம், முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீ லங்கா போன்ற அமைப்புக்கள் பிரதான பங்கினை வகிக்கின்றன. இந்த நான்கு அமைப்புக்களிலுள்ள முக்கியஸ்தர்களை தொடர்பு கொண்டு நிவாரண ஒருங்கிணைப்பு நிலையத்தினால் முன்னெடுக்கப்படும் பணிகள் தொடர்பாக வினவியபோது அவர்கள் தெரிவித்த கருத்துக்களையும் கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களையும் வாசகர்களுக்கு தொகுத்துத் தருகிறோம்.

**அஷ்ஷெய்க் மஸிஹுத்தீன் இனாமுள்ளாஹ்**
**நிறைவேற்றுக்குழு உறுப்பினர், தேசிய சூறா சபை**



முஸ்லிம் சமூகத்தை பொறுத்தவரை எமது சமூக வாழ்விலும் தேசிய வாழ்விலும் அனர்த்த நிவாரண செயலணி என்பது மிக முக்கியமான மைல்கல்லாகும். அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, தேசிய சூறா சபை, அனைத்து இஸ்லாமிய அமைப்புக்களும் தொண்டர் அமைப்புக்களும் சேர்ந்து R.C.C. எனும் அனர்த்த நிவாரண செயலணி உருவாக்கப்பட்டுள்ளது. அனர்த்த நிவாரணப் பணிகளை ஒவ்வொருவரும் தனித் தனியாக செய்யாது ஒருங்கிணைந்து செயல்படுவதற்காக பல்வேறு செயற்குழுக்களை அமைத்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

இந்த அனர்த்தத்தில் முஸ்லிம்கள், தமிழர்கள், சிங்களவர்கள் என்று இல்லாது சகலரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த அமைப்பினூடாக அரசாங்கத்தோடும் அனர்த்த நிவாரண அமைச்சு, அனர்த்த நிவாரண மத்திய நிலையம், பிரதேச செயலாளர் உட்பட அரச அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு செயல்படுவதற்கான ஒரு செயலணியை அமைத்து, அவர்களோடு இணைந்து ஒரு வேலைத் திட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறோம்.



**எஸ்.ஏ. அஸ்கர்கான்**
**செயலாளரர், முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீ லங்கா**

R.C.C. நிறுவனம் முஸ்லிம்களால் ஆரம்பிக்கப்பட்டதாக இருந்தாலும் மனிதாபிமான அடிப்படையில் பொதுத் தளத்திலேயே இயங்குகிறது. இன, மத வேறுபாடுகளின்றி நிவாரணப் பணியினை மேற்கொள்கின்றது. தேவைகளை அடையாளப்படுத்தல் மற்றும் உதவி தேவைப்படுபவர்களுடன் தொடர்புபடுத்தும் ஒரு கூட்டணியாகவும் இயங்குகிறது. அத்தோடு அரசாங்கத்தோடு தொடர்புகளை மேற்கொண்டு அரசு செய்ய வேண்டிய பணிகள் தொடர்பாக அழுத்தங்களை வழங்குவதோடு, அரசாங்கத்தையும் பொதுமக்களையும் தொடர்புபடுத்துகின்ற வேலைத் திட்டத்தினையும் முன்னெடுக்கிறது.

தேசிய ரீதியாக முஸ்லிம் அமைப்புகள் முரண்பட்டுக் கிடந்த நிலைமை மாற்றத்திற்குள்ளாகி கூட்டாக இயங்குகின்ற தன்மை வரவேற்கப்படுகின்றது. முஸ்லிம் அரசியல் தலைவர்கள் முன்னர் போன்று இல்லாமல் ஒத்துழைப்பு வழங்குகிறார்கள். ஆன்மிகத் தலைமைத்துவங்கள், அரசியல் தலைமைத்துவங்கள், சமூக நிறுவனங்களின் தலைமைத்துவங்கள் ஒன்றாக இணைந்து இந்தப் பணிகளை முன்னெடுப்பது ஒரு சந்தோஷமான விடயமாகும்.

**எம். அர்க்கம் (நூராமீத்)**
**இளைஞர் விவகார செயலாளர், அகில இலங்கை ஜம்இய்யத்ல் உலமா**



மே மாதம் 20 ஆம் திகதி ஜுமுஆ தொழுகைக்குப் பின்னர் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் உப தலைவர் அஷ்ஷெய்க் அகார் முஹம்மத் அவர்களின் தலைமையில் எல்லா அமைப்புக்களையும் இணைத்து ஒரு கூட்டம் நடத்தினோம். இதில் இருபது அமைப்புக்கள் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கின. அந்தக் கூட்ட முடிவில் மூன்று குழுக்கள் உருவாக்கப்பட்டன. அதில் அரசாங்கத்திடம் தகவல்களை எத்திவைத்து அரச அதிகாரிகளுடன் தொடர்புகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கான தேவைகளை நிவர்த்தி செய்கின்ற பணியை முதலாவது குழு மேற்கொள்கின்றது. இரண்டாவது குழு தகவல் தொடர்பு மையமாகச் செயற்பட்டது. இதனூடாக பாதிக்கப்பட்டவர்களும் உதவி வழங்குபவர்களும் இணைக்கப்பட்டார்கள். மூன்றாவது குழு தகவல் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.



**முஜிபுர் ரஹ்மான்**
**கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்**

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தின் மூலம் கிடைக்கக் கூடிய உதவி, ஒத்தாசைகளையும் மற்றும் நஷ்ட ஈடுகளையும் கூடிய விரைவில் பெற்றுக் கொடுக்கும் அயராத முயற்சியை மேற்கொண்டு வருகின்றேன்.

அனர்த்தத்தில் சிக்கி பலத்த பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் எமது மக்களுக்கு ரமழான் மாதத்தில் நோன்பின் கடமைகளை நிறைவு செய்வதற்காக பண உதவி ஒன்றை செய்வது அவசியமென்று நான் கருதுகின்றேன். ரமழான் மாதத்தில் ஒரு குடும்பத்துக்கு ஆகக்குறைந்தது 20,000 ரூபா பணத்தை எமது சமூகத்திலிருந்து பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பெற்றுக்கொள்ளும் ஏற்பாடொன்றின் மூலம் அவர்களின் பொருளாதார பிரச்சினைக்கு சிறிய அளவிலாவது பங்களிப்பைச் செய்ய முடியும். எனவே, இத்தகைய நிர்க்கதியான நிலையில் வாழும் குடும்பங்களுக்கு உதவி புரியக் கூடிய அன்புள்ளங்களிடம் நான் இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

**எஸ்.எம். மரிக்கார்**
**கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்**



வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பிச் சென்று கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு செல்பவர்களுக்கு அரசாங்கத்தினால் 1,500 ரூபா பெறுமதியான பொதிகள் வழங்கப்படுகின்றன. அடுத்த கட்டமாக பத்தாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. வெள்ள அனர்த்தத்தின் காரணமாக அதிகமான மக்களின் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளதனால் பிரதமரின் வேண்டுகோளுக்கிணங்க நிதியமைச்சால் கடன் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கடந்த காலத்தில் கொழும்பின் பல இடங்களில் காணிகள் பிடிக்கப்பட்டு தண்ணீர் வடிந்தோடும் இடங்கள் மறிக்கப்பட்டதால் ஆற்று நீரும் மழை நீரும் ஒன்று சேர்ந்ததால் இவ்வாறான வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான அனர்த்த நிலைமைகள் எதிர்காலத்தில் உருவாகினால் அவற்றை எதிர்கொள்வதற்கான திட்டமிடலும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகிறது.



**அஸ்லம் ஒத்மான்**
**தலைவர், கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம்**

கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம் அதிகமான மனித வளங்களைக் கொண்ட ஓர் அமைப்பாகும். இச்சம்மேளனத்தினால் நிவாரணப் பணிக்காக நிதிகளைச் சேகரித்தோம். தெஹிவளைப் பள்ளிவாசல் சம்மேளனம் 1,800 குடும்பங்களைப் பராமரிப்பதற்கான பொறுப்பினை மேற்கொண்டிருக்கிறது. இதே போன்ற பங்களிப்புக்களை ஒவ்வொரு பள்ளிவாசல்கள் சம்மேளனமும் வழங்குகிறது. அவற்றை ஒருங்கமைத்து செயற்படுத்தும் பணியை கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம் மேற்கொள்கிறது.

R.C.C. யுடன் இணைந்து மனித வளங்களையும் நிதி ரீதியான பங்களிப்புக்களையும் வழங்குகிறோம். முஸ்லிம்களைப் பொறுத்தவரை அநேகமானவர்கள் தங்களுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்களுடைய வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் வசித்ததால் பாதிக்கப்பட்டவர்களின் பட்டியலில் இவர்கள் உள்வாங்கப்படவில்லை. நாங்கள் இதனைக் கருத்திற்கொண்டு பள்ளிவாசல் ரீதியாக இவர்களை பதிவு செய்திருக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் படுகடன் நெருக்கடியும் வரியமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும்

கலாநிதி அஸீஸ் எம். நுபைல்
சிரேஷ்ட விரிவுரையாளர்
எஸ். நிஸ்தார் எம்.ஏ.
ஆய்வாளர்

நீண்ட காலமாக இலங்கை அபிவிருத்தியடைந்து வரும் நாடாக அடையாளப்படுத்தப்பட்டு வருவதுடன் தலா வருமானம் தொடர்பில் கடந்த அரசாங்க காலத்தில் சற்று முன்னேற்றம் அடைந்து நடுநிலை மேல் மட்டத்திற்குரியதாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. ஆனாலும், இந்தக் கட்டம், நாடொன்றின் நிலைமாறு பொருளாதாரத்தின் மிகவும் சாதகமான அம்சங்களை வெளிப்படுத்தியிருக்க வேண்டியதும் முக்கியமானதாகும்.

ஆனால், உண்மையில் இலங்கை எவ்வித சாதக நிலைமையையும் இது தொடர்பில் வெளிப்படுத்தியிருக்காத இக்கட்டத்தில், பொருளாதாரத்தின் சேவைத்துறை தவிர ஏனைய அனைத்துத் துறைகளிலும் பலவீனம் மட்டுமே வெளிப்படுத்தப்படுகின்றன. இன்றைய நல்லிணக்க அரசு தனது பொருளாதாரக் கொள்கை தொடர்பில் பாரிய மாற்றங்களை, குறிப்பாக புதிய வருமான மூலங்களுக்கும் சென்மதி நிலுவைப் பற்றாக்குறைக்கான தீர்வாகவும் மிகப் பழைய தந்திரோபாய அணுகுமுறையில் மாத்திரம் நம்பிக்கை கொண்டும் செயல்படுவதாகவே காணத் தோன்றுகிறது.




அண்மையில், 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகளிலும், ஏன் இடைக்கால வரவு-செலவுத்திட்ட பரிந்துரைகளிலும் கூட இதனையே அரசு கடைப்பிடிக்கவுள்ளதாக வெளிப்படுத்தியிருந்தது. எடுத்துக்காட்டாக, வரி அமைப்பு முறையில் புதிதாக அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மூலதன ஆதாய வரி (Capital Gain Tax -CGT), தேச நிர்மாண வரி (Nation Building Tax- NBT) போன்றனவும் பெறுமதி சேர்வரி (VAT) ஆகியவை மொத்தமாக 11 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக உயர்வடைந்தமையையும் குறிப்பிடலாம்.

மேலும், ஐரோப்பிய நாடுகளினால் இன்னும் மறுக்கப்பட்டு வரும் விஷேட ஊக்குவிப்பு ஏற்பாடுகள் மற்றும் முன்னுரிமைக்கான பொதுமைப்படுத்தப்பட்ட திட்டம் [Generalized Scheme of Preferences (GSP) and Special Incentive Arrangement (GSP Plus)] என்பதை மீளவும் பெற்றுக் கொள்ளும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை அத்துடன் மீன் ஏற்றுமதிக்கான தடைகளை விலக்கிக் கொள்வதற்கான கோரிக்கைகள் போன்றவற்றையும் குறிப்பிடலாம்.


வெளிநாட்டு படுகடன் அதிகரிப்பு

தற்போதைய சென்மதிநிலுவை நெருக்கடியைத் தொடர்ந்து அதனை ஓரளவு சாதகமாக எதிர் கொள்வதற்கு அந்நியச் செலாவணி ஒதுக்கீடுகளை மீதப்படுத்திக் கொள்ள வெளிநாட்டு நிதி மூலங்கள் பாரிய பங்களிப்பை வழங்க முடியும். நல்லிணக்க அரசு பொருளாதார உறுதிப்பாட்டை பேணிக் கொள்ள பெரிதும் இதனையே நம்பியுள்ளது.

இலங்கையின் படுகடன் நெருக்கடிநிலை 2000 ஆம் ஆண்டு முதல் மெல்ல மெல்ல மேலெழுந்து உள்நாட்டு யுத்த முடிவையடுத்து (2009 மே 18/19) பூதாகரமாகவும் வெளிப்பட்டிருந்தது. உதாரணமாக, 2000 ஆம் ஆண்டில் இலங்கையின் வெளிநாட்டுக் கடன் 9 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்து அது 2009 இல் இரண்டு மடங்காக அதிகரித்ததுடன் (19 பில்.) 2010 இல் 21.2 பில்லியன் அமெரிக்க டொலராகவும் உயர்வடைந்து 2015 இல் மீண்டும் இரட்டிப்பாகி 44.8 பில். அளவினை எட்டியிருந்தது.

இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையின் (2015) பிரகாரம் கடன் சேவை விகிதாசாரம் கூட 2000 இல் 15 ஆகவும் 2010 இல் 17 ஆகவும் 2015 இல் 27 ஆகவும் அதிகரித்துச் சென்றுள்ளது. இன்னும் கூறப் போனால், 2014 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) பங்கின் சதவீதமாக படுகடன் சேவையானது 53.6 சதவீதத்திலிருந்து 2015 இல் 54.4 சதவீதமாக உயர்வடைந்தது. அதாவது, இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் ஏறத்தாழ 45 சதவீதம் கடன் மீளளிப்புக்கும் வட்டிக்குமே செலவிடப்பட்டது. எடுத்துக்காட்டாக, 2014 இல் வட்டி செலுத்தல்கள் 1.16 பில். அமெரிக்க டொலராக இருந்து 2015 இல் 1.22 பில். அமெரிக்க டொலராக அதிகரித்திருந்தது. அவ்வாறே, கடன் மீளளிப்பும் கூட முறையே 2.32 பில். அமெரிக்க டொலரிலிருந்து 3.46 பில். அமெரிக்க டொலராக அதிகரித்துக் காணப்படுகிறது.

ஆற்றல் குறைந்த ஏற்றுமதிக் கட்டமைப்பும் இறக்குமதிச் செலவினங்களின் கிடுகிடு உயர்வும் திட்டமிடலாளர்களை சோர்வுறச் செய்துள்ளன. இதனிடையே கடந்த அரசின் படோபகார டாம்பீக செலவினங்கள் (அது உட்கட்டமைப்பின் மீதாயினும் கூட) தேவையற்ற முதலீடாகவோ அல்லது இன்னும் காலம் தாழ்த்தி இடம்பெற்றிருக்கலாம் எனக் கூறத் தோன்றுகிறது. அத்துடன், பொருளாதார நலிவு இலங்கையின் நாணயத்தின் மீதான நம்பிக்கையைப் இழக்கச் செய்திருந்தது. இன்றைய நல்லிணக்க அரசும் அவசர அவசரமாக இலங்கை நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமானத்தின் மீதான பிடியைத் தளர்த்தியமையும் அந்நியச் செலாவணிக் கையிருப்பில் கொண்டிருந்த அதீத நம்பிக்கையும் அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி தொடர்பான இறுக்கத்தைக் கூட கடைப்பிடிக்கத் தவறியிருந்தது. அதாவது, நல்லிணக்க அரசு இவற்றின் மூலம் இறக்குமதிகளின் விலை அதிகரிப்பினூடக இலங்கை மக்களின் நுகர்வுத் தேர்வுத் தொகுதி



மாற்றத்துக்குட்பட்டு இறுதியில், சென்மதி நிலுவை சாதகமாக மாறும் என நம்பியிருந்தது. ஆனால், அவ்வாறான எதிர்வுகூறல்கள் எப்போதும் போலவே இப்போதும் தோல்வியடைந்தன.

பிரச்சினைகளை எதிர்கொள்ளல்

எப்போதும் போல, ஒரு பக்கம் மக்களின் காசுத் திரவத் தன்மையை நலநோம்படிப்படையில் (கூலி மற்றும் சம்பள அதிகரிப்பு மூலமும் பகட்டு விலைச் சூத்திர விலைக் குறைப்பு மூலமும்) அதிகரிப்பதும் மறுபுறம் ஏலவே நடைமுறையிலுள்ள வரி அதிகரிப்பினூடாகவும் (VAT மற்றும் NBT) அல்லது புதிய வரியமைப்பை (CGT) சுமத்துவதன் மூலம் கொள்வனவாற்றலையும் சேமிப்பாற்றலையும் ஒருசேர சவாலுக்குட்படுத்துவதுமே இடம்பெற்று வருகிறது.

அண்மைக் காலத்தில் அரச நிதி சார் கட்டமைப்பு மிகப் பலவீனமாக அமைந்துள்ளமை வெள்ளிடைமலை. குறிப்பாக, குளறுபடியான வரி முறைமை, சார்பு ரீதியில் தடுமாறுகிறது. அதனால், நல்லிணக்க அரசு தனது நாளாந்த செயற்பாட்டுக்குக்கூட கடன்பட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி இலக்குகளுக்குத் தேவையான நிதியீட்டத்துக்கு போதிய நிதி மூலங்களைக் கண்டுபிடிப்பதற்கும் கூட சவால்களை எதிர்கொள்ளும் அரசாங்கம் கல்வி, சுகாதாரம், திறனபிவிருத்தி, விவசாயம், சிறிய மற்றும் நடுத்தர தொழிலாண்மை விருத்தி, வறுமை தணிப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பினைப் பலப்படுத்துதல் போன்றவற்றுக்கு மிகக் குறைவான நிதி ஒதுக்கீட்டினைத்தான் 2016 ஆண்டின் வரவு-செலவுத்திட்டத்தில் வெளிப்படுத்தியுள்ளது. இவற்றுக்கான நிதிசார் ஒதுக்கீடுகள் வட்டிக்கான கடனமைப்பில் மாத்திரம் அரசை தங்கியிருக்கச் செய்துள்ளது. இச்செய்முறை குறுங்காலத்துக்காயினும் அரசையும் நாட்டையும் நச்சுவட்டத்துக்குள் (vicious cycle) இழுத்து விட்டுள்ளது.

**அண்மையில், 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவு – செலவுத்திட்ட முன்மொழிவுகளிலும், ஏன் இடைக்கால வரவு செலவுத்திட்ட பரிந்துரைகளிலும் கூட இதனையே அரசு கடைப்பிடிக்கவுள்ளதாக வெளிப்படுத்தியிருந்தது. எடுத்துக்காட்டாக, வரி அமைப்பு முறையில் புதிதாக அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மூலதன ஆதாய வரி (Capital Gain Tax-CGT) தேச நிர்மாண வரி (Nation Building Tax-NBT) போன்றனவும் பெறுமதிசேர்வரி (VAT) ஆகியவை மொத்தமாக 11 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக உயர்வடைந்தமையையும் குறிப்பிடலாம்.**

குறிப்பாக மிகைச் செலவீடுகள், உயர் மக்களின் குறை வருமான நிலை, பலவீனமான வரி சேகரிப்புக்கள் மற்றும் நிலைபேறான வரி நிருவாகத்துக்கான தேவை என்பன அரச இயந்திரத்தின் வரி வருமான மூலங்களின் மீது எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தி வந்துள்ளன. இக்காரணிகள் நடைமுறைக் கணக்கின் பருமன் மீது குறிப்பாக, வருமானக் கணக்கில் பற்றாக்குறைக்கு காரணமாக அமைந்துள்ளது. இன்னும் கூறப்போனால், அரசாங்கம் தனது வரவு-செலவு நிருவாகத்தை இணையாகக் கொண்டு செல்வதற்கு வரவு-செலவுத் திட்ட பற்றாக்குறை, அரச படுகடன் அதிகரிப்பும் படுகடன் சேவைச் செலுத்தல்கள், பொது முதலீட்டின் மீதான குறைந்தளவான செலவீடுகள் மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்கள் மீதான செலவீட்டின் குறைநிலை அனைத்தும் இறைக் கொள்கையின் வினைத்திறனான அமுலாக்கத்தின் மீதும் பாரிய அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சித் தலைவர்களுக்கெதிரான தூக்குத் தண்டனைகள்:





அரபு மொழியில் : அப்துல் கப்பார் அல்அஸீஸ்
தமிழில்: ஸகி பவ்ஸ் (நளீமி)

"நான் எழுபத்து மூன்று வருடங்களாக பல்வேறு நோய்களை சந்தித்திருக்கிறேன். எனவே, எப்போதும் மரணத்தை சந்திக்கலாம் என்ற எதிர்பார்ப்புடனேயே வாழ்ந்திருக்கிறேன். ஆனால், அல்லாஹ்வின் பாதையில் மரணிப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிட்டியிருக்கிறது. அல்லாஹ்வைத் தவிர வேறு எவரிடமும் மன்னிப்பை நான் எதிர்பார்க்கப் போவதில்லை. இப்போது அவனிடம் கேட்பதெல்லாம் 'உனது பாதையில் உறுதியாக கடைசி வரை இருப்பதற்கான வாய்ப்பை தந்திடுவாயாக' என்பது மட்டுமே. இறைபாதையில் மரணிப்பதனை நான் ஆழமாக நேசித்து வந்தவன்." இவை பங்களாதேஷ் ஜமாஅத்தே இஸ்லாமியின் அமீர் முதியுர் ரஹ்மான் நிழாமி தனது குடும்பத்தை கடைசியாக சந்தித்த போது கூறிய வார்த்தைகளாகும்.

யார் இந்த நிழாமி? ஏன் அவரைத் தூக்கிலிட்டார்கள்? இத்தகைய அரசியல் தலைவர்களை தூக்கிலிடுவதினூடாக பங்களாதேஷ் அரசு எதனை அடைய முற்படுகிறது? போன்ற கேள்விகள் பங்களாதேஷின் அரசியல் பின்புலத்தைப் புரிந்து கொள்வதில் மிக பிரதானமானவை.

உண்மையில், முதியுர் ரஹ்மான் நிழாமியின் அரசியல் வாழ்வு ஆச்சரியமானது. 1991 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் பங்களாதேஷ் மக்கள் இவரை பாராளுமன்ற உறுப்பினராகவும் தமது பிரதிநிதியாகவும் இரு முறை தெரிவு செய்திருக்கிறார்கள். மட்டுமன்றி, தனது தொகுதியில் 58 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று






பாராளுமன்றம் சென்றவர் நிழாமி. 2001 முதல் நான்கு முறை ஜமாஅதே இஸ்லாமியின் தலைவராக இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மேலும், 1969 மற்றும் 1971 இற்கு இடைப்பட்ட காலப்பிரிவில் இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார். பங்களாதேஷ் தேசியக் கட்சியின் அரசாங்கத்தின் (BNP) கீழ் விவசாய மற்றும் கைத்தொழிற் துறை அமைச்சராக 2001-2006 இற்கு இடைப்பட்ட காலப்பிரிவில் நிழாமி சேவையாற்றியிருக்கிறார். 'முன்மாதிரி அமைச்சர்' என நிழாமியை பிரதமர் காலிதா ஸியா பலமுறை அமைச்சரவைக் கூட்டங்களில் புகழ்ந்திருப்பதும் நோக்கத்தக்கது.

முதியுர் ரஹ்மான் நிழாமியின் வாழ்வு இத்தனை சாதனைகளை சாதித்துள்ள போதிலும் தற்போதைய ஹசீனா வாஜிதின் அரசாங்கம் 16 குற்றச்சாட்டுகளை இவரின் மீது சுமத்தியிருக்கிறது. 1971 ஆம் ஆண்டு இடம்பெற்ற பிரிவினைவாதப் போரில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமத்தவர்களைக் கொலை செய்தமை, 54 பெண்களை வன்புணர்வு செய்தமை மற்றும் ஆயுத, தீவிரவாதக் குழுக்களில் அங்கத்தவராக இணைந்து கொண்டமை என பட்டியல் நீண்டு செல்கிறது. ஆனால், இத்தகைய குற்றச்சாட்டுகளை கேள்விக்குறியாக்கும் பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன. 1971 முதல் இன்று வரை மூன்று தசாப்த காலமாக நிழாமிக்கு எதிராக ஏன் ஒரு வழக்கேனும் பதியப்படாமல் இருந்தது? தேர்தல் களத்தில் எதிர்க்கட்சிப் பண முதலைகள் நிழாமியுடன் போட்டியிட்ட போதிலும் தொகுதி மக்கள் ஏன் தொடர்ந்தும் அவரையே தமது பிரதிநிதியாக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்தார்கள்? நிழாமிக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு ஒரு தினத்திற்கு முன்னரும் துஆ பிரார்த்தனையிலும் தூக்குத் தண்டனைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்திலும் அவரது தொகுதி மக்கள் ஈடுபட்டார்களே, ஏன்? முதியுர் ரஹ்மான் நிழாமி ஒரு தீவிரவாதியாக அல்லது பெண்களை துஷ்பிரயோகம் செய்தவராக இருந்திருந்தால், எவ்வாறு அந்தத் தொகுதி மக்கள் அவரை ஆதரிக்க முடியும்; பாராளுமன்றம் அனுப்ப முடியும்? சிறந்த அமைச்சர் என எவ்வாறு புகழப்பட முடியும்? அதனை விட ஆச்சரியமான கேள்வி என்னவென்றால், 1988 ஆம் ஆண்டு ஜெனரல் இர்ஷாதின் சர்வாதிகார இராணுவ ஆட்சியை வீழ்த்துவதற்காக ஹசீனா வாஜித் ஜமாஅத்தே இஸ்லாமியுடனும் நிழாமியுடனும் கைகோர்த்து ஒரே மேடையில் எவ்வாறு அமர்ந்திருக்க முடியும்?

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களில் ஹசீனா தலைமையிலான அவாமி லீக் கட்சி பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று அரசாங்கத்தை கைப்பற்றியது. அன்று முதல், 1971 ஆம் ஆண்டு பிரிவினைவாதப் போரில் பாகிஸ்தான் சார்பாக நின்றவர்களை பழிவாங்க வேண்டும் என்ற சுலோகம் அவாமி லீக் [illegible] களில் மிகைக்க ஆரம்பித்தது. பின்பு, 'சர்வதேச நீதிமன்றம்' என்ற பெயரில் ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட்டதுடன் 1971 பிரிவினைவாதப் போரில் பங்குகொண்ட ஜமாஅத்தே இஸ்லாமி அங்கத்தவர்களை கைது செய்து தூக்குத் தண்டனை விதிக்க ஆரம்பித்தது.

உண்மையில், 1971 பிரிவினைவாதப் போருடன் தொடர்புபட்ட வழக்குகளை விசாரணை செய்யும் நீதிமன்றத்திற்கு 'சர்வதேச நீதிமன்றம்' எனப் பெயரிட்டமையை சர்வதேச நீதித் துறை விற்பன்னர்கள் கேலி செய்கின்றனர். ஏனெனில், சர்வதேச நீதிமன்றத்திற்கான அளவீடுகளை அடைந்து கொள்வது ஒரு புறமிருக்க, பங்களாதேஷினுடைய சட்ட யாப்பின் நிபந்தனைகளைக் கூட மதிக்காத நீதிமன்றத்திற்கு எவ்வாறு 'சர்வதேச நீதிமன்றம்' என்று பெயரிடலாம்? என அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். இன்னும், குறித்த நீதிமன்ற விசாரணைகளைப் பார்வையிடுவதற்கு விரும்பிய சர்வதேச நீதித்துறை விற்பன்னர்கள் எவரையும் அதற்காக அனுமதிக்கவில்லை. நீதிமன்ற விசாரணைகள் தொடர்பான செய்திகளை வெளியிடுவதற்கு அனுமதி வேண்டிய அல்ஜஸீரா உள்ளடங்கலான சர்வதேச ஊடகங்கள் எவற்றுக்கும் நாட்டிற்குள் நுழைவதற்கு வீசா வழங்கப்படவில்லை. 1971 ஆம் ஆண்டு இடம்பெற்ற பிரிவினைவாதப் போர் கோப்புகளை மீண்டும் அலசுவதில்லை என இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் செய்து கொண்ட உடன்படிக்கையையும் ஹசீனாவின் நீதிமன்ற விசாரணைகள் கேள்விக்குட்படுத்துகின்றன. எல்லாவற்றுக்கும் அப்பால், நிழாமிக்கும் ஏனைய ஜமாஅத்தே இஸ்லாமியின் தலைவர்களுக்கும் வழங்கப்பட்ட தூக்குத் தண்டனைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களும் இட்டுக் கட்டப்பட்டவை; முன்பின் முரணானவை.

**1971 பிரிவினைவாதப் போருடன் தொடர்புபட்ட வழக்குகளை விசாரணை செய்யும் நீதிமன்றத்திற்கு 'சர்வதேச நீதிமன்றம்' எனப் பெயரிட்டமையை சர்வதேச நீதித் துறை விற்பன்னர்கள் கேலி செய்கின்றனர். ஏனெனில், சர்வதேச நீதி மன்றத்திற்கான அளவீடுகளை அடைந்து கொள்வது ஒரு புறமிருக்க, பங்களாதேஷினுடைய சட்ட யாப்பின் நிபந்தனைகளைக் கூட மதிக்காத நீதிமன்றத்திற்கு எவ்வாறு 'சர்வதேச நீதிமன்றம்' என்று பெயரிடலாம்? என அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.**

முதியுர் ரஹ்மான் நிழாமிக்கு மரண தண்டனை கொடுக்கப்பட்ட வழக்கை கேலிக்குள்ளாக்கும் மற்றொரு அதிர்ச்சியான விடயமும் நடைபெற்றுள்ளது. அதாவது, குறித்த வழக்கை விசாரணை செய்யும் உயர் நீதிமன்ற நீதிபதி சரீந்ரூ கமாரிசன்ஹா இந்து மதத்தைச் சேர்ந்தவர். நிழாமிக்கு தூக்குத் தண்டனை கொடுப்பதற்கான இறுதித் தீர்ப்பை வெளியிடுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் (மே 4ம் திகதி) பங்களாதேஷுக்கான இந்தியத் தூதுவரை டாக்காவில் சந்தித்திருக்கிறார். இச்சந்திப்பு நிழாமியின் தூக்குத் தண்டனையுடன் தொடர்பான விடயத்தை ஆராய்ந்தமை தெளிவானது. குறித்த தீர்ப்பை செயற்படுத்துவது பற்றிய இந்தியாவின் அவதானத்தை பெற்றுக் கொள்வதற்கே உயர் நீதிமன்ற நீதிபதி இந்தியத் தூதுவரை சந்தித்தார் என பங்களாதேஷ் ஊடகவியலாளர்கள் அடித்துக் கூறுகின்றனர். சர்வதேச ரீதியாக கூர்மையாக அவதானிக்கப்படும் வழக்கொன்றின் இறுதித் தீர்ப்பை வெளியிட முன்னர், எப்படி உயர் நீதிமன்ற நீதிபதி வேறொரு நாட்டின் உயர்மட்ட இராஜதந்திரியை சந்திக்க முடியும்? இது முழு வழக்கையும் தீர்ப்பையும் தலைகீழாகப் புரட்டிப் போடும் செயலல்லவா? மறுபுறம், எப்படி இக்கட்டான நேரத்தில் வேறொரு நாட்டின் உயர் இராஜதந்திரி உயர் நீதிமன்ற நீதிபதியை சந்திக்க முடியும்? அந்த தைரியம் எப்படி வந்தது?

➡ 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்த முகாமைத்துவம்:

# பள்ளிவாசல்களின் பங்களிப்பு என்ன?

அஷ்ஷெய்க் ஏ.ஜே. ஸிஹ்றான் (நளீமி)

பொதுவாகவே மனிதனது வாழ்வில் அவ்வப்போது பல்வேறு வடிவங்களில் சிறிய, பெரிய அனர்த்தங்கள் நிகழ்வது தவிர்க்க முடியாதது. அதன் அளவைப் பொறுத்தும் அதனை எதிர்கொள்கின்ற நபர்களைப் பொறுத்தும் அவற்றுக்குரிய தீர்வைப் பெற்றுக் கொள்வது வித்தியாசப்படுகின்றது. சமூகத்தில் பரஸ்பர ஒத்துழைப்பு, பரஸ்பர பாதுகாப்பு வழங்கல் என்ற அடிப்படையில் அனர்த்த முகாமைத்துவத்திற்கான ஏற்பாடுகள் முன்னரே செய்யப்பட்டிருக்க வேண்டும்.

முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை மக்களை ஒன்றுபடுத்துகின்ற பொதுத் தளமாக அமைந்திருக்கும் பள்ளிவாசல் இத்தகைய பணியை செவ்வனே நிறைவேற்றுவதற்கு மிகப் பொருத்தமான தளமாக அமைகின்றது. அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் களத்தில் இறங்கி செயற்படும் நிலைக்கு மாறாக, எப்போதும் பள்ளிவாசல்கள் இதற்குரிய ஏற்பாடுகளை முன்னரே கொண்டிருக்க வேண்டும்.

அனர்த்தம் பல்வேறு வடிவங்களில் ஏற்படலாம். சிறிய, பெரிய அனர்த்தங்களாக ஒருவரை, பலரை, ஒரு கிராமத்தை, ஒரு பிரதேசத்தை, முழு சமூகத்தைப் பாதிக்கக்கூடிய அனர்த்தங்களும் நிகழலாம். திடீரென ஏற்படும் இத்தகைய அனர்த்தங்களுக்கு இரண்டு விதமான உதவிகள் தேவைப்படுகின்றன.

தற்காலிமான உதவிகள்: உடனடி முதலுதவி, உணவு, உடை, தற்காலிக தங்குமிடம், மருத்துவ உதவிகள்

நீண்டகால உதவிகள்: இவை பாதிக்கப்படுகின்ற தன்மைக்கு ஏற்ப வேறுபடும். பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைத்தல், நீண்ட கால மருத்துவ உதவிகள், பிள்ளைகளுக்கான உதவிகள்

உண்மையில், அனர்த்த முகாமைத்துவ செயற்திட்டத்தை மிக விரைவாக செயற்படுத்துவதற்குரிய தளமாக பள்ளிவாசல் அமைந்துள்ளது. பள்ளிவாசல்களின் பங்களிப்புகள் எல்லா சமூகத்துக்கும் கிடைக்கத்தக் கதாக விரிவடைய வேண்டும். சில முன்னெடுப்புக்களை நோக்குவோம்.

1. ஒவ்வொரு பள்ளிவாசலும் அப்பள்ளிவாசலின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மக்கள் பற்றிய மதிப்பீடொன்றை தயாரித்து வைத்துக் கொள்ளல்.

2. பள்ளிவாசலில் ஓர் அனர்த்த முகாமைத்துவ குழுவை உருவாக்கி செயற்படுத்தல். இதில் இளைஞர்களை அதிகம் சேர்த்துக் கொள்வது வரவேற்கத்தக்கது.

3. அனர்த்த முகாமைத்துவ குழுவோடு, நன்கு பயிற்றுவிக்கப்பட்ட முதலுதவிக் குழுவொன்றையும் உருவாக்குதல். அவசரத் தேவைகள் நிமித்தம் வைத்தியர்கள், அரச அதிகாரிகள் என்பவர்களை உடனடியாக அழைத்து வருவது எல்லா இடங்களுக்கும் சாத்தியமற்றதாக இருக்கும். எனவே, பல்வேறு விதமான முதலுதவிகளையும் செய்யத்தக்க பயிற்றுவிக்கப்பட்ட முதலுதவிக் குழுவொன்று இருப்பது பல்வகையிலும் பயனளிக்கும். முதலுதவி செய்முறையை முறையாகக் கற்று பயிற்சி பெற்ற குறைந்தது பத்து பேர் கொண்ட குழுவாவது ஒவ்வொரு பள்ளிவாசலுக்கு கீழாலும் இருப்பது அவசியமாகும்.

4. பெண்களிலும் இத்தகைய முதலுதவிகளை செய்யத்தக்க ஒரு குழு ஒவ்வொரு கிராமத்திலும் இருப்பது அவசியமாகும். நபியவர்களுடைய காலத்திலும் பிற்பட்ட காலங்களிலும் பெண்கள் யுத்த களத்துக்கு முதலுதவி மற்றும் ஏனைய உத விகளை செய்வதற்காக அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்பதைப் பார்க்கின்றோம்.



5. அனர்த்தம் ஏற்பட்ட ஆபத்தான பகுதிகளுக்குச் சென்று பணியாற்றத்தக்க சக்திமிக்க, நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஒரு தொண்டர் அணி (volunteer force) ஒவ்வொரு மஹல்லாவிலும் இருப்பது மிகவும் அவசியம்.

6. இத்தகைய திடீர் அனர்த்தங்களை எதிர்கொள்ளத்தக்க உபகரணங்களை பள்ளிவாசல்களில் வைத்திருத்தல். அவற்றை அனர்த்தங்களுக்கு மட்டுமன்றி சமூகத்தின் ஏனைய விவகாரங்களுக்கும் பயன்படுத்தலாம். உதாரணமாக தற்காலிக இடைத்தங்கல் நிலையங்களை அமைக்கக்கூடிய கூடாரங்கள், விரிப்புகள், படகுகள், தற்காப்பு உபகரணங்கள் முதலானவற்றை வைத்திருத்தல். அவற்றை அனர்த்த காலங்களில் பயன்படுத்த முடிவதோடு ஏனைய காலங்களில் அவற்றை வாடகைக்கு கொடுத்து வருமானத்தையும் ஈட்ட முடியும்.

7. பள்ளிவாசல்களில் ஒரு அம்பியுலன்ஸ் வண்டி இருப்பது அவசியமாகும். பல கிராமப்புற ஊர்கள் வைத்தியசாலைகளை விட்டும் தூரமாக இருக்கும். எனவே, பாதிக்கப்பட்டவர்களை வைத்தியசாலைகளுக்கு அழைத்துச் செல்ல இத்தகைய ஏற்பாடு மிகப் பயனுள்ளதாக அமையும். குறைந்தது பல பள்ளிவாசல்களை ஒன்றிணைத்த குறித்த ஒரு பிரதேசத்துக்கு ஒரு அம்பியுலன்ஸ் வாகனமாவது இருப்பது நல்லது.

08. அனர்த்த நிலைமைகளைத் தொடர்ந்து பாதிக்கப்படும் மக்களுக்கு ஆறுதல் வழங்குவதற்கும் உளவள ஆலோசனை வழங்குவதற்குமுரிய ஏற்பாடுகளை பள்ளிவாசல் மேற்கொள்ள வேண்டும். சிலர் பாரிய இழப்புக்களை சந்தித்து மனமுடைந்து போயிருப்பார்கள். வெறுமனே அவர்களுக்கு உணவும் உடையும் வீடும் கொடுப்பதால் அவர்களது நிலையை சீர்படுத்திவிட முடியாது. மாற்றமாக அவர்களுக்கு உளவள ஆலோசனை தேவைப்படும். குறிப்பாக, அவர்களுக்கு மார்க்க வழிகாட்டல் தேவைப்படும். இழப்பு, சோதனை பற்றிய மார்க்கத் தெளிவு அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் கொடுக்கப்பட்டு அவர்கள் ஆற்றுப்படுத்தப்பட வேண்டும்.

09. திடீர் அனர்த்தங்களை எதிர்கொள்ளத்தக்க விதத்தில் உதவக்கூடிய ஒரு ஸதகா நிதியத்தை பள்ளிவாசலில் நிர்வகிக்க முடியும்.

10. அனர்த்தங்கள் பற்றிய இஸ்லாமிய பார்வையை மக்களுக்கு தெளிவுபடுத்துதல் பள்ளிவாசல் செய்ய வேண்டிய மிக முக்கியமான ஒரு பணியாகும். பொதுவாக அனர்த்தங்களை இயற்கையின் சீற்றம் என்று சொல்லி சர்வ வல்லமை படைத்த அல்லாஹ்வையும் அவனது ஏற்பாட்டையும் அவன் அனர்த்தங்களுக்கு பின்னால் வைத்திருக்கின்ற நோக்கங்களையும் பலர் மறந்து விடுகின்றனர். சிலபோது அல்லாஹ்வுக்கு இணைவைக்கும் நிலைக்கும் சென்று விடுகின்றனர்.

எனவே, ஏன் அல்லாஹ் இத்தகைய அனர்த்தங்களை ஏற்படுத்துகின்றான்; அவை எவ்வாறு ஏற்படுகின்றன, அவற்றை இஸ்லாமிய நோக்கில் எவ்வாறு நோக்க வேண்டும் என்பது பற்றிய தெளிவை மக்களுக்கு வழங்க வேண்டும். மரணம், சொத்து, பொருள் இழப்பு பற்றிய இஸ்லாமிய ஷரீஆ முன்வைக்கும் தெளிவு வழங்கப்பட வேண்டும். இத்தகைய அனர்த்தங்கள் யாருக்கு தண்டனையாக அமைகின்றன; யாருக்கு சோதனையாக அமைகின்றன; யாருக்கு படிப்பினையாக அமைகின்றன என்ற சரியான விளக்கம் மக்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். இது பற்றிய விளக்கத்தை பிற மதத்தவர்களுக்கும் மிக அழகாக கொடுக்கலாம். இதன் மூலம் அவர்களது உலக வாழ்வு சிறக்கவும் வழிகாட்ட முடியும்.

பொதுவாக அனர்த்த நிலைமைகளின் போது உடனுக்குடன் உரிய அவசியமான தகவல்களை, வழிகாட் டல்களை பள்ளிவாசலினூடாக கொடுக்கவும் முடியும். இத்தகைய காத்திரமான பங்களிப்பை செய்யத்தக்க சமூக நிறுவனமாக, சமூகத் தலைமையகமாக பள்ளிவாச ல்கள் மாற வேண்டும். முஸ்லிம் சமூகத்தை வழிநடத்தும் மையத்தளமாக இருக்கின்ற பள்ளிவாசல் இத்தகைய காத்திரமான செயற்திட்டங்களை முன்னெடுக்குமாயின் அது முழு மனித சமூகத்துக்கும் பயனுள்ளதாக இருக்கும். குறிப்பாக, இலங்கை போன்ற பன்மைத்துவ சமூகங்கள், இனங்கள் வாழ்கின்ற நாட்டில் இத்தகைய அருமையான மனிதநேயப் பணிகளினூடாக எமது பண்பாட்டை, எமது மார்க்கம் மனித சமூகத்துக்கு போதிக்க விரும்புகின்ற உயர் பெறுமானங்களைக் கற்றுக் கொடுக்க முடியும். அதுவே இந்த மார்க்கத்துக்கு செய்கின்ற மிகப் பெரும் சான்று பகர்தலாகவும் இருக்கும். இத்தகைய பணிகளை எதிர்காலங்களில் எமது பள்ளிவாசல்கள் திட்டமிட்டு செய்வதற்கு முன்வர வேண்டும்.

## மலையகத்தில்...

(9 ஆம் பக்கத் தொடர்)

அடுத்த முக்கியமான விடயத்தை மலையக அரசியல்வாதிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மலையகத்தின் பல இடங்கள் மண்சரிவு ஆபத்து நிறைந்த பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னரேயே மண்சரிவு அபாய பகுதிகளாக அறிவிக்கப்பட்டும் அப்பகுதிகளில் மக்கள் இன்றைக்கும் குடியிருந்து வருகிறார்கள். கிராம சேவகர்களும் பொலிசாரும் தோட்ட நிர்வாகங்களும் அப்பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களை அங்கிருந்து வெளியேறும்படி கோரியிருக்கிறார்கள்.

ஆனாலும் அவர்கள் போவதாக இல்லை. கேட்டால், "போ, போ என்கிறார்களே தவிர, எங்கே போக வேண்டும் என்பதைச் சொல்கிறார்கள் இல்லை. போ என்றால் எங்கே போவது?" என்கிறார்கள் இக்குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். நியாயமான கேள்வி. எந்த [illegible] இல்லாமல் வெளியேறச் சொல்கிறார்கள். "இதைவிட இங்கேயே இருந்து மண் மூடிச் செத்து விடலாம்!" என்றும் சிலர் கூறியிருக்கிறார்கள், விரக்தியுடன்!

எனவே நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள மலையக அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் வருமுன் காக்கும் நடவடிக்கைகளிலேயே அதிக கரிசனை காட்ட வேண்டும். களனி நதிக்கரையோரமாகக் குடியிருப்பவர்களை மாற்று இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்வோம் என ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். இது மலையகத்தில் மண்சரிவு அபாயத்தை எதிர்கொண்டிருக்கும் குடும்பங்களுக்கும் பொருந்துவதாக இருக்க வேண்டும். மண் விழுந்து குடும்பங்கள் மாய்ந்த பின்னரே எஞ்சியவர்களுக்கு புதிய இடங்களில் புதிய வீடு என்ற கொள்கையை குழிதோண்டிப் புதைத்து விட்டு, மாற்று இடங்களை ஏற்பாடு செய்து அங்கே ஆபத்தை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களை குடியேற்றுவதே மலையக அரசியல்வாதிகள் செய்ய வேண்டிய, முதன்மைப் படுத்த வேண்டிய பணியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெய்னாகாடு செங்கல் உற்பத்தி:

# ஜீவனோபாயத் தொழிலால் ஜீவ மரணப் போராட்டத்தில் மக்கள்

யூ.எல்.எம். றியாஸ்

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நெய்னாகாடு பிரதேசம் செங்கல் உற்பத்திக்கு பெயர்போன கிராமமாகும். இங்கு உற்பத்தி செய்யப்படும் செங்கற்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன.

குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தின் கட்டிட நிர்மாணப் பணிகளுக்கான



செங்கல் தேவையின் கணிசமான பங்களிப்பை நெய்னாகாடு கிராமம் நிறைவேற்றி வருகின்றது. அது மட்டுமல்லாது, அக்கிராமத்திலுள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்களின் ஜீவனோபாயத் தொழிலாகவும் அது காணப்படுகிறது.

எனினும், இத்தொழில் காரணமாக இக்கிராமம் சுகாதார சீர்கேடுகளையும் கல்விப் பின்னடைவுகளையும் மறைமுகமாகவும் நேரடியாகவும் அனுபவித்து வருகின்றது.

இக்கிராமத்தின் மக்கள் குடியிருப்பை அண்டிய பிரதேசங் களிலும் பிரதான வீதிகளின் மருங்குகளிலும் செங்கல் சூளைகள் அமைந்திருப்பது இக்கிராம மக்களுக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளது. அது மட்டுமல்லாது இக்கிராமத்தில் உள்ள ஒரே ஒரு பாடசாலையான அல்அக்ஸா வித்தியாலயத்தைச் சுற்றியுள்ள பிரதேசங் களிலுள்ள செங்கல் சூளைகளால் கல்வி நடவடிக்கைகளுக்கும் தடையாக உள்ளதுடன் 105 மாணவர்களின் கல்வியும் பாதிக்கப்பட்டுள்ளது.

செங்கல் சூளைக்கு பயன்படுத்தப்படும் உமி, சாம்பல் போன்றவை காற்றோடு கலப்பதனால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை கண்நோய் மற்றும் சுவாச நோய்களுக்கு ஆளாகின்றனர். கிணறுகளுக்குள் சாம்பல் துகள்கள் படிவதனால் இம்மக்களால் சுத் தமான குடிநீரைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

செங்கல் சூளைகளிலிருந்து வெளிவரும் காபன் துணிக்கைகள் மற்றும் அதிகம் செறிவுள்ள காபன் மொனக்சைட், சல்பரொக்சைட் போன்ற நச்சு வாயுக்கள் தொண்டை, கண், சுவாசப்பை ஆகியவற்றை பாதிப்புக்குள்ளாக்க வாய்ப்பிருப்பதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

இந்த நச்சு வாயுக்கள் சிறு பிள்ளைகளின் மூளை மற்றும் உடல் வளர்ச்சியை குன்றச் செய்யும் நச்சு வாயுக்களாகும். சூளைகளிலிருந்து வெளிப்படுகின்ற நச்சு வாயுக்கள் வாகனங்களில் இருந்து வெளிப்படும் நச்சு வாயுக்களுக்கு அடுத்தபடியாக பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியவை என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

1978 ஆம் ஆண்டு முதல் நெய்னாகாடு கிராமத்தில் செங்கல் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆரம்பத்தில் சூழல் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் உணரப்படாதபோதும் இப்போது பிரச்சி னைகள் உணரப்படுகின்றன. எனினும், இது தொடர்பாக இதுவரை எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படாதது கவலைக்குரிய விடயமாகும்.

கடந்த காலங்களில் வீதியோரங்களில் உள்ள செங்கல் சூளைகளை 30 மீற்றருக்கு அப்பால் அகற்றுமாறு சம்மாந்துறை பிரதேச சபை கோரியிருந்தது. எனினும், அது நடைமுறைக்கு வரவில்லை. இத் திட்டம் ஏன் நடைமுறைக்கு வரவில்லை என்பது புரியவில்லை.

சம்மாந்துறைப் பற்று செங்கல் உற்பத்தி தொழிலாளர் விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எம்.எம். சுலைமாலெப்பை கருத்துத் தெரிவிக்கையில்,



"சுமார் 300 இற்கும் மேற்பட்ட செங்கல் உற்பத்தி நிலையங்கள் காணப்படுகின்றன. 15,000 க்கும் மேற்பட்டவர்களின் வாழ்வாதார தொழிலாக இது காணப்படுகின்றது. குடியிருப்பாளர்களின் சுகாதார மற்றும் சூழல் பிரச்சினை நியாயமான கோரிக்கையாக இருந்தபோதிலும் செங்கல் சூளைகளை வேறு இடத்திற்கு மாற்றுவதிலும் பல பிரச்சினைகள் உள்ளன. எங்களுக்கென்று தனியான ஒரு பிரதேசத்தை ஒதுக்கித் தரும் பட்சத்தில் செங்கல் சூளைகளை அமைத்துக் கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்."

இது தொடர்பாக குடியிருப்பாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,



"செங்கல் சூளையில் இருந்து வருகின்ற சாம்பல் குடிக்கும் தண்ணீரில் கூட காணப்படுகிறது. இதனால் சுத்தமான நீரைக் கூட பருக முடியாமல் உள்ளது. அதுமட்டுமல்லாது, வீதியால் செல்ல முடியாது; கண்களை மூடிக்கொண்டுதான் செல்ல வேண்டும். இதனால் வாகன விபத்துக்கள் ஏற்படுகின்றன. பக்கத்தில் ஒரு பாடசாலை இருக்கின்றது. அங்கு கண்வருத்தம், சுவாசப் பிரச்சினையால் பிள்ளைகளால் கல்வி கற்க முடியாமல் உள்ளது. இது தொடர்பாக நாங்கள் முறையிடாத இடமே கிடையாது. அமைச்சர்களிடமும் சொன்னோம்; எதுவும் நடக்கவில்லை. செங்கல் உற்பத்தித் தொழிலில் ஈடுபடுபவர்களின் வாழ்வாதாரத்தை நாங்கள் முடக்கவில்லை. வீதியோரங்களில் உள்ள கல் சூளைகளை இவ்விடத்திலிருந்து அகற்றினால் போதும்; ஓரளவு எங்களது பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் எனத் தெரிவித்தார்."

குடியிருப்புப் பிரதேசங்களில் உள்ள செங்கல் சூளைகள் தொடர்பாக சம்மாந்துறை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு கிராம மக்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இருந்தபோதும் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பாக சம்மாந்துறை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். எம். சபீர் கருத்துத் தெரிவிக்கையில், “குடியிருப்புப் பிரதேசங்களில் உள்ள செங்கல் சூளைகள் தொடர்பாக சில முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. செங்கல் சூளைக்கு பயன்படுத்தப்படும் உமி, அதன் சாம்பல் போன்றவற்றினால் சுவாசம் தொடர்பான நோய்கள் ஏற்படும். குறிப்பாக ஆஸ்த்துமா, ஒவ்வாமை, கண் தொற்று நோய்கள் என்பன ஏற்பட வாய்ப்பிருக்கின்றது. இது விடயம் தொடர்பாக செங்கல் உற்பத்தி தொழில் முயற்சியாளர்களின் ஒத்துழைப்போடு இக்கிராமத்தில் முறையான வேலைத்திட்டமொன்று முன்னெடுக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது'' எனத் தெரிவித்தார்.

பாரிய சூழல் பிரச்சினையை நெய்னாகாடு கிராமம் இப்போது எதிர்கொண்டு வருகின்றது. இப்பிரதேச மக்கள் பல முறைப்பாடுகளை செய்தும் இதுவரைக்கும் மத்திய சுற்றாடல் அதிகார சபை எதுவித நடவடிக்கையையும் எடுத்த தாகத் தெரியவில்லை. தற்போது இக் கிராமத்தின் இயற்கை சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது சுகாதாரம், கல்வி, சுத்தமான குடிநீர் உள்ளிட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. நெய்னாகாடு கிராமம் ஒருகாலத்தில் பசுமைக் கிராமமாகவும் மக்களின் சிறந்த ஓய்விடமாகவும் இருந்தது. ஆனால், இன்று இக்கிராமம் அதன் தனித்துவத்தை இழந்து திரும்பும் திசையெல்லாம் சுடுகாடாய் காட்சியளிக்கின்றது. இதனால் இக்கிராமத்தில் வாழும் சுமார் 145 குடும்பங்களும் செய்வதறியாது திகைக்கின்றன.

இக்கிராமத்தின் நிலை இவ்வாறே தொடருமானால் இங்கு வாழும் எதிர்கால சந்ததியினர் வாழ்வதற்குப் பொருத்தமற்ற ஒரு பிரதேசமாக இது மாறும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. சுத்தமான காற்று, கல்வி கற்க உகந்த சூழல், தயக்கமின்றிப் பருகிட மாசடையாத குடிநீர் என்பன கிடைக்குமா என்ற ஏக்கத்தில் வாழ்ந்து வரும் இம்மக்களுக்கு எப்போது தீர்வு கிடைக்கப் போகிறது? இக்கிராமம் இழந்த பசுமைச் சூழல் மீண்டும் கிடைப்பது எப்போது? சுடுகாட்டைப் போல் காட்சி தரும் இக்கிராமம் அது இழந்த பசுமையை மீண்டும் பெறுமா? இவை அக் கிராம மக்கள் முன்னாலுள்ள கேள்வியும் எதிர்பார்ப்புமாகும்.

நெய்னாகாடு கிராமம் எதிர்கொண்டுள்ள பௌதிக ரீதியான அச்சுறுத்தல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பார்வையில் படுமா? திறப்பார்களா கண்களை; துடைப்பார்களா துயரை?




அல் அக்ஸா வித்தியாலயத்திற்கு அருகாமையில் செங்கள் சூளை அமைக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவரா?

## இதோ! உங்களின் கவனத்திற்கு

டாக்டர் எம். எச்.எம். நசீம்
சுகாதார வைத்திய அதிகாரி
கம்பொல

வெள்ள அனர்த்தத்தின் பின் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நீர் வடிந்து ஓடத் தொடங்கியதுடன் தமது சொந்த இடங்களை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் மக்கள் பின்வரும் விடயங்களில் கூடிய கவனம் செலுத்துவதன் மூலம் உடல் நல பாதிப்புக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

⇨ பருகுவதற்கு, உணவு தயாரிப்பதற்கு சுத்தமான நீரைப் பாவித்தல். கொதித்தாறிய, குளோரின் சேர்க்கப்பட்ட, சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரைப் பாவிப்பதன் மூலம் வாந்திபேதி, வயிற்றுக் கோளாறு, மஞ்சள் காய்ச்சல், தைபோய்ட் காய்ச்சல் போன்றவற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

⇨ நிவாரணமாக கிடைக்கப்பெறும் சமைத்த உணவுகளை உட்கொள்ளும்போது மிகவும் அவதானத்துடன் இருத்தல். உணவு பழுதடைந்து, மாசடைந்திருந்தால் இது உடல் நலத்திற்கு கேடாகலாம். அதிலும் விஷேடமாக, கர்ப்பிணித் தாய்மார்கள், சிறு பிள்ளைகள், வயோதிபர்கள், நோயாளிகள் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும்.

⇨ வெள்ள நீர் தேங்கி நிற்கும் இடத்தில் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் உண்டு. எனவே, இந்த நுளம்பிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

⇨ எமது சூழலைத் துப்புரவாக வைப்பதன் மூலம் ஈ, நுளம்பு பெருகுவதைத் தவிர்த்து அதன் மூலம் ஏற்படக்கூடிய நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.



⇨ தமது வீடு, சூழலைத் துப்புரவு செய்கின்றபோது, சரியான பாதணிகளை அணிந்து கொள்ளல், தேவைப்படுமிடத்து கையுறைகள், மூக்குக் கவசம் பாவிப்பதன் மூலம் தோல், சுவாச நோய்கள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். இந்த வேலையில் ஈடுபடும் போது ஆபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம். மிகக் கவனமாக ஈடுபடல் வேண்டும். தேவைப்படும்போது தொண்டர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளல். சிறு காயங்கள், கீறல்கள் ஏற்பட்டாலும் மருத்துவ ஆலோசனை பெற்றுக்கொள்ளல் அவசியமாகும். அதனால் லெப் டொஸ் பயிரோசிஸ் (Leprospiroisis) செலுலய்டிஸ் போன்றவை ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

⇨ சிறு குழந்தைகளை கூடிய கண்காணிப்பில் வைத்திருத்தல்.

சிறு குழந்தைகள் சேற்றில், தேங்கிய நீரில் விளையாடுவதில் ஆர்வம் செலுத்துவர். இதன்போது இவர்கள் நோய்த் தொற்றுக்குள்ளாவதற்கும் விபத்து ஏற்படுவதற்குமான வாய்ப்புக்கள் அதிகம். ஏனெனில், சாதாரண நிலைமைகளைவிட இந்த வெள்ள அனர்த்தத்தின் பின் தேங்கிய நீர், சேற்று நிலம் மாசடைந்திருக்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம்.

⇨ நீண்டகால நோயுற்றவர்கள் அதாவது டயபெடிக்ஸ், பிரசர், இருதய நோய், சிறுநீரக நோய் உள்ளவர்கள் தமது அன்றாட மாத்திரைகளை உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

⇨ கர்ப்பிணித் தாய்மார்கள், சிறு பிள்ளைகள், வயோதிபர்கள், நோயாளிகள் தங்களது உணவில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

⇨ இருமல், காய்ச்சல், வாந்தி, வயிற்றோட்டம், சொறிச்சல், கால் வீக்கம், காயங்கள் ஏற்படுமிடத்து மருத்துவ ஆலோசனை பெற்றுக் கொள்ளல். தூக்கமின்மை, பசியின்மை, அதிக உடல் சோர்வு, மனக் கவலை போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மனநல அதிகாரியின் உதவியை நாடுதல்.

⇨ சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதாரப் பரிசோதகர், குடும்ப நலத்தாதி போன்றோர் விடுக்கும் அறிவுரைகளுக்கு அதிகூடிய கவனம் செலுத்தல். தமக்கு ஏதேனும் உடல் நல, மன நல பிரச்சினைகள் ஏற்படுமிடத்து இந்த அதிகாரிகளின் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

---

### மு.கா. வின் உட்கட்சி முரண்பாடு:...

(7 ஆம் பக்கத் தொடர்)

அவற்றைவிட செயலாளர் நாயகத்திற்கான அதிகாரங்களை முழுமையாக வழங்குவதும் கட்சி உயர்பீடத்திலிருந்து இடைநிறுத்தப்பட்டவர்களை நிபந்தனையின்றி உள்வாங்குவதுமே உள்ளக முரண்பாட்டினைத் தீர்ப்பதற்கான முக்கிய நிபந்தனைகளாக இருப்பதை செயலாளர் நாயகம் வலியுறுத்தியதாகவும் இது விடயத்தில் தெளிவானதொரு நிலைப்பாட்டுக்கு வரமுடியாமல் சந்திப்பு நிறைவடைந்ததாகவும் கட்சி வட்டாரத்தில் பேசப்படுகிறது.

முரண்பாடுகளுக்கு ஆரோக்கியமான தீர்வுகளை எட்ட வேண்டுமானால் முதலில் முரண்பாடுகளைத் தெளிவாக அடையாளம் காண வேண்டும். மு.கா. வின் உட்கட்சி முரண்பாடு தனிநபர்களுக்காக அல்லாமல் சமூகத்திற்கு ஆரோக்கியமானதாக தீர்க்கப்பட வேண்டுமென்றால் அது எவ்வாறு பார்க்கப்படவேண்டும் என்பதே இங்கு முக்கியமானது.

கட்சியின் செயலாளர் நாயகம் எனும் அதிகாரம் மு.கா. எனும் அரசியல் கட்சியைப் பொறுத்தவரை எத்துனை முக்கியமானது என்பது இங்கு உணரப்படவேண்டும். தேர்தல் ஆணையாளருடனும் பாராளுமன்றத்தின் செயலாளருடனும் உத்தியோகபூர்வமான கட்சி சார்பான தொடர்புகளை இவரே மேற்கொள்கிறார். தலைமைக்கு மதியுரை வழங்கும் ஆளுமையாகவும் சிலர் இங்கு இருக்க வேண்டும். தேசிய, சர்வதேச அரசியலில் ஆழ்ந்த ஞானமுள்ளவராகவும் தேசிய முரண்பாட்டு அரசியலில் சம்பந்தப்பட்ட தரப்புகளின் உயர் மட்டங்களுடன் ஈடுகொடுத்து முஸ்லிம் சமூகத்தின் அபிலாசைகளை நூதனமாகவும் இணக்கப்பாடாகவும் வென்றுவரும் சாணக்கியமுள்ளவராகவும் இருக்கவேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக பதவிகளுக்காக சமூகத்தையும் கொள்கையையும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விட்டுக்கொடுக்கத் துணியாத நம்பிக்கையானவராக செயலாளர் நாயகம் என்பவர் இருக்க வேண்டும். அதேவேளை, தலைவரால் கூலிக்கு அமர்த்தப்படும் ஒருவரிடம் செயலாளர் நாயகத்திற்கான அதிகாரங்கள் ஒப்படைக்கப்படுவது என்பது தலைவரே செயலாளர் நாயகத்திற்கான அதிகாரங்களை தன் வயப்படுத்திக் கொள்ளும் விடயமாகும். இது கட்சிக்குள் தலைமைத்துவத்தின் சர்வாதிகாரப் போக்கிற்கே வழிவகுக்கப்போகிறது என முன்வைக்கப்படும் வாதத்தை இது வரை யாரும் தர்க்க ரீதியாக முறியடிக்கவில்லை.

எனவே, சமூகத்திற்கு நன்மைதரக்கூடிய விதத்தில் செயலாளர் நாயகத்தின் அதிகாரம் தொடர்பான சர்ச்சை தீர்க்கப்படவேண்டுமானால் அவ்வதிகாரத்தைப் பொறுப்பேற்கக் கூடிய ஆளுமை எது என்ற தேடலைத்தான் உயர்பீடம் செய்தாக வேண்டும். இது விடயத்தில் பிரதேசவாதம் பார்க்க முடியாது. தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவும் முடியாது. அதனைப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ளும் பக்குவம் முஸ்லிம் சமூகத்திற்கு இருக்கிறது. மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ஃரபின் மறைவுக்குப் பின்னர் கிழக்கில் விதைத்து வளர்த்தெடுக்க தமது கட்சியின் தலைமைப் பதவியில் முழு மனதுடன் றஊப் ஹக்கீமை அமர்த்தி அழகு பார்த்த கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் ஞானத்தைக் குறைத்து மதிப்பிடுவது அம் மதிப்பீட்டைச் செய்பவர்களுக்கே பாதகமாக அமையும்.

எனவே, மு.கா. தனக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பத்திலிருந்து சமூகம் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அவசரமாக வெளியேறியாக வேண்டும். இதிலும் மு.கா. தவறிழைக்குமானால் அதன் அரசியல் எதிரிகள் நிலைமையைத் தமக்குச் சாதமாக்கிக் கொள்வர். அது மு.கா. வை எந்த அளவு பலவீனப்படுத்தும் என்பதை எதிர்காலத் தேர்தல்கள் வெளிச்சம் போட்டுக் காட்டும். காலம் கடந்து ஞானம் கூறுபவர்களை நம்பாமல் தீர்க்கதரிசிகளை உள்வாங்கி மு.கா தன்னைப் பலப்படுத்திக் கொண்டு இழந்த அந்தஸ்தை மீண்டும் வெற்றி கொள்ளுமா என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியிருக்கிறது.

---

### மழை, வெள்ளம், மண்சரிவு:...

(முன் பக்கத் தொடர்)

இந்நிலையில் முற்றாக சேதமடைந்த வீடுகளுக்கு அதன் மதிப்பீட்டுக்கு ஏற்ப பெறுமதியும் பகுதியளவில் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு, ஒரு இலட்சத்திலிருந்து சேதத்திற்கு ஏற்ப பணம் வழங்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

நாட்டில் பெரும் உயிரிழப்பை ஏற்படுத்திய அரநாயக்க புளத்கொஹுபிட்டிய பிரதேசத்தில் மீளக் குடியேறுவதற்கு மக்கள் அச்சப்படுவதுடன் தமக்கு பாதுகாப்பான இடத்தில் வீடுகளை அமைத்துத் தருமாறு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அதே போன்று பாரிய சொத்து இழப்பை எதிர்கொண்ட கொலன்னாவை மக்கள் தமது வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான உதவிகள், இன்னுமொரு வெள்ள அனர்த்தம் வராதவாறான வேலைத் திட்டங்கள் என்பன பிரதேசத்தில் அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் கோரி நிற்கின்றனர்.

2004 சுனாமியைத் தொடர்ந்து இலங்கை வெள்ளம், மண்சரிவு போன்ற அனர்த்தங்களை படிப்படியாக எதிர்கொண்டு வருகின்றது. இந்நிலையில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான போதியளவான முகாமைத்துவ ஏற்பாடுகளை அரசாங்கம் கொண்டிருக்காமை தொடர்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனினும், அனர்த்தங்களில் மக்கள் பாதிக்கப்பட்டதற்கு தாழ்நிலப் பகுதிகள் நிரப்பப்பட்டு அங்கு அனுமதியற்ற வீடுகள் அமைக்கப்பட்டமையே காரணமாகுமென கூறப்படுகிறது.

இதேவேளை, தாழ்நிலப்பகுதியைப் பிழையற்ற வகையில் நிர்வகிப்பதற்கான கொள்கைத் திட்டமொன்று அவசியம். கொழும்பு நகரைப் பாதுகாப்பதற்கு அனுமதியற்ற கட்டடங்களை நிர்மாணிக்க வேண்டாம் என்றும் காணிகளை நிரப்ப வேண்டாம் எனவும் மக்களிடமும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமும் அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ் அனர்த்தத்திலிருந்து அரசும் மக்களும் பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டிய தேவையிருக்கிறது. இயற்கை அனர்த்தங்கள் தொடர்ந்தாலும் அதிலிருந்து சேதங்களைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அதற்கான ஏற்பாடுகளையும் கொண்டிருக்க வேண்டும். மக்களும் தமது இருப்பிடம் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும். இது அரசினதும் மக்களினதும் பொறுப்பும் கடமையும் என்பதை இருதரப்பும் உணர வேண்டும்.

---

### கிழக்குக்கும் மத்திக்கும்...

(முன் பக்கத் தொடர்)



இதேவேளை கடற்படை அதிகாரியை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் வகையில் கிழக்கு மாகாண முதலமைச்சர் பேசியதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் றுவன் விஜேயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் ஒரு முஸ்லிம் என்பதால் இனவாதிகள் சம்பூர் சம்பவத்தை பூதாகரமாக்கி இனக்குழப்பத்தை ஏற்படுத்த முனைகின்றனர் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம். அன்வர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கடற்படை அதிகாரியொருவர் கிழக்கு மாகாண முதலமைச்சரால் அவமதிக்கப்பட்டது தொடர்பாக கடற்படை வழங்கிய அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அவரது ஆலோசனைக்காகக் காத்திருப்பதாகவும் பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் அரசியல் மட்டத்தில் விவாதப் பொருளாக மாறியுள்ளதுடன் கிழக்கு மாகாண சபைக்கும் மத்திய அரசுக்கும் இடையிலான உறவில் கீறலை ஏற்படுத்தியுள்ளது. இது வரை மாகாண சபைக்கு வழங்கப்பட வேண்டிய பொலிஸ் அதிகாரம் வழங்கப்படாதிருக்கின்ற நிலையில் இச்சம்பவம் அதனை மேலும் கேள்விக்குட்படுத்தக் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப எம்மால் முடியுமா?

சிங்களத்தில்: விக்டர் ஐவன் (ராவய)
தமிழில்: எம்.எச்.எம். நியாஸ்

எமது நாட்டில் இனங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை அகற்றி, இன ஐக்கியத்தை முறையாகக் கட்டியெழுப்பும் முயற்சியில் எமது அரசியல் தலைவர்களும் எமது நாட்டின் படித்தவர்கள் எனப் பெயர் சூட்டப்பட்டவர்களும் தவறிவிட்டார்கள். ஐக்கியத்தைக் கட்டியெழுப்புதல் பற்றிய யதார்த்தமான அறிவு அவர்களுக்கு இல்லாமலிருப்பதே அதற்கான காரணமாகும். ஆரம்பத்தில் இலங்கைத் தேசிய சங்கத்தில் நாட்டின் அனைத்து இனங்களிலுமுள்ள தலைவர்கள் (எனப்படுவோர்) அங்கம் வகித்தனர். ஆனால், அந்தக் கூட்டமைப்பும் காலப்போக்கில் இடிந்து விழுந்து தரைமட்டமாகிவிட்டது. பெரும்பான்மை மற்றும் சிறுபான்மையினரிடையே, சிறுபான்மையினரது உரிமைகளைப் பாதுகாக்கும் லிபரல் முறைமை பற்றிய யதார்த்தமான அறிவின்மையே அதற்கான அடிப்படைக் காரணமாகும்.

கோல்புரூக் சீர்திருத்தத்தின் கீழ் 1833 இல் நிறைவேற்றுக்குழு மற்றும் அரசியலமைப்பு சட்ட முறைகள் பற்றிய குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அந்தக் குழுவில் உத்தியோகபூர்வ உறுப்பினர்கள் ஒன்பது பேர் மற்றும் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள் ஆறு பேர்களையும் கொண்ட அரசியலமைப்புச் சபை ஒன்று உருவாக்கப்பட்டது. அதில் உள்நாட்டு இன அடிப்படையில் சிங்கள, தமிழ் மற்றும் பறங்கியர் ஆகிய இனங்களில் இருந்து தலா ஒருவர் வீதம் மூன்று பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர். ஆனால், அந்த சபையில் கூட குறித்த இனங்களின் சனத்தொகையின் அடிப்படையில் நியமிக்கப்படாமல், அதன் ஆரம்பக் கட்டத்திற்குத் தேவையான இன ரீதியான பிரதிநிதிகள் மட்டுமே நியமிக்கப்பட்டனர்.

மேற்குறித்த அமைப்பின் உருவாக்கம் படிப்படியாக பாராளுமன்ற ஆட்சியின் பிரதிநிதித்துவத்தை நோக்கி செல்லக்கூடிய ஆரம்பக் கட்டமாகக் கருதப்பட்டது. அது மட்டுமன்றி, நாட்டின் இன ரீதியிலான வீதங்களின் அடிப்படையில் தேர்தல் தொகுதிகளை உருவாக்கவும் ஒரு காரணியாக இருக்க வேண்டும் எனக் கருதப்பட்டது. ஆனால், இவ்விரண்டு முயற்சிகளுக்கும் தமிழ்த் தலைவர்கள் பெரும் தடையாகச் செயற்பட்டனர்.

தமிழ்த் தலைவர்கள் 2:1 எனும் வீதத்தில் தேர்தல் தொகுதிகள் அமைக்கப்படல் வேண்டும் என்று வாதாடியபோது, சிறுபான்மையினர் எப்போதும் பிரச்சினைக்குள்ளாகும் வகையில் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் அமைய வேண்டும் என்ற சிந்தனையோடு சிங்களத் தலைவர்கள் செயற்பட்டனர். இவ்விரு சாராரது நிலைப்பாடுகளும் ஜனநாயகத்திற்கு ஏற்புடையதாக அமையவில்லை.

சிங்கள மக்களது சனத்தொகைக்கேற்ப



பிரதிநிதித்துவத்தை அம்மக்களுக்கு வழங்கி அதன் மூலம் சிறுபான்மையினருக்கு பிரச்சினை ஏற்படாத ஜனநாயக முறையொன்று உருவாக்கப்பட வேண்டியது பற்றிய யதார்த்தமான அறிவு தமிழ், முஸ்லிம் தலைவர்களுக்கிடையில் காணப்படவில்லை. அதே வேளை, சிறுபான்மை மக்களிடையே ஏற்பட்டு வரும் பயம், சந்தேகம் ஆகியவற்றைப் போக்கும் நோக்கிலான ஜனநாயக முறையொன்று பற்றிய யதார்த்தமான அறிவு சிங்களத் தலைவர்களிடம் காணப்படவில்லை. பொன்னம்பலம் முன்வைத்த ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை ஜனநாயக சிந்தனைக்கு முரணானது என்பது பற்றியும் சிறுபான்மையினரது அரசியல் பிரவேசத்திற்கு அந்தக் கோரிக்கை பெரும் முட்டுக்கட்டையாக அமையும் என்பது பற்றியும் தமிழ்த் தலைவர்கள் அறிந்திருக்கவில்லை.

1925 இல் உருவாகிய இந்தப் பிரிவினை, சுதந்திரம் கிடைக்கும் வரை (1948) நீடித்து அது ஒரு நிரந்தரமான பிரிவுக்கு வழிகோலியது. சிறுபான்மையினர் இப்பிரச்சினை பற்றி யதார்த்தபூர்வமாக சிந்திக்கத் தவறியது போன்று, பெரும்பான்மைத் தலைவர்களும் இது தொடர்பில் ஜனநாயகபூர்வமாகவும் யதார்த்தத்துடனும் சிந்திக்கத் தவறிவிட்டனர்.

இலங்கையில் இடது சாரியாகச் செயற்பட்டோரும் ஐக்கியத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில் தோல்வி கண்டனர். எனினும், இலங்கை இந்திய மார்க்ஸிஸவாதிகள் தேசத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில் பெரும் பங்காற்றினர். இலங்கையில் இனத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிக்குப் பங்களித்த ஒரேயொரு குழு, யாழ்ப்பாண இளைஞர் சங்கமாகும்.

அவர்கள் இந்து மதங்களுக்கிடையில் காணப்பட்ட குல பேதங்களுக்கு எதிராகவும் தமிழர் முஸ்லிம்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தவும் தீவிரமாக உழைத்தார்கள். எனினும், அவர்கள் இந்திய காங்கிரஸின் 'காபன்' பிரதியாக செயற்பட்டமையால் அவர்களது முயற்சியும் தோல்வி கண்டது.

சிறுபான்மையினரும் குல பேதம் காரணமாக துன்பத்திற்குள்ளானோரும் இலங்கைக்கு சுதந்திரம் தேவையில்லை என்று கருதினர். நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தால் பெரும்பான்மை ஆதிபத்தியத்தின் காரணமாக நாம் துன்பத்திற்குள்ளாவோம் என்று சிறுபான்மையினர் அச்சமுற்றதும் கரையார் மற்றும் வெள்ளாளர்களின் ஏகாதிபத்தியம் காரணமாக தாம் நெருக்கடிக்குள்ளாகுவோம் என்று தாழ்ந்த குலங்களில் இருந்தவர்கள் அச்சமடைந்ததுமே அதற்கான காரணமாகும். அதன் விளைவாக அவ்விரு சாராரும் டொனமூர் ஆணைக் குழுவிடமும் சோல்பரி ஆணைக்குழுவிடமும் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறினர். அதன்படி இந்த நாட்டில் சிறுபான்மையினரின் பிரச்சினைகள் மட்டுமன்றி, தாழ்த்தப்பட்ட இனங்களின் பிரச்சினைகளும் இருந்தன என்பது அதிலிருந்து தெளிவாகியது.

இறுதியாக, மேற்குறித்த இரு சாராரினதும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமலேயே நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரத்தின் பின்பும் அப்பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை. தேசிய அரசொன்றை அமைப்பதற்காக சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டாலும் அங்கு இனங்களுக்கிடையில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நேர்மையான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. சுதந்திரத்தின் பின் நாட்டின் எதிர்காலத் திட்டங்கள் வகுக்கப்படும்போது கூட அவ்விரு சாராரது பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

அதன் விளைவாக, சுதந்திரத்தின் பின்பும் அவ்விரு சாராரும் சம உரிமைகளோ கௌரவமோ அற்ற இரண்டாம் தரப் பிரஜைகளாகவே கணிக்கப்பட்டனர். அதன் அழுத்தங்கள் படிப்படியாக அதிகரித்ததன் விளைவாகவே அவர்கள் (சிறுபான்மையினரும் தாழ்த்தப்பட்டோரும்) கோபாவேசம் கொண்டு ஆயுதங்களைக் கையிலெடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

ஒரு துளி இரத்தமேனும் சிந்தாது சுதந்திரம் கிடைக்கப்பெற்ற இந்த நாட்டில் சுதந்திரம் கிடைத்து 30 ஆண்டுகளுக்குப் பின்னர், தொடர்ச்சியாக இரத்த ஆறு 30 ஆண்டுகளாக ஓடத் தொடங்கியது. இன ஐக்கியத்தைக் கட்டியெழுப்பாதுவிட்ட காரணத்தினால் தான் இந்த நிலைமைக்கு நாடு தள்ளப்பட்டது. இப்பிரச்சினைக்கு மதம் மட்டுமன்றிக் குலமும் ஒரு முக்கிய காரணமாக, கருதப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் ரோஹன விஜேவீர கரவர் குலத்தைச் சேர்ந்தவர்; அவருக்கு இரண்டாமவராக இருந்தவர் ஒலி குலத்தைச் சேர்ந்தவர். பிரபாகரன் கரையார் குலத்தைச் சேர்ந்தவர்; அவரது இரண்டாமவர் நளவர் குலத்தைச் சேர்ந்தவர். எனவே, அவர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்தபோது குலப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு மிகச் சிறந்த முன்மாதிரிகளாகத் திகழ்ந்துள்ளது தெளிவாகிறது.

சுதந்திரத்தின் பின்னரும் இனப் பிரச்சினைகளுக்கு மிகச் சரியான தீர்வுகூட காண முடியாது போன எம்மால் இப்போதாவது சரியான தீர்வு காண முடியுமா? எமது போராளிகளின் மந்த அறிவு காரணமாகவே அவர்கள் இரத்த ஆறை ஓட வைத்தார்கள் என்று நாம் அவர்களைக் குறை கூறுவோமானால், தற்போதுள்ள எமது அறிவாளிகளாவது இனப்பிரச்சினைக்கு நேர்மையான தீர்வுகளைக் கண்டு நாட்டில் இன ஐக்கியத்தை கட்டியெழுப்புவார்களா?

## இயற்கை அனர்த்தங்களும்...

(5 ஆம் பக்கத் தொடர்)

நிலச்சரிவு அனர்த்தம்: உயர் மலைப்பாங்கான பிரதேச நிலப்பகுதி, மண்பகுதி, களிமண் பகுதி, பாறைப் பகுதி, திணிவுப் பகுதி - மண்/நிலம், சேற்றுப் பகுதியானது தனது நிலைப்பிலிருந்து இயற்கையான அல்லது இயற்கை மற்றும் மானிட செயல்களால் பள்ளமான கீழ்ப்பகுதி நோக்கி புவியீர்ப்பு விசை காரணமாக திடீரென அல்லது மெதுவாக சரிவதை அல்லது கீழிறங்குவதை, வழுக்குவதை, நகர்வதை, அசைவதை, கிடையாகப் பரவுதலை, விழுவதை, பாய்வதை பொதுவாக நிலச்சரிவு எனக் கூறுகின்றோம். இது படிப்படியாக அல்லது திடீரென ஏற்படலாம்.

நிலச்சரிவுக்கான காரணிகளில் தொடர்ச்சியான கனத்த மழைவீழ்ச்சியும் மழை நீர் கீழ் நோக்கி வடிந்து ஓடாமல் மலைப் பகுதியில் ஊடுவடிதலும் (Infiltration) முக்கிய காரணங்களாகும். மேலும் உயர் பகுதிகளில் நீரைத் தேக்கி வைத்தல், முறையற்ற நீர்ப்பாசனம், நீர் மற்றும் மலசலக் குழாய்களின் கசிவுகள், மலைச்சரிவுகளில் தாவரங்களை அகற்றுதல் மற்றும் மூடு தாவர அழிப்பு, பொருத்தமற்ற விவசாய நடவடிக்கைகள், இயற்கை நீர் வழிகளை அடைத்தல், முறையற்ற நிர்மாண நடவடிக்கைகள், மலைப் பாங்கான பிரதேசங்களில் சுரங்கமறுத்தல் என்பனவும் முக்கியம் பெறுகின்றன.

நிலச்சரிவுக்கான முன் அறிகுறிகள்: நிலங்கள், பாதைகள், கட்டடங்கள், வீடுகளது சுவர்கள் மற்றும் கொங்கிரீட் பகுதிகளில் வெடிப்புக்கள் ஏற்படல், பெரிய வீடுகள், கட்டிடங்கள், அத்திவாரங்கள் சரிந்து காணப்படல், நீர்த்தாங்கிகள் மற்றும் மலசல கூடக் குழிகளில் ஏற்படும் கசிவுகளுடன் கூடிய வெடிப்புக்கள், பிரதேச மரங்கள் சரிந்து காணப்படல், மழைக் காலங்களில் திடீர் அசாதாரண ஊற்றுக்கள் தோன்றுதல், உயரமான பகுதிகளில் இருந்து கற்கள் உருண்டோடி விழுதல், பிரதேச உயிரினங்களது நடத்தையில் மாற்றங்கள் காணப்படுதல் முதலானவையாகும். நிலச்சரிவுக்கான காரணிகளைத் தூண்டாதிருப்பது நிலச்சரிவு தவிர்ப்பு ஆகும்.

அனர்த்த விழிப்புணர்வு: அனர்த்த விளைவுகளை குறைப்பதற்கு மாணவர்களையும் அனர்த்த வலய மக்களையும் இலக்குக் குழுக்களாகக் கொண்டு பின்வரும் விழிப்புணர்வுகளை மேற்கொள்ளலாம். இலங்கையின் காலநிலைக் கலண்டரின்படி மழைக் காலங்களையும் பிரதேசங்களையும் பரிச்சயப்படுத்துதல்.

தென் மேல் பருவ மழையானது மே முதல் செப்டம்பர் மாதம் வரை மத்திய, மேல், தென் (ஹம்பாந்தோட்டை பிரதேசம் தவிர்ந்து) சப்ரகமுவ மாகாணங்களில் பெய்யும். வட கீழ் பருவ மழையானது டிசெம்பர் முதல் பெப்ரவரி மாதம் வரை வடமேல் (மன்னார் பிரதேசம் ஓரளவு தவிர்ந்து), வட, வட மத்திய, கிழக்கு மாகாணங்களில் பெய்யும். மேற்காவுகை மழை மார்ச் முதல் ஏப்ரல் மாதம் வரையும் சிறு-சூறாவளி மழை ஒக்டோபர் முதல் நவம்பர் மாதம் வரை நாட்டில் ஆங்காங்கு பரவலாக பெய்யக் கூடியதாக இருக்கும். இவை தவிர, திடீர் தாழமுக்கம் நிலை கொண்டால் கனத்த மழை கிடைக்கும்.

மேலும் 'An Inconvenient Truth(2006), 'Home' (2009), 'A Thirsty World' (2012), மற்றும் 'Planet Ocean' (2012) போன்ற ஆவணக் காட்சிகள் மூலம் விழிப்பூட்டலாம். பொதுவாக ஒரு பிரதேசத்தில் ஓர் அனர்த்தத்தைத் தொடர்ந்து அது மீண்டும் ஏற்படலாம் அல்லது ஓர் அனர்த்தத்தைத் தொடர்ந்து அது சார்ந்த மற்றுமோர் அனர்த்தம் ஏற்படலாம். எனவே, அனர்த்த மீட்பின்போது Safety-first அடிப்படையில் குழுக்களாகவும் அறிவுபூர்வமாகவும் செயல்பட வேண்டும். எவ்வாறாயினும் அனர்த்தங்கள் மனித திறனுக்கு அப்பாற்பாட்டவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய இலக்கியத்திற்கு மனித வாழ்வியலை வசீகரிக்கும் ஆற்றல் நிறையவே இருக்கிறது



**கலாபூஷணம் பி.ரீ. அஸீஸ் கலை இலக்கியத் துறையில், குறிப்பாக நாட்டார் இலக்கியத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர். இவரது இலக்கியத் துறைசார் முயற்சிகளுக்காக கலாபூஷணம், தேசகீர்த்தி போன்ற பட்டங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர். கிண்ணியா பொதுச் சுகாதாரப் பணிமனையில் அரச அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், இன்றுவரை தொடர்ந்து எழுதி வருகிறார். கலை இலக்கியம் குறித்து அதிக ஈடுபாடு கொண்ட இவருடனான நேர்காணலை தொகுத்துத் தருகின்றோம்.**

**எங்கள் தேசம்:** நீங்கள் கூடுதலாக சிறுவர் இலக்கியத்திலும் நாட்டார் பாடல்களிலுமே அதிக கவனம் செலுத்துகிறீர்கள். அதற்கு ஏதேனும் காரணம் உள்ளதா?

**பி.ரீ. அஸீஸ்:** சிறுவர் இலக்கியம், நாட்டாரியல் என்பன இலக்கியத்துறையில் எனக்கு மிகவும் பிடித்த பகுதிகளாகும். சிறுவர் இலக்கியம் அவர்களது வாசிப்புத் திறனை அதிகரிப்பதற்கும் பாடும் திறனை வளர்த்தெடுப்பதற்கும் பெரிதும் துணை புரிகின்றன. அதுமட்டுமன்றி, எதிர்காலத்தில் சிறந்த சிறுவர் சமுதாயத்தினைக் கட்டியெழுப்புவதில் சிறுவர் இலக்கியங்களின் பங்களிப்பு அவசியமானதாக இருக்கிறது.

இன்று சிறுவர்கள் தமது மனம் விரும்பிய போக்கில் பயணிக்க விரும்புவதை எல்லோருமே அவதானிக்கலாம். இத்தகைய போக்கு சிறுவர்களை சீரழிவுகளில் சிக்க வைத்து அவர்களது எதிர்காலத்தையும் சிதைத்து விடலாம். இது சமூகத்திற்கும் நாட்டுக்கும் பெரும் சவாலாக அமையக் கூடும். இதனாலேயே அவர்களை நல்வழிப்படுத்தும் நல்ல நோக்கோடு சிறுவர் இலக்கியப் படைப்புகளை படைத்து வருகின்றேன். அது சிறுவர்களைச் சென்றடையும்போது அவர்களுடைய ஆற்றல், சிந்திக்கும் திறன், அறிவு விருத்தி என்பன விசாலமடையும் என்பது எனது அபிப்பிராயமாகும். குறிப்பாக, சிறுவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய, தமது வாழ்வில் அன்றாடம் எடுத்து நடக்க வேண்டிய விடயங்களே எனது படைப்புகளில் அதிகம் முக்கியத்துவம் பெறுகின்றன. இதனால் அவை அவர்களிடத்தில் நல்ல வரவேற்பையும் பெற்று வருகின்றன.

அடுத்து நாட்டாரியலும் எவரையும் இலகுவில் கவரக்கூடிய வசீகரத்தை கொண்டிருக்கிறது. நான் அதில் பெரிதும் நாட்டம் கொள்வதற்கு அதுவே பிரதான காரணமாகும்.

சில வரிகளில் சிந்திக்கத்தக்க சிறந்த கருத்துக்களை நாட்டாரியல் பதிவு செய்கிறது. எழுத்து வடிவம் அறிமுகமாகாத காலங்களில் தமது கருத்துக்களை நாட்டார் பாடல் மூலம் அக்காலத்து மக்கள் பாடியிருப்பதை இன்றைய ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. குடும்பம், தொழில், சோகம், மகிழ்ச்சி, விரகதாபம் என பல்வேறு பரிணாமங்களில் இது பரவலாக்கப்பட்டுள்ளது. இத்தகைய நாட்டாரியல் இலக்கியம் இன்று அழிவுக்குள்ளாகி சிதைவடைந்து செல்வதைத் தடுத்து நிறுத்தும் ஒரு நோக்கிலேயே அதில் அதிக நாட்டம் கொண்டு கவனம் செலுத்தி வருகின்றேன்.

**எங்கள் தேசம்:** நாட்டார் பாடல் எழுதுவதற்கு தனித்திறமை ஏதேனும் இருக்க வேண்டுமா? எல்லோருமே எழுத முடியுமா?

**பி.ரீ. அஸீஸ்:** நாட்டாரியல் கவிதைகள் எழுதுவதற்கு கிராமிய சூழலில் வாழ்ந்து பயணித்த அனுபவமே போதுமானதாகும். கிராமிய நேசமும் அம்மக்கள் மீது நமக்குள்ள பற்றுதலும் இப்பாடலுக்கு உயிரோட்டம் கொடுக்கும். பொதுவாக எல்லோராலும் நாட்டாரியல் பாடல்கள் எழுத முடியும். ஆனால், மேற்கூறப்பட்ட தன்மை அவர்களிடத்தில் காணப்பட்டால் அவை தனித்தன்மை பெற்று காலமெல்லாம் நிலைத்திருக்கும் தகுதியினை தனதாக்கிக் கொள்ளும்.

**எங்கள் தேசம்:** உங்களுடைய சிறுவர் பாடல்கள் எவ்வாறு சிறுவர்களிடம் சென்றடைகின்றன?

**பி.ரீ. அஸீஸ்:** எனது சிறுவர் பாடல்கள் பாலர் பாடசாலை, நூலகம் மற்றும் பாடசாலைகளுக்கூடாக சிறுவர்களைச் சென்றடைகின்றன. மேலும், சிறுவர் பாடல்களை விரும்புவோர் ஊடாகவும் வலைத்தளங்கள் ஊடாகவும் அவை உரியவர்களை சென்றடைகின்றன. எழுத்து, இசையோடு கூடிய பாடல் என இரு வகையாக இப்பாடல்களை உரியவர்களிடம் கொண்டு சேர்க்கின்றேன். எமது எழுத்துக்கள் பன்முகப்படுத்தப்பட்டவர்களிடம் போய் சேரும்போது தான் எமக்குள் ஆத்ம திருப்தி கிடைக்கிறது.

**எங்கள் தேசம்:** பாரம்பரியக் கலைகளில் ஒன்று நாட்டார் பாடல்களாகும். அது இன்று மருவி வருவதாகவே தெரிகிறது. இதனைப் பாதுகாக்க முடியுமா?

**பி.ரீ. அஸீஸ்:** இன்று மருவி வருகின்ற நாட்டாரியல் கலையைப் பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கை என்னுள் நிறைந்து கிடக்கிறது. அதற்காக பாரம்பரிய கலைகளுக்கான அமைப்பு ஒன்றினை நிறுவி அதன் மூலம் செயற்பட்டு வருகின்றேன். அதன் முதற் செயற்பாடே 'மனசெல்லாம் மகிழ்கிறது' என்ற எனது கிராமிய கவிகளின் தொகுப்பாகும். இதில் 160 க்கும் மேற்பட்ட பாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், மற்றுமொரு கிராமியப் பதிப்பினையும் செய்து வருகின்றேன். இத்தகைய முயற்சிகளுக்கு நிறைய ஆதரவு கிடைத்து வருகின்றது. இதன் மூலம் இக்கலையைப் பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்குள் உறுதியாக இருக்கின்றது.

**எங்கள் தேசம்:** நீங்கள் இதுவரை வெளியிட்டுள்ள நூல்கள்?

**பி.ரீ. அஸீஸ்:** 1972 ஆம் ஆண்டுகளில் நான் எழுத்துலகில் பிரவேசித்திருந்தாலும் 2011 ஆம் ஆண்டின் மறுபிரவேசமே என்னை இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்தது. இதுவரை முத்துக்கள் கையெழுத்துப் பத்திரிகை, உணர்வூட்டும் முத்துக்கள், சிறுவர் பாடல்கள், அஸீஸ் கவிதைகள், தலாட்டுப் பாடல்கள், நாட்டார் பாடல்கள் என 11 நூல்களை வெளியிட்டுள்ளேன். எனது அடுத்த படைப்பாக சின்னப் பாப்பா சிறுவர் பாடல் தொகுதியை எதிர்வரும் மாதங்களில் வெளியிடத் திட்டமிட்டுள்ளேன்.

இதில் சிறுவர் பாடல்கள், சுட்ட பழமே சுவை, அமுதே ஆகிய நூல்களுக்கு கிழக்கு மாகாண நூல் தெரிவுப் போட்டியில் சிறந்த நூலுக்கான விருதுகள் கிடைக்கப் பெற்றன. அதுமட்டுமன்றி, தேசிய ரீதியில் வேறு சில நூல்களுக்கு சான்றிதழ்களும் பரிசுகளும் கிடைத்துள்ளன.

# வழி தவறும் மாணவர்: பெற்றோர் கவனக் குவிப்பு அவசியம்

ஏ.எல். நௌபீர்



பிள்ளைகள் மீது பெற்றோருக்கு பாரிய பொறுப்புக்கள் இருக்கின்றன. அவர்களை நேரான வழியில் நடக்கச் செய்வது பெற்றோராகிய எமது தலையாய கடமையாகும். குழந்தைப் பருவத்தில் நாம் காட்டும் அக்கறையை அவர்கள் வளர்ந்து ஆளானதும் குறைத்து விடுகிறோம். பிள்ளைகளை தமது மனம் போன போக்கில் விடுவது இந்த சமூகத்தின் பலவீனமாக உள்ளது.

பிள்ளைகளுக்கு எங்களால் வழங்கப்படும் மிகப் பெரும் சொத்து கல்வியாகும். கல்வி வழங்குவதற்கு பாடசாலை ஒன்று தான் எமக்கான ஒரே நிறுவனம்.

பாடசாலையில் மாணவர்கள், ஆசிரியர், அதிபர் என பல மனித வளங்கள் உள்ளன. மாணவர்களே முக்கிய வளம்.

சம்பளம், பதவி உயர்வு, இடமாற்றம், பாடவேளைகள் என எல்லோருக்கும் பொதுவான பிரச்சினைகளை விடவும் வளர்ந்த மாணவர்களால் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆசிரியர்களை மன உளைச்சலுக்கு ஆளாக்குகின்றன.

குறிப்பாக ஆண்-பெண் கலவன் பாடசாலைகளில் தரம் 9, 10, 11, 12, 13 என வகுப்புகளில் உள்ள மாணவர்களே ஆசிரியர்களை மன உளைச்சலுக்கு அதிகம் ஆளாக்குகின்றனர். நேர்மையான, சமுதாய உணர்வுடைய, தமது பணியைச் சரியாகச் செய்ய முற்படும் ஆசிரியர்களால் பிள்ளைகளின் தவறான நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டு கற்பித்தலை மாத்திரம் செய்ய முடியாதிருக்கிறது. தாமும் தம்முடைய வேலையுமாக மாணவர்களின் பிறழ்வான நடத்தைகளைச் சுட்டித் திருத்த முற்படாது செயற்படும் ஆசிரியர்களும் இருக்கவே செய்கிறார்கள்.

ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு ஒழுக்கக் கோவை உண்டு. அதை யாரும் மீற முடியாது. அது ஒரு சமுதாய உருவாக்கப் பணி. தான் எந்த செல்வாக்கு மிக்கவரின் வாரிசானாலும் அவர் பாடசாலையின் ஒழுக்கத்தை மீற முடியாது. அதில் அதிபர்கள் கண்டிப்பாக இருப்பது, பின்னால் வரும் மாணவ சமுதாயத்தை சரியாக வழி நடத்தவே என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இதில் வரும் தொய்வு நிலை, பராமுகம் முழு சமுதாயத்தையுமே பாதித்து விடும் என்பதால் நாம் பாடசாலைக்கு சார்பாகவே நிற்க வேண்டும்.

அண்மைக் காலம் முதல் பாடசாலைகளில் அவதானிக்கப்பட்ட வளர்ந்த மாணவர்களின் நடத்தைகள்

☞ நேரம் தவறி வரும் மாணவர்கள் மதில் மேல் ஏறி உள்ளே வரல்.

☞ பெண் மாணவிகள் தங்களின் கைக் குட்டைக்குள் மறைத்து கைத்தொலைபேசியை எடுத்து வரல்.

☞ ஓய்வு நேரங்களில் வெறுமையான அறைகளில் மாணவனும் மாணவியும் தனியாக சந்தித்துக் கொள்ளல்.

☞ மாணவர்கள் கூட்டாக பாலியல் ரீதியான ஆங்கிலப் படங்களைத் தங்கள் கைத் தொலைபேசியில் பார்த்து ரசித்தல்.

☞ மாணவர்கள் கழுத்துப் பட்டி, அலங்கோலமான உடைகள் என்பவற்றைத் தகாத முறையில் அணிந்து வரல்.

☞ தான் காதலிப்பதாக எண்ணிக்கொண்ட மாணவியை அவளின் வீடு வரை நடந்து சென்று வழியனுப்பும் மாணவன்.

➡ 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய ஒலி



அப்றா இல்யாஸ்
மாவனல்ல

விண்மீனொளி வந்து சிறு கைகளில்
தவழ்ந்திடும்
அந்தக் கன்னங்களில் வடிவது
போல் ஒழுகும்
ஓட்டைக் குடிலுக்குள் இருந்தோர்
இதயவொலி
நாற்சுவருக்குள்ளே நாட்காலமாகும்
வரை
நாம் நடுநிசியெல்லாம் நடுங்கித்
துடித்து
வதைபடும் வகையினை எவரும்
அறியாரோ?

உண்டு உண்டென்று செல்வம்
சேர்த்து
உண்டு களித்து நீர் அடைய
நினைப்பது எதனையோ?
அவனேயறிவான்
ஒரு பொழுதேனும் அருந்த
வழியின்றி
ஒடுக்கப்பட்டோராய் வாழும் எம்
போன்றோரை
கண்ணெடுத்தும் பாராரோ
இப்பாரினில் திளைப்போர்

எண்ணும் எழுத்தும் எமக்கு ஓர்
எட்டாக்கனியே
இருந்தும் இந்தப்பழம்
புளிக்குமென்று
ஒதுங்கிப்போயிட முடியுமா என்
தோழர்களே?
மூச்சு விட்டு வாழ முடியாது
திறவுகோல்
இன்றி எம் மனங்களிலேயே
மடிந்து
மறைகிறது சிறகொடிந்த
ஆசைகள்...


இதயவறைகளில் இன்னல்களை
உருக்கிச் செய்த
இரும்புக் கோபுரங்களை இடித்
திட ஆறுதல்
கூறும் வெறும் ஆதி வார்த்தைகள்
மட்டும் போதாதே
ஏங்கும் ஏழைகளின் விழி நீர்
துடைத்திட
வெறும் கரங்கள் இரண்டும்
காணாதே
உதவிக் கரங்களை உவந்து
நீட்டிடுங்கள்...

இரத்தம் கொண்டு பிறந்த மானிடா
முஸ்லிம் எனும் நாமத்துக்கு
அர்த்தம்
கொண்டு நீ வாழ
நினைத்ததுண்டோ?
ஆடைமோகங் கொண்ட உன்
ஜாஹிலிய்யக் கண்களால்
அகதிகளை நோக்கி
விழித்திட எண்ணம்
கொண்டதுண்டோ?

தம் வயிறுகளை மட்டுமே நிரப்பிக்
கொண்ட கரங்களால் பிறர்
பசிப்பிணி
போக்கித்துயர் துடைக்க
முனைந்ததுண்டோ?
முயன்றிடு இன்றிலிருந்னேும்..
இவ் இதயவொலி ஒடுங்கி
இன்னும் ஓர்
இதயவொலி பிறக்க எத்தனிக்கும்
முன்னம்...!




# மழை வெள்ளத்தில் மிதந்து சென்ற கண்ணீர்ப் பூக்கள்



மனித நேயத்தை
உரத்துச் சொல்ல
எம் தேசத்திற்கு
மீண்டுமொரு மழை வெள்ளம்!

இன மத பேதம் மறந்து
நல்லிணக்கம் கைகோர்க்க
மீண்டுமொரு மழை வெள்ளம்!

அப்துல்லாஹ்வின் வீட்டில்
காமினியும்
கணேசின் வீட்டில்
பரீதும் உதவிக்கரம் நீட்ட
மழை வெள்ளத்தில் அடைந்து
போனது
வேற்றுமைகள்!

கொந்தராத்துக்காரனின்
கையூட்டலில் சோரம் போன
நம் தலைவனின் பெருமைகளை
மழை வெள்ளத்தில் மிதந்து
சென்ற
'போக்' குகளும்
காணாமல் போன வடிகான்களும்
சொல்லிச் சென்றன

போலி முலாமிட்ட
புன்னகையுடன்
நிவாரணப் பொதிகளுடனும்
நம் தலைவர்கள்

பழசையெல்லாம் மறந்து போன
தலைவரின் புன்னகையில்
கரைந்து போன
நமது மகா ஜனங்கள்

மக்களே!
நீங்கள் விழிக்காவிட்டால்
நம் தேசத்திற்கு
இன்னும் பல மழை
வெள்ளங்கள்
அழையா விருந்தாளிகளாய்
வந்து போகும்!

---

## வழி தவறும் மாணவர்:...

(18 ஆம் பக்கத் தொடர்)

☞ மாணவிகள் வரும் வழியில் கூட்டமாக அமர்ந்திருந்து அவர்களைத் தொல்லைப் படுத்தல்.

☞ ஆசிரியரை பரிகசித்தல்.

☞ தான் கற்பதில் நாட்டமில்லாதிருப்பதுடன் மற்ற சக மாணவர்களையும் கவனம் செலுத்துவதிலிருந்து தடுத்தல்.

☞ வேண்டுமென்றே தேவையான புத்தகங்களை எடுத்து வராதிருத்தல்.

☞ உயர்தரம் படிக்கும் மாணவர்களில் சிலர் தனியார் வகுப்புக்களுக்குப் போவதாக பெற்றோரிடம் சொல்லிவிட்டு சென்று, வகுப்புகளுக்குச் செல்லாது வேறு சில இடங்களில் பொழுதைக் கழித்துவிட்டு மீண்டும் வீட்டுக்கு வரல்.

இவற்றை விடவும் பாரதூரமான நடத்தைப் பிறழ்வுகளும் உண்டு.

இவற்றுக்கான முழுப் பொறுப்பும் பெற்றோரையே சாரும். தமது பிள்ளைகளைக் கவனிக்க வேண்டிய வயதில் கவனிக்காது விட்டதன் விளைவுகள் இன்று எமது சமூகத்தின் பண்பாட்டு விழுமியங்களை குழிதோண்டிப் புதைத்து வருகின்றன. ஆசிரியர்கள் மிகவும் மன வேதனையுடன் பணி செய்து வருகின்றனர். பெற்றோர்களோ "எம்மால் ஒன்றுமே செய்ய முடியாது" என்று அழுது புலம்புகிறார்கள்.

இதை இப்படியே விட்டு விடாது இளைய தலைமுறை மீது கவனம் குவிப்பது எம் தலையாய கடமை. சமூகத்தை ஒழுங்கமைக்க வேண்டிய பள்ளிக்கூடங்களின் நிலைமை சீர்கெட்டு விட்டால் எல்லோருமே கைசேதப்பட்டு விடுவோம்.

பெற்றோரே! தங்களின் பிள்ளைகள் மீதான பார்வையை அகல விரிப்போமாக.

---

## எதிர்க்கட்சித்...

(13 ஆம் பக்கத் தொடர்)

உண்மையில், 1971 ஆம் ஆண்டு பிரிவினைவாத யுத்தத்துடன் தொடர்புபட்ட வழக்குகளையும் தீர்ப்புகளையும் யார் வழி நடத்துகிறார் என்பதனைப் புரிந்து கொள்வதற்கு உயர்நீதிமன்ற நீதிபதிக்கும் இந்தியத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு தெளிவான சான்றாக அமைகிறது. தனது பெட்டிப் பாம்பாக வைத்துக் கொள்வதற்காகவே பாகிஸ்தானுடனான போரில் இந்தியா பங்களாதேஷை (அப்போதைய கிழக்குப் பாகிஸ்தானை) ஆதரித்தது. அன்று முதல், பங்களாதேஷ் அரசாங்கத்திற்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுப்பதுடன், பாகிஸ்தான் சார்பாக பங்களாதேஷ் திரும்பி விடக் கூடாது என்பதற்கான சகல முயற்சிகளையும் முன்னெடுத்து வருகிறது. பங்களாதேஷை தனக்கு விசுவாசமாக வைத்துக் கொள்வதற்கு இந்தியாவுக்கு தற்போதுள்ள ஒரே வழி என்ன விலை கொடுத்தாவது ஹசீனாவின் அரசாங்கத்தைத் தொடரச் செய்வதே. எனவே, ஹசீனாவின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சர்வதேச சக்திகளை இயங்க விடாமல் கவனித்துக் கொள்ளும் 'தார்மீகப் பொறுப்பை?' இந்தியா நிறைவேற்றிவருகின்றது.

சமீபத்தில் ஹஸீனா இந்தியாவுக்குச் சென்றபோது பங்களாதேஷ் பிரிவினைவாதப் போரில் இந்தியா செய்த உதவிக்காக ஞாபகார்த்த கிண்ணமொன்றை பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கினார். இதனைப் பெற்றுக் கொள்ளும்போது "உங்களது சுதந்திரப் போரில் நானும் பங்கேற்றதையிட்டு நான் அக மகிழ்ச்சியடைகிறேன்'' என மோடி பதில் கூறினார். மறுபுறும், இந்தியப் பிரதமருக்கு வழங்கப்பட்ட கிண்ணத்தில் பொறிக்கப்பட்டிருந்த புகைப்படமானது 1971 பிரிவினைவாதப் போரில் இந்தியாவிடம் பாகிஸ்தான் தோல்வியை ஒப்புக் கொள்ளும் காட்சியைக் கொண்டுள்ளது. அதில் இந்தியாவின் இராணுவ ஜெனரல்கள் புடைசூழ பாகிஸ்தான் இராணுவத் தளபதி உடன்படிக்கையில் கைச்சாத்திடும் காட்சி காணப்படுகிறது. அப்புகைப்படத்தில் 'ஜெனரல் யாக்கூப்' என்ற யூத மதத்தையுடைய இராணுவ ஜெனரலொருவரும் காணப்படுகிறார். பங்களாதேஷ் பிரிவினைவாதப் போரை வழிநடத்துவதிலும் அதற்கான சர்வதேச அபிமானத்தைப் பெற்றுக் கொடுப்பதிலும் ஜெனரல் யாக்கூப்பின் வகிபாகம் முக்கியமானது. இந்தியத் தூதுவரின் உயர் நீதிமன்ற நீதிபதியுடனான சந்திப்பும் ஹசீனா வாஜித் ஞாபகார்த்தக் கிண்ணத்தை பரிசளிக்கும் நிகழ்வும் ஜெனரல் யாக்கூப்பின் புகைப்படமும் பங்களாதேஷ் அரசியலின் பின்புலம் என்ன; எதிர்க்கட்சிகள் ஏன் பழிவாங்கப்படுகின்றன; அதன் பிராந்திய மற்றும் சர்வதேச பரிமாணங்கள் யாவை என்பன பற்றி ஏராளமான தகவல்களை பட்டவர்த்தனமாக தெரியப்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம்

மலர் : 15 இதழ் : 11 ஜூன் 01 - 14

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561
பெக்ஸ்: 0112 698771, 0112 686030
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com



Like us on facebook
எங்கள் தேசம் facebook/engalthesamjmf

அல்ஹஸனாத்
எங்கள் தேசம்
அகரம்
ப்ரபோதய
The Trend
ஆகியவற்றில் விளம்பரம் செய்ய
தொடர்பு கொள்ளுங்கள்
எம். ரஸ்லான் ராஸிக் - 077 832 1116
எம்.எச்.எம். ரிஸ்வான் - 077 741 2146

Spoken English for 16 year olds and above
Young Learners' Programme for Kids Age: 5 to 15 yrs
English | IT | Skills Development
at WARLTON ACADEMY Kandy
Pleasant learning environment
Special classes for workers and house wives
Recognized WARLTON certificates
Personality development focus
Excellent training with experts
Classrooms with LED screen & sound system
Video-Audio aided study zone
Fun & Activity-based teaching
Personal attention
Inclusive training
Free learning materials
Promising UK syllabus
Oxford teaching materials
Progress evaluation
More Information 081 22 00 333
585 Peradeniya Road Kandy
contact@warlton.lk
Near Koluwe Kade/ Dharmawickrama Girls' College


# இமயமலையின் உச்சிக்கு சென்ற முதலாவது இலங்கைப் பெண்



உலகில் மிக உயரமான இடமான இமய மலையில் ஏறிய முதலாவது இலங்கைப் பெண்ணாக ஜெயன்தி குருஉதும்பல சாதனை படைத்துள்ளார்.

இதன்மூலம் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இமய மலை ஏறிய பெண்ணாக அவர் வரலாற்றில் இடம் பிடித்துள்ளார்.

இவர் கடந்த ஏப்ரல் மாதம் முதல் இமயமலையை அண்மித்த இடத்தில் பல்வேறு பயிற்சிகளைப் பெற்று இந்த சவால் நிறைந்த பயணத்தில் குதித்திருந்தார்.

இமய மலை உலகில் மிகவும் உயரமான மலை என்பதுடன் கடல் மட்டத்தில் இருந்து 29,029 அடி உயரமானது என்பது குறிப்பிடத்தக்கது.




A/L இன் பின்னர்
UNIVERSITY OF WOLVERHAMPTON | London South Bank University | PEARSON
Sharpen your skills with BCAS today for Colourful Careers tomorrow
UGC அங்கீகாரம் கொண்ட UK Degree இனை இலங்கையிலேயே பூர்த்தி செய்யும் வாய்ப்பு
TVEC approved
BUSINESS MANAGEMENT MARKETING | HRM — HND Leading to BSc (Hons) from the UK Universities
QUANTITY SURVEYING — HND Leading to BSc (Hons) from the UK Universities
BIO-MEDICAL SCIENCE — HND Leading to BSc (Hons) from the UK Universities
CIVIL ENGINEERING — HND Leading to BEng / BSc (Hons) from the UK Universities
TELECOM ENGINEERING — HND Leading to BEng (Hons) from the UK Universities
COMPUTING — HND Leading to BSc (Hons) from the UK Universities
ELECTRICAL & ELECTRONIC ENGINEERING — HND Leading to BEng / BSc (Hons) from the UK Universities
LAW — HND Leading to LLB (Hons) from the UK Universities
BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES
CALL 077 266 0129 | 077 283 4595
City Campus 256, Galle Road, Colombo 6, Sri Lanka. 011 236 4459
Mount Campus 54, Galle Road, Mt. Lavinia, Sri Lanka. 011 272 8082
Kandy Campus 344, Peradeniya Road, Kandy Sri Lanka. 081 222 4731
Batti Campus 294, 1/4, Trinco Road, Batticaloa, Sri Lanka. 065 222 8451
Wayamba Campus 103, Dambulla Road, Kurunegala, Sri Lanka. 037 223 3339
Kalmunai Campus 392/1, Main Street, Kalmunai, Sri Lanka. 067 222 6899
Jaffna Campus 16, Point Pedro Road, Jaffna, Sri Lanka. 021 221 9910
17 YEARS
ISO 9001:2008 CERTIFIED
HOTLINE : 011 236 4458
info@bcas.lk | www.bcas.lk


# மாகாண மட்டத்தில் வீதி பாதுகாப்புக் குழு



வீதி விபத்துக்களை தடுப்பதற்காக மாகாண மட்டத்தில் வீதி பாதுகாப்புக் குழுவொன்றை உருவக்கி வருவதாக வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை கூறுகின்றது.

சில மாகாணங்களில் அக்குழு ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருட இறுதிக்குள் அனைத்து மாகாணங்களும் உள்ளடங்கும் விதமாக வீதிப் பாதுகாப்புக் குழு உருவாக்கப்படும் என்று வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் டாக்டர் சிசிர கொடகொட தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் சிறுநீரக நோயாளிகளுக்கான வைத்தியசாலை

## சீனா உதவி



இலங்கையில் சிறுநீரக நோயாளிகளுக்கான சிறப்பு வைத்தியசாலையொன்றை நிர்மாணிக்கும் பொருட்டு, 600 மில்லியன் யுவான்களை (சீன பணம்) சீனா வழங்கியுள்ளது.

அண்மையில் இதற்கான குறித்த நிதி வழங்கப்பட்டுள்ளதோடு, இது தொடர்பான இருதரப்பு ஒப்பந்தத்தில் சீனாவிலுள்ள இலங்கைத் தூதுவர் கருணாசேன கொடித்துவக்கு இலங்கையின் சார்பாக கையெழுத்திட்டுள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் சீன ஜனாதிபதி ஷீ ஜின் பிங்க் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பிரதி பலனாகவே இந்த உதவி கிட்டியுள்ளது.

# பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக தேசிய அடையாள அட்டை

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் அடையாள அட்டைகள் தொலைந்து அல்லது சேதமடைந்திருப்பின் இலவசமாக அவற்றைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக உள்விவகார அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவற்றுக்காக செலவாகும் முழுத் தொகையையும் அமைச்சு பொறுப்பேற்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றிலேயே வஜிர அபேவர்த்தன மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Published by: Just Media Foundation, Printed at AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.